15 வது வருடத்தில்

# விளம்பரம்™

VLAMBARAM™

☎ 416-282-8059 📠 416-282-4978

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு

WALK IN DENTAL CLINIC

Dr. Iru Vijayanathan

குடும்ப பல்வைத்தியர்

OPEN 7 DAYS

416-264-3232

3150 Eglinton Ave. E.

Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்

வீடு விற்க, வாங்க...

Raja M. Mahendran, P. Eng.

(Broker / Owner)



HOMELIFE HIGHER STANDARDS

HomeLife GTA Realty Inc.

1711 McCowan Rd. Suite #206, Toronto

Direct: 416.315.9397

OFFICE: 416.321.6969

Sales Agents Welcome

நதி 15 பாலம் 1 சமூக முன்னேற்றப் பத்திரிகை மாதமிருமுறை இலவசம் JANUARY 01, 2005

# அலைகளின் தாண்டவம்

## இந்து சமுத்திரம் கொந்தளிப்பில் பன்னிரண்டு நாடுகளில் 80ஆயிரம் பேர் பலி

*'சரித்திரத்திரல் இதுவரை நடந்த உதவிப் பணிகளிலேயே மிகப் பெரியதாக இது இருக்கப்போகிறது' ஐக்கிய நாடுகள் சபை அறிவிப்பு.*

*இந்தோனேசியத் தீவு ஒன்றில் நடந்த வரலாறு காணாத ஒரு பூகம்பத்தை தொடர்ந்து (Magnitude 9.0) இந்து சமுத்திரம் கொந்தளித்து ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கின்றது. ஞாயிற்றுக் கிழமை காலை 6:59 மணிக்கு, சுதேச நேரம் சுமத்திரா தீவின் நூறு மைல் நீள கடல் ஓரமாக இந்த பூமி அதிர்ச்சி ஏற்பட்டது. மிக நீண்ட நேரத்திற்கு பூமி அதிர்ந்தது என்று இதை கண்ட அந்த ஊர்வாசி ஒருவர் தகவல் தெரிவித்துள்ளார்.*


*இந்த பூகத்தை தொடர்ந்து, 100 அடி உயரத்திற்கு மிக மூர்க்கமாகக் கடல் எழுந்து கொந்தளிக்கத் தொடங்கியது. இந்த கொந்தளிப்பின் காரணமாக சில மணி நேரத்தில் இந்து சமுத்திரக் கடல், இலங்கையின் கிழக்கு மாகாணக் கிராமங்களுக்குள் திடீரென புகுந்து கிராமங்களை கொண்டு சென்றது.*

*காற்றோ, மழையோ இல்லாத காலை நேரம் 'மடமட' என்று திடீரென கடல் எழுந்து தம்மை நோக்கி வருவதைக் கண்டதும், என்ன? ஏது? என்று புரியாமல் அதிர்ச்சியடைந்த மக்கள் உயிரைப்பிடித்துக் கொண்டு ஓடத் தொடங்கினர். இந்த களேபரத்தில் குழந்தைகள் பலர் தவறிப்போய்விட்டனர்.*

*கிழக்கின் கரையோரக் கிராமங்களில் சுமார் நூறு மீற்றர் வரை புகுந்த கடல், மக்கள் உயிரையும், வீடுகள், பொருட்கள், விலங்குகள், மரங்கள், வயல்கள், வாகனங்கள் என்று எல்லாவற்றையும் அள்ளிச் சென்று விட்டது. கிழக்கிழலங்கையை முதலில் தாக்கிய இந்த Tsunami இலங்கையின் கடலோரப் பகுதிகள் அனைத்தையும் தொடாந்து தாக்கியது. இலங்கையில் இதுவரை 18,500 பேர் இந்த அழிவில் பலியாகியுள்ளனர் என்றும், இன்னும் பல 1,000 பேர்களைக் காணவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இறந்தவர்களின் உடல்கள் வைத்தியசாலைகளில் வைப்பதற்கு இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது.*

*கிழக்கு மாகாணத்தில் பல கிராமங்களிலும், நகரங்களிலும் பல அடி உயரத்திற்கு கடல் நீர் நின்று கொண்டிருக்கின்றது. சில இடங்களில் ஆறு அடி உயரத்திற்கு கடல் நீர் உள்ளது. இதே நிலையில் ஆங்காங்கே இலங்கையின் பல பாகங்களில் அடிக்கடி நில நடுக்கமும் ஏற்பட்டுள்ளதாயும், இதன் காரணமாகவும் பலர் இறந்து விட்டனர் என்று செய்திகள் வந்து கொண்டே உள்ளன. 'பல கிராமங்கள் அடியோடு அழிக்கப்பட்டு விட்டது' என்று திருகோணமலை மாவட்டச் செயலாளர் MDA Rodrigo செய்தியாளர்களிடம் கூறியுள்ளார். இலங்கையின் ஏனைய பகுதிகளான கொழும்பு, காலி, மாத்தளை,*

தொடர்ச்சி 16ம் பக்கம்




# கனடாவில் "விளம்பரம்" பத்திரிகையின் 15 வருட பாதையில்...




*மக்களின் சமூக வாழ்க்கை, பண்பாடு, அரசியல், அறிவியல் வளர்ச்சி முதலியனவற்றோடு பின்னிப் பிணைந்த பல்வேறு துறைகளில் ஊடகத்துறையும் ஒன்றாகும். ஊடகத்துறையானது மக்களைப் பற்றிய செய்திகளையும் மக்களைப் பற்றிய நிகழ்ச்சிகளையும் மக்களின் எண்ணங்கள், கருத்துகளையும், உலகில் நிகழ்ந்துவரும் மாற்றங்கள், வளர்ச்சிகள் போன்றனவற்றையும் நாளுக்கு நாள், நிமிடத்துக்கு நிமிடம் என எடுத்தியம்புகின்றது.*

*ஆரம்ப காலத்தில் எழுத்துமுறை உருவாகி, பின்னர் அச்சுத்துறை உருவானது. அச்சுத்துறையையும் அச்சுசாதனங்களையும் கொண்டு செய்திகள் பத்திரிகை வடிவில் வெளியிடப்பட்டன. என்ன விடயம் என்றாலும் அச்சிட்டே வெளியிடப்பட்டது. பத்திரிகை, சஞ்சிகை, விளம்பரங்கள், தகவல்கள் யாவும் அச்சிட்டே வெளியிடப்பட்டன. பத்திரிகை வடிவில் வெளியிடப்பட்டதனால் பத்திரிகைத்துறை என்று அழைக்கப்பட்டது.*

*பத்திரிகையின் வரலாறு ஏறக்குறைய ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னரே ஆரம்பமானது. அது அக்காலத்தில் ஐரோப்பிய வியாபாரிகளிடம் கையெழுத்துப் பிரதிகளாக புழக்கத்தில் இருந்தன. அதன்மூலம் அவர்கள் வியாபார செய்திகள் முதல் கொண்டு போர்க்கால செய்திகள் வரை கையெழுத்து பிரதிகளாக வெளியிட்டு வந்தார்கள். முதல் அச்செழுத்துப் பத்திரிகை ஜேர்மனியில் 1400 இன் பிற்பகுதியில் வெளிவரத் தொடங்கியது. இதனை பத்திரிகை என்று கூறுவதை விட அச்சடிக்கப்பட்ட விளம்பரம் அல்லது அறிவித்தல் என்று கூறலாம். பின்னர் ஆங்கிலேயர்களிடமிருந்து இவ்வாறான அச்சடிக்கப்பட்ட அறிவித்தல்கள் வரத்தொடங்கின. ஆங்கில மொழியில் முதலாவதாக வெளிவந்த அச்சடிக்கப்பட்ட பத்திரிகை "London Gazette" ஆகும். இது 1666 இல் இருந்து வரத்தொடங்கியது.*

*"1802 ஆம் ஆண்டு இலங்கை அரசிதழ் வெளிவந்தது. அதில் ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மூன்று மொழிகள் இடம்பெற்றன. தமிழ்ப் பகுதிக்கு "அரசாங்க வர்த்தமானி" என்று தனியே பெயரிட்டு இருந்தார்கள். தமிழ்கூறும் நல்லுலகம் முழுவதையும் எடுத்துக் கொண்டால் இந்த "அரசாங்க வர்த்தமானி" தான் முதல் தமிழ் இதழ்!" பின்னர் 1834ஆம் ஆண்டு முதல் மானிப்பாயில் அமெரிக்க மிசனரிமாரால் ஆரம்பிக்கப்பட்ட அச்சகத்திலிருந்து பெருந்தொகையான தமிழ்ப் பிரசுரங்கள் வெளிவரலாயின. இவர்களே இலங்கையின் முதலாவது தமிழ்ப் பத்திரிகையான 'உதயதாரகை' பத்திரிகையையும் 1841 ஆம் ஆண்டு தோற்றுவித்தனர்.*

*விஞ்ஞானத்தின் அதீத வளர்ச்சியின் அடுத்தபடியாக இலத்திரனியலின் உருவாக்கம் விரிவாக்கப்பட்டது.*

தொடர்ச்சி 16ம் பக்கம்

VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD, TORONTO, ON M1B 5P9, CANADA TEL: 416-282-8059, FAX: 416-282-4978 e-mail: vlambaram@sympatico.ca

# வருமான வரியைக் குறைத்துக்கட்ட முடியுமா?-2

பெரி. முத்துராமன்



வரித் திட்டமிடல் பற்றியும், வருமானவரி பற்றியும் சில அடிப்படைத் தகவல்களை இதற்கு முன்னர் பார்த்தோம். அதன் சில முக்கிய பகுதிகளை இப்போது நினைவு கூர்ந்து மேலே தொடர்வோம்.

வரித் திட்டமிடல் என்பது வருடம் முழுவதும் செய்ய வேண்டிய செயல். அதன் பலனை ஏப்ரல் மாதம் அறுவடை செய்யலாம். வருமான வரியைக் குறைக்க நீங்கள் செய்ய வேண்டிய செயல்களில் ஒன்று, தகுந்த ரசீதுகளையும், ஆவணங்களையும் அவ்வப் போது பெற்று, அதைப் பத்திரமாக வைத்துக் கொள்ளல் ஆகும். வரித்திட்டமிடலின் மூலம் வரியைக் குறைத்துக் கட்டுதல் வரி ஏமாற்றுதல் ஆகாது.

சில வருமானங்களுக்கு வரியே கிடையாது. வேலை நிறுத்தச் சம்பளம், வாகன விபத்துப் பணம், வாரிசுச் சொத்துக்கள், சிலவகை ஓய்வூதியப் பணம், முதன்மை இல்லத்தை விற்பதனால் கிடைக்கும் இலாபம், கனடா குழந்தை வரிச் சலுகை, GST/HST வரவு, சூதாட்டத்தின் மூலம் வரும் வருமானம் ஆகியவை சில உதாரணங்கள் ஆகும்.

வரிக்குள்ளாகும் வருமானத்திலும், வரியை முக்கியமாக இரு இனங்கள் குறைக்கின்றன.
ஒன்று கழிவுகள் (Deductions)
மற்றது வரவுகள் (Credits)
வரி வரவுகளிலும் (Tax credits) இருவகை உள்ளன. அவை முறையே :
1. திரும்பப் பெறக்கூடிய வரி வரவுகள் (Refundable credits)
2. திரும்பப் பெற முடியாத வரி வரவுகள் (Non refundable credits)
கழிவுகள் வருமானம் கூட உள்ளவர்களுக்கு வரியைக் குறையச் செய்கின்றன. வரிவரவுகள், கழிவுகளைப்போல் அல்லாமல் எல்லோருக்கும் சமமான நன்மைகளையே தருகின்றன.

திரும்பப் பெற முடியாத வரவுகள், உங்கள் வரியைப் பூஜ்யமாகக் குறைக்க உதவலாம். ஆனால் உங்களுக்கும் பணவரவை அல்லது அரசாங்கக் காசோலையைப் பெற்றுத் தராது. வரிக் குறைப்பை பற்றி பேசும் போது இரண்டுவித வீதங்களைப் பற்றிக் குறிப்பிடுவார்கள். சொற்களை அப்படியே தமிழ்ப்படுத்தாமல் கீழே தருகின்றேன்.
1. எவைக்டிவ் ராக்ஸ் ரேட் (Effective tax rate)
2.மார்ஜினல் ராக்ஸ் ரேட் (Marginal tax rate)

உங்களின் வரிக்குள்ளாகும் வருமானம் (Taxable income) $50,000 என்போம். இந்த வருமானத்தின் மீது $10,000 வரிக் கட்டியிருக்கிறீர்கள் என்றும் கொள்வோம். அப்படியானால் உங்களின் எபெக்டிவ் ராக்ஸ் ரேட் (Effective Tax Rate) 20 சதவீதம் ஆகும். எபெக்டிவ் ராக்ஸ் ரேட் என்பது கட்டிய வரிக்கும், வரிக்குள்ளாகும் வருமானத்துக்குமான விகிதாச்சாரமே.

மார்ஜினல் ராக்ஸ் ரேட் என்பதை கூடுதல் அல்லது இறுதியாகப் பெறப்பட்ட டொலருக்குச் செலுத்திய வரி என்று சொல்லலாம். உங்களின் வரிக்குள்ளாகும் வருமானம் 50,000 டொலர்கள், மாநில மற்றும் மத்திய அரசுகளின் மொத்த (மார்ஜினல்) வரி 38சதவீதம் என்று கொள்வோம். அப்படியானால் நீங்கள் அதிகப் படியாகச் சம்பாதிக்கும் ஒவ்வொரு டொலரிலும் 62 சதத்தை நீங்கள் வைத்துக் கொள்கிறீர்கள். 38 சதத்தை வரியாகச் செலுத்துகிறீர்கள். உங்களுடைய மார்ஜினல் ராக்ஸ் ரேட் 38 சதவீதமாக இருக்குமானால் உங்களுக்குக் கிடைக்கும் ஒவ்வொரு டொலர் கழிவிலும் நீங்கள் 38 சதத்தை சேமிக்கிறீர்கள் என்று பொருள்.

எபெக்டிவ் ராக்ஸ் ரேட் குறைய இருக்கும் போது உங்களுக்கு மேலும் சம்பாதிக்க ஒரு தூண்டுதல் அல்லது உந்துதல் கிடைக்கின்றது. ஆனால் வரிகளில் மிகுந்த இலாபத்தைப் பெற இந்தக் கட்டுரைத் தொடரில் நமது கவனம் நீங்கள் கட்டும் மார்ஜினல் ராக்ஸ் ரேட்டின் மேலேயே இருக்கும்.

உங்களுக்குக் கழிவுகள் அதிகமாக இருக்குமானால், உங்கள் மார்ஜினல் ராக்ஸ் ரேட்டும் மாறும். வேறு விதமாகச் சொல்வதானால், நீங்கள் எந்த வரி அடைப்புக் குறிக்குள் வருகிறீர்கள் என்பதையே மார்ஜினல் ராக்ஸ் ரேட் என்று சொல்லலாம்.

வரிகளைக் குறைக்க மிகவும் பயன்படும் உபாயம் கழிவுகள் மற்றும் வரவுகளை முடிந்த வரை அதிகப்படுத்தி வரிக்குள்ளாகும் வருமானத்தைக் குறைப்பதே ஆகும். சரி இது எவ்வாறு சாத்தியம் என்ற அடுத்த கேள்வி எழுகின்றது.

வேலையாக இருந்தாலும், சொந்தத்தில் முழுநேரமாகவோ, பகுதிநேரமாகவோ சொந்தத் தொழில் ஒன்றைச்செய்து வருதல், கழிவுகளைக் கூட்டி வரிக்குள்ளாகும் வருமானத்தைக் குறைக்கப் பயன்படும். சொந்தத் தொழிலை வீட்டிலிருந்தே செய்து வருதல் மேலும் வரிக்குள்ளாகும் வருமானத்தைக் குறைத்து, குறைந்த வரியை சட்ட ரீதியாகக் கட்ட பெரிதும் உதவும். ஒரு உதாரணத்தின் மூலம் இதை விளக்குவோம்.

ஒருவரின் சம்பள வருமானம் $50,000, பகுதிநேர சொந்தத் தொழில் ஒன்றையும், வீட்டையே அலுவலகமாக வைத்துச் செய்கிறார். அந்தச் சொந்தத் தொழிலில் வருமானம் $3,000. செலவுகள் $20,000. எனவே சொந்தத் தொழிலில் நிகர நட்டம் $17,000. இந்த $17,000 நட்டத்தை சம்பள வருமானத்திலிருந்து கழித்துக் கொள்ளலாம். அப்படியானால் அவருடைய வரிக்குள்ளாகும் வருமானம் $33,000 (50,000 - 17,000) மட்டுமே. பல செலவுகளைச் சொந்தத் தொழில் செலவுகளாக காட்ட முடியும்.

மீண்டும் ஒரு உதாரணத்தின் மூலம் இதை விளக்குவோம்.

## செய்யும் தொழிலில் வெற்றி பெற

**வரிகளைக் குறைக்க மிகவும் பயன்படும் உபாயம் கழிவுகள் மற்றும் வரவு களை முடிந்த வரை அதிகப்படுத்தி வரிக்குள் ளாகும் வருமானத்தைக் குறைப்பதே ஆகும்.**

ராணி ஒரு கொம்பியூட்டர் புரோகிராமர், வீட்டிலிருந்த (பல கம்பெனிகளுக்கு) வேலை செய்கிறார். அவருடைய வீடு 2000 சதுர அடி. அதில் அவருடயை அலுவலகம் 200 சதுரஅடி (உள்ள ஒரு அறை). அப்படியானால் வீட்டுக்காகும் செலவில் 10 சதவீதத்தை வருமான வரிக்கான செலவாகப் பயன்படுத்தலாம். அத்தகைய செலவுகள் மோட்கேஜ் வட்டி அல்லது வீட்டு வாடகை, வீட்டு இன்ஸ்ரன்ஸ் மற்றும் மின்சாரம், தண்ணீர் போன்ற செலவுகளாகவும் இருக்கலாம்.

இன்னும் சொல்லப் போனால் தோட்டச் செலவுகள், பனி (Snow) தள்ளிய செலவுகள், சிறு திருத்தவேலைகள் போன்றவற்றிலும் பத்தில் ஒரு பங்கைச் செலவாகக் கணக்குக் காண்பிக்கலாம். ஆனால் எல்லாவற்றிற்கும் ரசீதுகளை கோப்பில் (file) வைத்திருக்க வேண்டும். வெறுமனே செலவுகளை மதிப்பிட்டுக் கணக்கில் காட்டுதல் சரியான முறை அல்ல. சுருக்கமாகச் சொல்லப் போனால், சொந்தத் தொழில் செய்யும் போது செலவுகள், வருமானத்தை விட கூடுதலாக இருக்குமேயானால் நட்டம் வருகின்றது. இந்த நட்டத்தை மற்ற வருமானங்களிலிருந்தும் கழித்துக் கொள்ளலாம்.

முன்பெல்லாம் இவ்வாறு கழிக்கலாமா என்று தீர்மானிக்க வருமான வரித்துறை (ரெவினியூ கனடா - CCRA [Canada Customs & Revenue Agency] ) ஒரே ஒரு கேள்வியைத் தான் கேட்டது. அது "நியாயமாகப் பார்த்தால் இந்தத் தொழில் ஓரளவுக்கு இலாபந் தரக்கூடியதா? (a reasonable expectation of profit) என்பதே அந்தக் கேள்வி. தகுந்த வியாபார முன்னறிவு இன்றி ஒரு தொழிலை ஆரம்பித்து நட்டத்தைத் தேடிக் கொண்ட பலபேருக்கு இக்கேள்வி இடையூறையே தந்தது. இந்தக் கேள்வியின் அடிப்படையில் நியாயமான பலன்களைப் பலபேருக்கு ரெவின்யூ கனடா - CRA தர மறுத்தது. ஆனால் இப்போக்கு 2002 ஆம் ஆண்டில் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பினால் மாறத் துவங்கியுள்ளது.

"இலாபந் தரக்கூடியதா?" என்பது இப்போது ஒரே ஒரு கேள்வி அல்ல. செலவுகளை அனுமதிக்கத் தீர்மானிக்கப் பயன்படுத்தப்படும் கேள்விகளில் ஒன்றாக மாறியுள்ளது. சுப்ரீம் நீதி மன்றம், வரி கொடுப்பவரின் வியாபார நுட்ப அறிவு அல்லது அறிவின்மை, செலவுகளைத் தொழிலில் அனுமதிக்க (அதன் காரணமாக வரும் நட்டத்தையும் அனுமதிக்க) ஒரு காரணியாகப் பயன்படுத்தக் கூடாது என்று தீர்ப்பு வழங்கியிருக்கின்றது. இது சொந்தத் தொழிலை முழுநேரமாகவோ, பகுதி நேரமாகவோ செய்து வரி செலுத்துபவர்களுக்கு மகிழ்ச்சி தரும் விடயமாகும்.

வியாபார நட்டத்தை, முதலில் எந்த வருடம் வந்ததோ, அந்த வருடத்தில் வரும் மற்ற வருமானங்களிலிருந்து குறைத்துக் கொள்ளலாம். மற்ற வருமானம் என்பது, சம்பள வருமானமாகவோ, வட்டி, டிவிடெண்ட் (Dividend) வருமானமாகவோ அல்லது சொத்து ஆதாயமாகவோ (Capital gain) கூட இருக்கலாம். அந்த வருடமே இந்த நட்டத்தை மற்ற வருமானங்களிலிருந்து கழித்துக் கொள்ள முடியவில்லை என்றால், அந்த நட்டத்தை பின்னோக்கி 3 வருடங்களிலோ, அல்லது எதிர்வரும் ஏழு வருடங்களிலோ கழித்துக் கொள்ளலாம்.

இதை ஒரு உதாரணத்தின் மூலம் விளக்குவோம். ராஜாவின் சம்பள வருமான விபரம்; ஆண்டு 2000 இல் $50,000. ஆண்டு 2001இல் $40,000. 2002இல் இவர் வேலையை விட்டு முழுநேரமாக ஒரு தொழிலைத் தொடங்கினார். அந்தத் தொழிலில் வந்த வருமானமோ $30,000. செலவோ $130,000. நிகர நட்டம் $100,000. இந்த $100,000 நட்டத்தை 2000, 2001இல் வந்த சம்பள வருமானமான $90,000 இலிருந்து கழித்துக் கொண்டு, ஏற்கனவே செலுத்திய வரியைத் திரும்பப் பெறலாம். மேலும் மீதமுள்ள $10,000 நட்டத்தை 2003 இல் அல்லது அதற்குப் பிறகு வரும் 6 வருடங்களில் கழித்து வரியைக் குறைத்துக் கொள்ளலாம். அல்லது முழு $100,000 நட்டத்தையுமே 2003 இல் அல்லது அதற்குப் பிறகு வரும் ஆறு வருடங்களில் கழித்து வரியைக் குறைத்துக் கொள்ளலாம். சுருக்கமாகச் சொன்னால், எந்த வருடம் கழித்தால் அதிக வரிலாபம் கிடைக்கும் என்று கணக்கிட்டு அதற்கேற்ப கழித்துக் கொள்ளலாம்.

சொந்த தொழில் செய்யும் போது கழிவுகளைத் தரக்கூடிய சில வகைகளைப் பார்ப்போம். கார் மற்றும் கார் செலவுகள், கொம்பியூட்டர், ஸ்டேஷனரி, டெலிபோன் செலவுகள், கிரடிட்கார்ட் வட்டி முதலியன. சொந்த தொழிலில் வரும் நட்டம் மற்ற வகைகளிலிருந்து வரும் வருமானத்தில் சரி செய்ய முடியாத நிலையில் "வீட்டிலிருக்கும் அலுவலகத்திற்"கான செலவுகளை மட்டும் வரப்போகும் ஆண்டுகளின் வருமானத்திலிருந்தே கழிக்க வேண்டியிருக்கும். "வீட்டிலிருக்கும் அலுவலகம்" க்கான செலவுகள் என்று எதைக் குறிப்பிடுகிறோம் என்றால் வீட்டு வாடகை அல்லது



தொடர்ச்சி 08ஆம் பக்கம்

வரித்திட்டமிடல், நிதி ஆலோசனைகள், கணக்கியல் மற்றும் வருமானவரிச் சேவை களுக்கு
பெரி. முத்துராமன் Successbizsolution அழ. முத்துராமன் 416-430-0623

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்க்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ்.
விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram, P.O. Box 37527, 31 Tapscott Road, Toronto, ON M1B 5P9, Canada
TEL: 416-282-8059, FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca

HOME INSPECTION
• வீடு தரமானது என உறுதிப்படுத்திக் கொள்ள... • வீடு பராமரிப்பு பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள...
ந. தயாபரன்
Certified Inspection Specialist
Expert Building Inspections LTD.
• Exceed the Standards • Industry Canada Registered • Professionals Serving the GTA • On site Report
24 /7 - Toll Free - 1.866.373.3315 416.727.8336

## அலைகளின் தாண்டவம்...

1ம் பக்கத் தொடர்ச்சி...

வடமராட்சி பகுதிகளிலும் உயிர் இழப்புகளும், பாதிப்புகளும் ஏற்பட்டுள்ளன. வடமராட்சிக் கடலின் கடல் மட்டம் திடீர் என்று அதி பயங்கர வேகத்துடன் அதிகரித்து, மிக வேகமாக வடமராட்சிக்குள் புகுந்து சில கணநேரத்தில் ஆயிரக்கணக்கான உயிர்களை பலிவாங்கியுள்ளது. ஒரு பனை உயரத்துக்கும் மேலாக கடல் எழுந்து வந்தாக பாதிக்கப்பட்டவர்கள் கூறியுள்ளனர்.

இலங்கையில் மட்டுமல்லாது இந்த கடல் கொந்தளிப்பு மலேசியா, தாய்லாந்து, இந்தியா போன்ற நாடுகளையும் பாதித்துள்ளது. இங்கெல்லாம் பல ஆயிரக்கணக்கான மக்கள் இறந்துள்ளனர் என்றும், பல 1,000 பேர் காயம் அடைந்துள்ளனர் எனவும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியா முழுவதுமாக பத்தாயிரம் பேர் அளவில் இறந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தென் கிழக்கு ஆசியாவை அதிரவைத்துள்ள இந்த நிகழ்சியைப்பற்றி, BBC, MSN, CNN என எல்லா இணையத்தளங்களும், உலக தொலைக் காட்சி நிறுவனங்களும் புதிய தகவல்களை வெளியிட்டுக் கொண்டிக்-

**ஒரு செய்தி விமர்சனம்**
**செழியன்**

கிருன்றன. தென் கிழக்கு ஆசியாவில் இதுவரை இறந்தவர்களின் ஒட்டுமொத்தமான எண்ணிக்கை 60,000 த்தை கடந்துவிட்ட நிலையில் இந்த எண்ணிக்கை இன்னமும் அதிகரிக்கும் என்று கணிப்பிடப்பட்டுள்ளது.

'பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்குங்கள்' என்று பரிசுத்த பாப்பரசர் தனது பிரசங்கத்தில் நா தழுதழுக்க கூறியுள்ளார்.

இந்தியா உடனடியாக நான்கு கப்பல் உணவையும், மீட்புப் பணிக்காக ஆறு கடற்படைக் கப்பல்களையும், ஆறு ஹெலிகொப்டர்களையும் வழங்கியுள்ளது. அத்தோடு மருத்துவ உதவிக்காக 25 பேர் அடங்கிய மருத்துவ குழு ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளது. அவர்களில் சிலர் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மூதூர், ஈச்சிலைப்பற்று, குச்சவெளி இடங்களுக்கு பணியாற்றச் சென்றுள்ளனர்.

ஐரோப்பிய யூனியன், நான்கு மில்லியன் யூரோ இலங்கைக்கு வழங்கியுள்ளது. நோர்வேயும் 160மில்லியன் ரூபாய்களை உதவியாக வழங்குவதாக அறிவித்துள்ளது. கனடா முதலில் உடனடியாக ஒரு மில்லியன் டொலரை வழங்குவதாக அறிவித்திருந்த போதும், பின்னர் நான்கு மில்லியன் டொலர்களாக உடனடி உதவியை உயர்த்தியுள்ளது. வழங்குவதாக அறிவித்துள்ளது. அத்தோடு ஜப்பானும் இலங்கைக்கு உதவுவதாக அறிவித்துள்ளது.



தமிழீழ விடுதலைப் புலிகள் தேசிய அவசரகால நிலையை பிரகடனம் செய்துள்ளனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கான உலக

**தொடர்ச்சி 6ம் பக்கம்**

### ஒரு விஞ்ஞான விளக்கம்

# கடல் அன்னையின் சீற்றம்சுனாமி (Tsunami) அலை

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும் - குறள்

இக்குறளுக்கு உரை எழுதும் கலைஞர், எவ்வகையான செயற்கை நிலையை அமைத்திட முனைந்தாலும் இயற்கை நிலையே முதன்மையாக வந்து நிற்பதால் இயற்கையை விட வலிமையானவை வேறு ஒன்றும் இல்லை என்று கூறுகிறார். இயற்கையின் வலிமையையும் எங்கள் இயலாமையையும் கடந்த டிசம்பர் மாதம் 26ஆம் திகதி நாங்கள் உணர்ந்து கொண்டோம்.


இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட அனர்த்தத்தால் 60 ஆயிரத்திற்கு மேற்பட்ட, மக்களை தமிழ் ஈழம் உட்பட ஆசியாவில் உள்ள பல நாடுகளில் பலிகொண்ட பூமி அதிர்ச்சி மற்றும் சுனாமி அலைகளை பற்றி ஆராய்வதே எமது நோக்கம் ஆகும்.

**சுனாமி (Tsunami) அலை என்றால் என்ன?**

இது சமுத்திரத்தில் திடீர் என அதிக அளவு நீர் இடப்பெயர்ச்சி செய்யப்படுவதால் உருவாகி தொடர்ச்சியாகவும் விரைவாகவும் வரும் மிகவும் நீண்ட அலைகள் ஆகும். இவை பெரும்பாலும் பூமி அதிர்ச்சி, எரிமலை வெடிப்பு அல்லது வானில் இருந்து விழும் மிகப்பெரிய எரிகற்களின் அதிர்வு என்பவற்றால் கடலில் ஏற்படுகிறது.

இவை சாதாரணமாக பசுபிக் சமுத்திரத்திலேயே உருவாகின்றன. இவற்றால் அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகள் அடிக்கடி தாக்கப்படுகின்றன. இந்த சுனாமி என்ற பெயரும் ஜப்பானிய மொழியில் இருந்து தான் வந்தது. TSU - சு என்றால் துறைமுகம், NAMI - னாமி என்றால் அலை ஆகும். அதாவது சுனாமியை சரியாக தமிழில் மொழிபெயர்த்தால் 'துறைமுக அலை' என்றே கூறவேண்டும். ஆனால் தமிழில் ஏற்கனவே உள்ள "கடல் கொந்தளிப்பு" என்ற சொல் சுனாமி அலையையே குறிப்பதாக கொள்ளலாம். பலர் இச் சுனாமி அலையை தவறாக சமுத்திரத்தில் ஏற்படும் பேரலை (Tidal wave) உடன் ஒப்பிடுவார்கள். சமுத்திரத்தில் ஏற்படும் பேரலைகள் சூரிய சந்திரனின் ஈர்ப்பு சக்தியால் (Gravitational pull of the sun and moon) ஏற்படுகின்றன. சுனாமி அலைக்கும் சூரிய சந்திரனின் ஈர்ப்பு சக்திக்கோ அல்லது கால நிலைக்கோ எதுவித தொடர்பும் இல்லை.

சுனாமி அலைகள் மணித்தியாலத்திற்கு 800 கிலோமீற்றர் (500 மைல்கள்) தூரம் பாயந்து செல்லக்கூடியன. (உதாரணமாக லொஸ் ஏஞ்சலீஸ் (Los Angeles) ஒரு பூமி அதிர்ச்சி ஏற்பட்டால் அதனால் ஏற்படும் சுனாமி அலை ரோக்கியோ (Tokyo) யை தாக்குவதற்கு ஒருவர் லொஸ் ஏஞ்சலீஸ் இல் இருந்து ரோக்கியோவிற்கு ஜெட் விமானத்தில் செல்ல எடுக்கும் நேரத்திலும் குறைந்த நேரமே எடுக்கும்.) இச் சுனாமி அலை நடுக்கடலில் செல்லும்போது 1 மீற்றர் உயரத்திற்கும் குறைவாகவே இருக்கும்.




சுனாமி அலை இவ்வளவு விரைவாக சென்றாலும் அது நடுக்கடலில் செல்லும் போது ஒருவித தடயங்களையும் காட்டாது. அது நடுக்கடலில் இருக்கும் ஒரு கப்பலிற்கு கீழால் போகும் போது அக்கப்பலில் இருப்பவர்கள் அதை உணரமாட்டார்கள். அவர்கள் பாதுகாப்பாக கப்பலில் தமது பிரயாணத்தை தொடர்வார்கள். இதனாலேயே வானில் சுற்றும் காலநிலைகளை அவதானிக்கும் செய்மதிகளால் கடலில் செல்லும் இந்த சுனாமி அலைகளை அவதானிக்க முடியாது.

சுனாமி அலை ஆழமான கடலை விட்டு கரைக்கு வரும்போது தான் தனது பலத்தை காட்டும். ஆழமற்ற கடல் பகுதி சுனாமி அலையின் வேகத்தை குறையச் செய்து அவ் அலையின் உயரத்தை மிகவும் உயர்த்தும். ஒரு மீற்றரிலும் குறைவான உயரத்தில் நடுக்கடலில் வந்த சுனாமி அலை ஆழம் குறைந்த கரைப்பகுதியை அண்மிக்கும் போது சாதாரணமாக 30 மீற்றர் உயரத்திற்கு வளர்ந்து விடும். அலாஸ்காவில் (Alaska) யூலை 9, 1958 இல் ஏற்பட்ட நிலச்சரிவால் உருவாகிய சுனாமி அலை கரையை அடையும் போது 518 மீற்றர் உயரத்திற்கு எழுந்து பாய்ந்தது.

சுனாமி அலை கரையை தாக்கும்போது அதற்கு பாரிய சக்தி இருக்கும். ஒரு 20 தொன் எடையுள்ள பாறாங்கல்லையும் லாவகமாக தூக்கி பல நூறு மீற்றர் தூரத்திற்கு எறியக்கூடியது. இந்த சுனாமி அலை. பொதுவாக இவ் அலைகள் நிலத்தில் 2 அல்லது 3 கிலோமீற்றர் தூரம் மட்டுமே செல்லக்கூடியவை. ஆனால் அவற்றின் பலத்தால் அவ்வளவு தூரத்திலும் உள்ள கட்டிடங்கள், மரங்கள் எல்லாவற்றையும் தரைமட்டமாக்கி அழிக்கக் கூடியன.

**சுனாமி அலை எவ்வாறு உருவாகிறது?**

சுனாமி அலை பூமி அதிர்ச்சி, எரிமலை வெடிப்பு, எரிகற்கள் விழுதல், நிலச்சரிவு போன்றவற்றால் உருவாகும் அதிர்வுகளால் கடலில் உருவாகின்றன. எம் உடன் பிறப்புக்களை அழித்த சுனாமி அலை எவ்வாறு உருவாகியது என பார்ப்போம். பூமி மூன்று படைகளால் ஆனது. நடுவில் இருக்கும் பகுதி மத்தியபகுதி (Core) எனப்படும். அடுத்தது உருகிய மேல்பகுதி (Molten mantle). மேல் உள்ளது. நாங்கள் வசிக்கும் கடினமான மேற்பகுதி (Crust). இந்தக் கடினமான மேற்பகுதி முக்கியமான 12 தட்டுக்களால் (Tectonic Plate) ஆனது.

இத்தட்டுக்கள் உருகிய மேற்பகுதியில் மிதந்துகொண்டு இருப்பதால் எப்போதும் நகர்ந்து கொண்டே இருக்கும். இவை வருடம் ஒன்றுக்கு 10 சதமீற்றர் (cm) மட்டுமே நகருவதால் நாங்கள் அவற்றை உணரமுடிவதில்லை. இத்தட்டுக்கள் Tectonic Plates என அழைக்கப்படும். இரண்டு அருகருகே இருக்கும் தட்டுக்கள் திடீரென அசைவதால் அவை ஒன்றுக்கொன்று எதிர்திசையில் நகரும். இதுவே சாதாரண பூமி அதிர்ச்சியாகும். இவ்விரு தட்டுக்களும் திடீரென அசையும் போது ஒருதட்டின் கீழ் மற்றைய தட்டு சென்றால் உருவாவது மிகவும் பாரதூரமான பூமி அதிர்ச்சியாகும். இது Megathrust earthquake எனப்படும்.

டிசம்பர் 26, 2004 இல் சுமத்திரா தீவின் தென்மேற்கு கரைக்கு கீழாக செல்லும் Australian எனப்படும் தட்டும் (Tectonic Plate) Eurasian எனப்படும் தட்டும் தாங்கள் சந்திக்கும் 1000 கிலோமீற்றர் நீளப்பகுதியில் நகர்ந்தது. இந்நகர்வின் போது Australian தட்டு Earasian தட்டிற்கு கீழ்சென்று (Megathrust Earth quake) மிகவும் பாரதூரமான Richter Scale இல் 9.0 யை பதிவு செய்த பூமி அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்த அதிர்ச்சியால் இவ்விடத்தில் இந்து சமுத்திரத்தின் அடிப்பகுதி 10 மீற்றருக்கு மேல் உயர்ந்தது. இந்த நிலைக்குத்தான் அசைவே எம் உடன் பிறப்புக்களை அழித்த சுனாமி அலையை உருவாக்கியது. இது நடந்தது ஞாயிறு அதிகாலை 00:59 (GMT) கிரீன்விச் நேரம் ஆகும். இந்த பூமி அதிர்ச்சியில் வெளியேற்றப்பட்ட சக்தி கிட்டத்தட்ட கீரோசீமா (Hiroshima) இல் போடப்பட்ட அணுகுண்டு வெடித்த போது வெளியான சக்தியைவிட 100,000 மடங்கு கூடியது. இலங்கையில் இருந்து கிட்டத்தட்ட 1,600km தூரத்தில் உருவாகிய இந்த சுனாமி அலை இலங்கையை வந்து அடைய 2 மணித்தியாலங்கள் எடுத்தது. இந்த சுனாமி அலை 6,000 km தூரம் சென்று ஆபிரிக்க கிழக்குக் கரை நகரமாகிய சோமாலியா (Somalia) யை தாக்க 10 மணித்தியாலங்கள் எடுத்தது. சோமாலியக் கரையில் மீன் பிடித்துக் கொண்டு இருந்த நூறு மீனவர்களை இந்த சுனாமி அலை மூழ்கடித்து கொன்றது.

**இந்த சுனாமி அலையால் ஏற்படும் அனர்த்தங்களை தவிர்க்க இயலாதா?**

இயற்கையின் வலிமையை தடுக்க முடியாவிட்டாலும் அதனால் ஏற்படும் உயிராபத்துக்களை தவிர்க்கலாம். அல்லது குறைக்கலாம். பசுபிக் சமுத்திரத்தில் ஏற்படும் சுனாமி அலைகளை முன்கூட்டியே அறிந்து அமெரிக்கா, கனடா ஜப்பான் போன்ற நாடுகளுக்கு தெரிவிக்க அபாய அறிவிக்கும் முறைகள் உண்டு. ஆனால் இந்து சமுத்திரத்தில் இதுவரை இவ்வாறு ஒரு சுனாமி அலை ஏற்படாத படியால் இப்படி ஒரு அபாய அறிவிக்கும் முறைகள் ஏற்படுத்தப்படவில்லை. இந்த அழிவின் பின்னர் இந்து சமுத்திரத்திலும் இவ்வாறு ஒரு சுனாமி அலை அபாய அறிவிப்பு முறை ஏற்படுத்தப்பட வேண்டும் என இந்தியா அறிவித்து இருப்பது வரவேற்கப்பட வேண்டியதே. இப்படியான ஒரு அபாய அறிவிப்பு முறை இந்து சமுத்திர பிராந்திய நாடுகளில் ஏற்படுத்தியிருப்பதால் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளுக்கு 2 மணித்தியால முன் அறிவித்தல் கிடைத்திருக்கும். இதனால் பொருள் அழிவை தடுக்க முடியாவிட்டாலும் நிச்சயமாக உயிர் அழிவை தடுத்து நிறுத்தியிருக்கலாம்.

**சிவ. ஞானநாயகன்**


APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL


# நீண்டகாலம் உயிர் வாழ்வதற்கான இரகசியங்கள் - 1

எவ்வளவு காலம் உயிர் வாழ விரும்புகின்றீர்கள்?' இந்தக் கேள்வியை உங்களிடம் கேட்டால் என்ன பதில் சொல்லுவீர்கள்.

கேள்விக்குப் பதிலே சொல்லாமல், தலையைச் சொறிபவர்கள், மூக்கைத் தடவுபவர்கள் என்று வெகு தீவிரமான சிந்தனைக்குள் போய் விடுகின்ற பலர் இருக்கின்றனர்.

'நூறு வயது' என்று சொல்பவர்கள் இருக்கின்றார்கள். அதற்கெல்லாம் மேலாக 'எவ்வளவு நாட்களுக்கு ஆரோக்கியமாக இருக்கின்றோமோ, அவ்வளவு நாட்களுக்கு உயிர் வாழ விரும்புகின்றோம்' என்ற பதிலே பெரும்பாலும் இன்று கிடைக்கின்றது.

**நீரழிவு நோய்பற்றிய நீண்ட தொடரில் சந்தித்த நாம், மற்றுமோர் சுவாரசியமான தொடரில் மறுபடியும் சந்திக்கின்றோம். இது ஒரு நீண்ட தொடர். இந்தத் தொடர் உங்கள் வாழ்க்கையை குறைந்த பட்சம் பத்து வருடங்களையாவது கூட்ட வேண்டும் என்பது என்னுடைய கனவு. 'ஆகா பத்து வருடம் நமது வாழ்க்கை கூடப்போகின்றது' என்று சந்தோசப்படுவதோடு நிறுத்தி விடாதீர்கள். இப்போதே உங்கள் நண்பர்கள், உறவினர்களுக்கு இது பற்றி தெரிவித்து இந்தத் தொடரைத் தொடர்ந்து படிக்கும்படி கூறிவிடுங்கள். அவர்களுடைய வாழ்க்கைக் காலமும் கொஞ்சமாவது கூடட்டுமே.**

**அன்புடன்**

**செழியன்**

இளமையாக இருப்பதற்கு எல்லோரும் ஆசைப்படுகின்றார்கள். 'இல்லை' என்று நீங்கள் சொல்லமுடியாது. நரையை திரை போட்டு மறைக்கின்றார்கள். வயதை சொல்லாமல் இருக்க முயற்சி பண்ணுகின்றார்கள். சொல்லவேண்டி வந்தால் ஒரு பத்து வயது குறைத்து சொல்லி திருப்திப் பட்டுக் கொள்கின்றனர்.

தமிழகத்தில் நான் நின்ற போது, தமிழக நண்பர் ஒருவர் சுவாரசியமான ஒரு விடயத்தைக் கூறினார். ஒரு வைத்தியரிடம் சென்ற வயதான அம்மாவிடம், வயது என்ன என்று வைத்தியர் கேட்டார்.

'ஒரு அறுபது போட்டுக்கப்பா' என்று அவர் கூறியுள்ளார்.

'என்னம்மா போன தடவை அறுபத்தி ஐந்சுன்னு சொன்னியே' என்று கம்பவுண்டர் குரல் கொடுத்தார்.

'அறுபதா இருக்கப்படாதா என்ன? சக்கரை விலை ஏறுது, இறங்குது. ஒத்துக்கிடுவீங்க. வயசு மட்டும் ஏறி இறங்கப்படாதா என்ன?' கிளவி எகிறித் தள்ளிவிட்டார்.

'அப்போ உண்மையான வயது என்ன? அறுபதா? அறுபத்தைந்தா?' என்று நான் கேட்டேன்.

'அறுபதும் இல்லை, அறுபத்தி ஐந்தும் இல்லை. ஒரு தொன்னூறு இருக்கும்' என்று கூறி என்னையே அசத்தி விட்டார் நண்பர்.

இளமையாக இருக்க ஆசைப்படுவது சரிதான். நரையையும், வயதையும் கூட மறைக்கலாம். ஆனால் கூனல் முதுகையும், தோல் சுருக்கத்தையும், ஞாபக மறதியையும் மறைக்கத்தான் முடியுமா?


மனிதனின் ஆயுட்காலம் எவ்வளவு? என்று கேட்டால், 'ப் இவ்வளவுதானா? நூறு வயது' என்று ஊகித்தள்ளிவிடுவீர்கள். ஆனால் உண்மையில் எத்தனை பேர் நூறு வயது மட்டும் வாழ்கின்றார்கள்?

இந்த உலகமே தனக்கு கீழ் என்று நம்புகின்ற அமெரிக்கவில் ஆண்களின் சராசரி ஆயுட்காலம் 74 வயது மட்டுமே. அமெரிக்க பெண்களின் சராசரி ஆயுட்காலம் 80 வயது. நாம் வாழ்கின்ற கனடாவில் சராசரி ஆயுட்காலம் அமெரிக்காவை விட அதிகம். ஆண்களின் சராசரி ஆயுட்காலம் 77. பெண்களின் சராசரி ஆயுட்காலம் 82வயது. இலங்கையர்களின் ஆயுட்காலம் என்ன என்று அறிந்து கொள்ள உங்கள் மனது துடிக்கும். இலங்கையில் ஆண்களின் சராசரி ஆயுட்காலம் 70 வயதாகவும், பெண்களின் ஆயுட்காலம் 76 வயதாகவும் உள்ளது.

## செழியன்

சாப்பாட்டுக்கு மிக்க கஸ்டமான சோமாலியாவில் ஆயுட்காலம் எவ்வளவு என்று அறிய உங்களுக்கு ஆசையாக இருக்கலாம். அங்கு ஆண்களின் சராசரி ஆயட்காலம் 45 வயதாகவும், பெண்களின் சராசரி ஆயுட் காலம் 48 ஆகவும் உள்ளது. சரி ஆப்கானிஸ்தானைப் பார்ப்போம். அங்கு ஆண்களின் சராசரி ஆயுள் 43 வயது. பெண்களின் சராசரி வயதும் 43 என்று உள்ளது. அங்கோலாவின் நிலைமை இன்னமும் பரிதாபம். ஆண்களின் சராசரி ஆயுள் 39 வயது. பெண்களின் வயதோ 41.

மனிதர்களின் ஆயுள் காலம் நூறு என்று சொல்லப்பட்டாலும் மிகப்பெரும்பான்மையான மனிதர்கள் எண்பது வயது வரை கூட வாழ்வதில்லை. நாற்பத்தி மூன்று வயதோடு இறந்து போகின்றவர்களும் இருக்கின்றார்கள்.



மனிதர்களின் ஆயுள் காலத்தை நீடிக்க முடியுமா? அவர்களது இளமையை இன்னும் சில காலம் காக்க முடியுமா? என்று பல ஆராய்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றது.

ஆயுட்காலத்தை கூட்டுவது இருக்கட்டும். மனிதன் சாகாமலே இருக்கமுடியுமா என்று கூட ஆய்வுகள் நடக்கின்றன. இதனுடைய முடிவுகள் வரும்வரை நாம் இருப்போமா? இல்லையா? என்பது நிச்சயமில்லை.

இந்த கட்டுரையின் நோக்கம் சாகாமலே இருப்பது எப்படி என்பது அல்ல. குறைந்த பட்சம் உங்கள் ஆயுளை பத்து வருடங்களாவது நீடிப்பது எப்படி? என்பதே. வயது போய்விட்டது என்பதற்கு என்ன சான்று?

தோலில் சுருக்கம் ஏற்படும், மயிர் வெள்ளையாக மாறும், தசை நாரின் அளவு குறையும். உடல் சக்தி குறையும். உடலில் உருவாக்கப்படும் புரோட்டின் உருவாக்கம் குறையும். நோய்களில் இருந்து எம்மை பாதுகாக்கின்ற உடல் எதிர்ப்பு சக்தி குறையும், அத்தோடு நமது உடலில் பல செயற்பாடுகளுக்கு காரணமாக உள்ள ஓமோன்களின் உற்பத்தி குறையும்.

இதன் காரணமாக என்னென்ன நோய்கள் உருவாகலாம்?

இதயநோய்கள், புற்று நோய், நீரிழிவு நோய், ஒஸ்டியோபோரஸ், பார்கிஸ்தன் (Parkinson) நோய், பாரிசவாதம் என்று பல நோய்கள் நம்மை தாக்கும்.

வயது போவதை தடுக்க முடியுமா?

முடியாது, வயது போவது என்பது எமது உடற் கலங்களில் ஏற்கனவே எழுதப்பட்டுள்ளது. அதை இனி எம்மால் தடுக்க முடியாது. சிறிது காலம் பின் போடலாம்.

மூப்பியல் ஆராய்வின் தந்தை என்று அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட Leonard Hayflick மனிதர்கள் 115 வருடங்கள் வரை வாழ முடியும் என்று கூறியுள்ளார். இவர் 1194ல் எழுதி வெளியிட்ட, 'How and Why We Age', என்ற புத்தகம் புகழ்பெற்றது. இது வரை ஒன்பது மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள இந்தப் புத்தகம், ஜப்பான், பிரேசில், ரைஸ்யா, ஸ்பெயின், ஜேர்மனி, கிறிக், போலந்து, ஸ்ரேல், கங்கேரி, ஆகிய நாடுகளில் வெளியிடப்பட்டுள்ளது. இவர் 1928 மே மாதம் பிறந்தவர். 1968ல் Medical Micro biology பேராசிரியர் ஆக Stanford பல்கலைக் கழகத்தில் நியமிக்கப் பட்டார். 1982ல் தன் வாழ்கைக் காலத்தில் 25 முக்கிய பரிசுகளை தனது ஆராய்வுகளுக்காக இவர் பெற்றுக் கொண்டதை குறிப்பிடாமல் விட முடியாது. இவருடைய முக்கியமான ஆராட்சி நமது உடற் கலங்கள் பற்றியதாகும். உடலில் உள்ள கலங்கள் ஒரு குறிப்பிட்ட காலத்தின் பின் இறந்து போய்விடுகின்றன. மனிதன் இந்தக் கலங்கள் ஒரேமாதிரி செயல்படுவதில்லை என்றும் நிரூபிக்கப் பட்டுள்ளது. நமது உடற் கலங்கள் வளர்ந்து கொண்டு போய் ஒரு நிலையில் இரண்டாகப் பிளவடைகின்றன. இதனால் புதிய கலம் உருவாகின்றது. பிறகு மறுபடியும் இந்த கலங்கள் வளர்ந்து இரண்டு இரண்டாகப் பிரிவடைகின்றன.


கலங்கள் பிரிவடைந்து புதிய கலங்கள் உருவாகும் தொழிற்பாட்டை கலங்கள் மெல்ல மெல்லமாக குறைத்து, பின் நிறுத்தி விட்டு இறந்து போய்விடுகின்றன. கலங்களின் இந்த முடிவுக்கட்டம் இன்று 'Hayflick Limit' என்று அழைக்கப்படுகின்றது.

ஒரு Human fibroblast கலம் சராசரி நாற்பது தடவைகள் பிரிவடைந்து, அதன் பிறகு இறந்து விடுகின்றது என்று மூப்பியலின் தந்தை Leonard Hayflick கண்டுபிடித்துள்ளார்.

*தேவையான அளவு உணவூட்டம் கொடுத்து வளர்க்கப்பட்டபோது, எழுபது நாட்கள் மட்டுமே வாழக் கூடிய இந்த ஈக்கள் 140 நாட்கள் உயிர்வாழ்ந்தது ஆச்சரியத்தை ஏற்படுத்தின.*

இவ்வாறு சொல்லிவைத்தாற்போல் கலங்கள் நாற்பது தடவை இரண்டாகப் பிளந்து பின் தமது செயற்பாடுகளை நிறுத்திக் கொள்வதைப் பார்க்கின்றபோது, கலங்களின் ஜீன்களில் (DNA) ஏற்கனவே எழுதப்பட்டுள்ள தன் பிரகாரமே கலங்கள் செயல்படுகின்றனவா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது. விஞ்ஞானிகள் இந்த இரகசியத்தை துப்பறிய மிக முனைப்பாக ஈடுபட்டுள்ளனர்.

வயது போகப் போக மூளையில் உள்ள கலங்களின் எண்ணிக்கையும் குறைகின்றது என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக உறங்குவதற்கு நித்திரையை கட்டுப்படுத்தும் மூளையில் இருக்கின்ற




கலங்களின் எண்ணிக்கை இளமைக் காலத்தில் 18,000 ஆக இருந்து முதுமைக் காலத்தில் 12,000 ஆகக் குறைந்து விடுகின்றது. இருபது வயதுக்கும், எண்பது வயதுக்கும் இடையில் மூளை தனது நிறையில் ஏழு சதவீதத்தை இழந்து விடுகின்றது.

மூப்பியல் ஆராட்சி மையத்தின் இன்னோர் கண்டுபிடிப்பு உங்களை ஆச்சரியத்தில் மூழ்கடித்துவிடும்.

**வயது போகப்போக மூளையில் உள்ள கலங்களின் எண்ணிக்கையும் குறைகின்றது. உறங்குவதற்கு நித்திரையை கட்டுப்படுத்தும் மூளையில் இருக்கின்ற கலங்களின் எண்ணிக்கை இளமைக் காலத்தில் 18,000 ஆக இருந்து முதுமைக் காலத்தில் 12,000 ஆகக் குறைந்து விடுகின்றது**

ஒரு மனிதனின் வெவ்வேறு உறுப்புகளின் வயது ஒரே வயதாக இருக்க வேண்டும் என்பது இல்லை. சமயத்தில் அவற்றின் வயதுகள் ஒன்றுக்கொன்று வேறுபடுகின்றன. நாற்பது வயது நிரம்பிய மனிதனுக்கு முப்பது வயது நிரம்பிய இதயமும், அதே சமயம் இருபது வயது நிரம்பிய ஈரலும் இருக்க முடியும். இன்னுமோர் ஆராட்சியைப் பற்றி சொல்லாமல் இருக்க முடியாது. அது உங்களை இன்னமும் அதிசயிக்க வைக்கும். ஒன்பது தினம் மட்டுமே ஆயுளைக் கொண்ட ஒரு புழுவை, ஆய்வு கூடம் ஒன்றில், போதுமான அளவு உணவூட்டம் நிரம்பிய ஒரு பெட்ரிக் தட்டில் வளர்த்தனர். இந்த ஆய்வு கூடத்தில் இப் புழு ஐம்பது நாட்கள் உயிரோடு இருந்து சாதனை படைத்தது. கலிபோர்னியாவில் ஒரு பல்கலைக்கழக ஆய்வு கூடத்தில் பழங்களை மொய்க்கின்ற ஈக்களை வைத்து இன்னுமோர் பரிசோதனை செய்யப்பட்டது. தேவையான அளவு உணவூட்டம் கொடுத்து வளர்க்கப்பட்டபோது, எழுபது நாட்கள் மட்டுமே வாழக் கூடிய இந்த ஈக்கள் 140 நாட்கள் உயிர் வாழ்ந்து ஆச்சரியத்தை ஏற்படுத்தின.

ஒன்றிரண்டு பூச்சியல்ல பத்து இலட்சம் பூச்சிகளின் ஆயுட்காலத்தை இவ்வாறு விஞ்ஞானிகள் அதிகரித்து செய்த சாதனை, மனிதர்களின் ஆயுளையும் கூட்ட முடியும் என்ற நம்பிக்கையைத் தந்துள்ளது. (தொடரும்)

**நீங்கள் புதிய வீட்டுக்கு செல்லத் தயாராகுங்கள்!**

**நான் Mortgage விடயங்களைப் பார்த்துக்கொள்கிறேன்!**

0% Down


| 5% | 4.5% | From 1.75% |
| --- | --- | --- |
| 5years | 3years | Variable |

Switch, Re Finance, Debt Consolidation
Bad or No Credit

100 FREE AIR MILES TO ALL MY CLIENTS

CENTUM
Looking out for your best interest

CENTUM Advance Realty Inc.
80 Corporate Dr., Ste 203, Toronto, ON, M1H 3G5
jerad_emmanuel@centum.ca



**Jerad Emmanuel**
Mortgage Specialist

Business: 416.290-1200
Cell: **416-908-7066**

# புதிய ஆண்டில் வேண்டும் பல புதிய மாற்றங்கள்

MERRY CHRISTMAS, HAPPY NEW YEAR. மார்கழி 15ந்தைக் கடந்தது விட்டால், நத்தார் வாழ்த்துக்களும் புதிய வருடத்திற்கான வாழ்த்துக்களும் செல்லுமிடமெல்லாம் நிறைந்து கிடக்கும். உலகமே பண்டிகைக் கோலம் பூண்டிருக்கும். கிறிஸ்தவ மதத்தை சார்ந்தவர்கள் தேவனின் பிறப்பை கொண்டாடும் முகமாக தேவாலயங்களில் விசேட பூசைகளிலும் வீடுகளிலும், வேலைத் தலங்களிலும் பிரத்தியேக கொண்டாட்டங்களிலும் ஈடுபடுவார்கள். பரிசுகளும், உணவும் அளவுக்கு அதிகமாக பணத்தை பதம் பார்க்கும். கிறிஸ்தவர்களின் மேற்சொன்ன கொண்டாட்ட காலத்தை இனிவரும் காலங்களில் கிறிஸ்தவ கொண்டாட்ட காலம் என்று அழைக்காமல் சாதாரணமாக பண்டிகை கொண்டாட்ட காலம் என அழைக்கப்பட வேண்டும் என்று புதிய சிந்தனையாளர்களின் எண்ணங்களுக்கு அரசாங்கங்களுக்கு ஆதரவு கொடுத்துள்ளது. அதன் காரணமாக தனிப்பட்ட வகையில் Merry Christmas, Happy New Year என்று கிறிஸ்தவர்களும் மற்றவர்களும் ஒருவருக்கொருவர் வாழ்த்திக் கொண்டாலும் கொண்டாடிக் கொண்டாலும் பெரும் அளவில் பொது இடங்களிலும், வேலைத்தலங்களிலும் Happy Holidays என்ற சோடனைகளும், பதாதைகளும் தொங்கவிடபட்டிருப்பதை நாம் அவதானிக்க கூடியதாக இருக்கின்றது.

கருத்து என்னவெனில், இந்த நாடுகளில் பல்லின மக்களும் கலந்து வாழுகின்றனர். பல கலாசாரங்களைக் கொண்டவர்களும், பல மதங்களை சார்ந்தவர்களும் வாழும் இந்த நாடுகளில் ஒற்றுமையையும், ஒருவருக்கொருவர் நல்ல புரிந்துணர்வையும் வளர்க்க வேண்டுமாயின் ஒரு குறிப்பிட்ட சாரரை (அவர்கள் பெரும்பான்மையினராக இருந்த போதும்) மட்டும் மதிப்பதும் அவர்களது மத கொண்டாட்டத்தை மட்டும் பெரும் அளவில் கொண்டாட வைப்பதும் நாளடைவில் மற்றைய மதங்களை சார்ந்தவர்களிடையே ஒரு வித தாழ்வு மனப்பான்மையை வர இடம் வைக்கவும் அதன் மூலம் பார தூர நிகழ்வுகள் நடைபெறாமல் தவிர்பதற்கு இதுவே சரியான வழி என்றும் கூறப்படுகின்றது. அதேவேளை தனிப்பட்ட முறையில் கிறிஸ்தவ கொண்டாட்டங்களையோ, மற்றைய மத கொண்டாட்டங்களையோ தடை செய்யாத இடத்தே இது ஒரு சரியான முடிவே.

இன்று உலகில் மத தீவிர வாதமே மனித உயிர்களுக்கு பெருமளவில் உலை வைத்து வருகின்றது. மதத்தின் பெயரால் சிலர் செய்யும் அட்டூழியங்களைக் கூட அதே மதங்களை சார்ந்தவர்கள் கண்டும் காணாது வாழ்வதுடன், அழிக்கப்படுவது மற்றைய மதங்களை சார்ந்தவர்கள் என்பதால் அதற்கு




## சாதாரண மனிதன் சிந்தனையிலிருந்து

இது கிறிஸ்தவ மதத்தை சார்ந்த பலருக்கு ஒருவித மனத்தாக்கத்தை கொடுத்துள்ளது. வானொலிகளில் நடைபெறும் சம்பாசனைகளில் தத்தமது அதிருப்தியை படு ஆணித்தரமாக தெரிவிப்பதையும் அவதானிக்க கூடியதாக இருக்கின்றது. ஆண்டாண்டு காலமாக தாம் கொண்டாடி வந்த கிறிஸ்துவின் பிறப்பு கொண்டாட்ட காலத்தை ஒரு சாதாரண பண்டிகைக்கால கொண்டாட்ட காலமாக மாற்றுவது முறையற்றதென்றும் மற்றைய மதத்தினை சார்ந்த சிறுபான்மையினருக்கு சாதகமாக இந்த முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகவும் சிறுபான்மை மதத்தினரை மகிழ்விக்க பெரும்பான்மையினரை நிராகரிப்பது தவறு என்றும், ஒரு சிலர் அதற்கும் மேலே சென்று கிறிஸ்தவர்களின் கொண்டாட்டத்தை விரும்பாத சிறுபான்மையினர் கிறிஸ்தவ நாட்டை விட்டு தாம் சார்ந்த மதத்தை பெரும்பான்மையாக கொண்ட நாடுகளில் போய் வாழட்டும் அல்லது அவர்கள் இருந்து வந்த நாடுகளுக்கே திரும்பி செல்லட்டும் என்று கூறுவதையும் கேட்க கூடியதாக இருக்கின்றது.

மேற்சொன்ன வாதமே அரசாங்கங்களும், சிந்தனையாளர்களும் சரியான முடிவையே எடுத்துள்ளார்கள் என்பதை உறுதிப்படுத்துகின்றது. இந்த மாற்றத்தை கொண்டு வருவதற்கு ஆதரவாக உள்ளவர்களின் ஆதரவு கொடுப்பதும் உலகம் அறிந்ததே. ஒரு துளிவிஷம் போதும் பல உயிர்களை அழிப்பதற்கு, அதனால் துளி விஷங்களை இந்த நாடுகளில் உருவாக்காமல் பார்த்துக் கொள்வது மிக அவசியமே. அதற்கு பல இன மக்களும் வாழும் இந்த நாடுகளில் தீர்க்க தரிசனமாக சிந்திப்பவர்களும், முடிவு எடுக்கும் அரசுகளும் போற்றப்பட வேண்டியவையே. பெரும்பான்மையாக உள்ள கிறிஸ்தவர்களும், சிறுபான்மையாக இருந்தபோதும் செல்வாக்கும், பணபலமும் கொண்ட யூதர்களையும் கொண்ட இந்த நாடுகளில் உள்ள, தொழிலகங்களில் அதிலும் பொதுசன ஊடகங்களில் தொழில் புரிந்து பயன் அடைபவர்களும் தத்தமது நத்தார் வாழ்த்துக்கள், க்வான்ஸா வாழ்த்துக்கள் என்று தமது கொண்டாட்டங்களை வான் அலைகளில் முழங்கிக் கொண்டு இருக்க, அப்படி தமது மதக் கொண்டாட்டங்களை கொண்டாடமுடியாமல் இருக்கும் மற்றைய மதத்தைச் சார்ந்தவர்களை வெறுப்பேற்றிவிடாமல் இருக்க பார்த்து கொள்வது ஒரு தார்மீகப் பொறுப்பே.

நாளை நமதே என்று கற்பனையில் மட்டும் வாழாமல், தனிப்பட்ட ஒவ்வொருவரும் தம்மிடம் உள்ள, தம்மை பாதிக்கும், மற்றையவர்களை பாதிக்கும் பழக்க வழக்கங்களை திருத்திக் கொள்வதிலும், நல்ல விடயங்களை நாளை செய்யலாம் என்று தள்ளிப் போடுவதை புதிய ஆண்டில் நிறுத்தி பலன்பெற சங்கற்பம் கொள்வது தனிமனித அபிவிருத்திக்கும், தம்மை ஆளுகின்ற அல்லது தாம் பெருமளவில் நம்பிக்கை வைத்துள்ள தலைவர்கள் சர்வாதிகாரிகள் போல வாழ்வதற்கு வழிவைக்கும் வகையில் அவர்களை தூக்கி தலையில் வைத்து கொண்டாடி அவர்கள் மனதில் மக்கள் எல்லோருமே மடையர்கள் தாம் என்ற வகையில் நடந்துகொள்ளாதபடி பார்த்துக் கொள்வது நாடுகளின் அபிவிருத்திக்கும் வழிவகுக்கும் என்பதை நாம் மனதில் கொண்டு புதிய ஆண்டில் பல புதிய மாற்றங்கள் வேண்டும் என ஒவ்வொருவரும் வாழத் தலைப்பட வேண்டும்.

*சிந்தனை தொடரும்*

பரம் ஜி

ஒரு சாதாரண மனிதன்


# ONTARIO REHABILITATION & RECOVERY CENTRE

- வாகன விபத்து
- விளையாட்டு முறிவு, தறிவு
- தசை நார் ஈய்வு
- நாரி நோவு, பிடிப்பு
- வேலைத்தள பாதிப்பு
- முள்ளந்தண்டு விலகல்
- கழுத்து பிடிப்பு
- பழைய நோவு

போன்றவற்றிலிருந்து மீள்வதற்கான பராமரிப்பு, உடற்பயிற்சிகள், தகுந்த ஆலோசனைகளிற்கான மையம்.

அக்குபஞ்சர் மற்றும் லேசர் மருத்துவம் போஷாக்கு பற்றிய அறிவுரை பராமரிப்பு.

**Specialists In:**

Chiropractic, Massage Therapy, Acupuncture, Laser Therapy, Physiotherapy and Exercise / Sports Injuries


Tel.: 416.291.0299


Fax:416.291.0994

240 Alton Tower Circle, Unit 200

Scarborough, ON M1V4P2





வீட்டில் - முதலீடு வீண்விரயமாவதில்லை....
வீட்டில் - முதலீடே எம் வாழ்க்கைக்கு மூலதனம்!

பாதுகாப்பாக உங்கள் பணத்தை வீட்டில் முதலிட்டு வாழ்க்கையில் வெற்றிபெற அழையுங்கள் பரம். ஜி

பாடுபட்டு உழைத்த பணத்தை வீடுகளில் முதலிடும் வழிகளை அறிய நாடுங்கள்

**Param Gnana**

Sales Representative
HomeLife GTA
Realty Inc.

www. themathuram.com

Cell: 416 230 1107 Bus: 416 321 6969
Res: 905 670 9969 (Mississauga)

thamathuram.com

# மறந்தும் மறவாத நினைவுகள்




எஸ். கணேஷ்

### சர்வதேச விளையாட்டு வீரர் விருது - ராகுல் திராவிட்

சர்வதேச விளையாட்டு வீரராக இந்தியாவின் ராகுல் திராவிட் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். பாகிஸ்தான் முன்னாள் வீரர் வாசிம் அக்ரம், இந்திய நட்சத்திர ரெனிஸ் வீரர் லியாண்டர் பயஸ் ஆகியோரைப் பின்னுக்குத் தள்ளி இவ் விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் திராவிட். அணியின் 'அரண்' என பெரும்பாலும் அழைக்கப்படும் திராவிட் 2003ஆம் ஆண்டில் குறிப்பிடும்படியான பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளார்.

### முரளிதரனின் சாதனைகள்

"எத்தனை தடைகள் வந்தாலும் அத்தனையையும் மீறி "தமிழ் வீரன்" என்று நாம் பெருமைப் படக்கூடிய முத்தையா முரளிதரன் குறைந்த வயதில் குறைந்த டெஸ்ட் ஆட்டங்களில் உலக சாதனையை நிலைநாட்டி புதிதாக சாதனைகளை படைத்துக் கொண்டு போகின்றார். இவருடைய பெயர் கிரிக்கெட் சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படுகின்றது. இனி கிரிக்கெட் உலகில் முரளிதரனுக்கு "வானமே எல்லை"......!!!

1992 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியா நாட்டிற்கெதிராக தனது முதல் டெஸ்ட் பிரவேசத்தை ஏற்படுத்திய முரளி, சிறிலங்கா அணி பெற்ற பல வெற்றிகளுக்கெல்லாம் முதல் காரண கர்த்தாவாக திகழ்ந்துள்ளார். இதனால் தான் இன்று உலகின் கிரிக்கெட் பந்து வீச்சாளர்களில் முதல் இடத்தில் முரளிதரன் இருக்கின்றார்.

## ஒலிம்பிக்

உலகம் முழுவதும் உள்ள வீரர்கள், வீராங்கனைகள் தங்களது ஒட்டுமொத்த திறமையை பரிசோதித்துக்கொள்ளும் முக்கியமான போட்டியாக ஒலிம்பிக் உள்ளது. 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இப்போட்டி ஏதென்ஸில், கிரீஸ் நாட்டில் ஓகஸ்ட் 12, 2004 ஆம் திகதி முதல் ஆரம்பித்தது. இதில் 202 நாடுகளைச் சேர்ந்த 10,514 வீரர்கள் 37 வகையான போட்டிகளில் போட்டியிட்டனர். 1896ஆம் ஆண்டு இதே ஏதென்ஸ் நகரிலேயே முதலாவது ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றன.

கி.மு 776ஆம் ஆண்டில் புகழ்பெற்ற கிரேக்க வீரரும் பலசாலியுமான ஹேக்குலியஸ், உலகின் மிகப் பலம் பெற்ற மனிதன் யார் என்ற போட்டிக்காக தனது சொந்த சகோதரர் களுக்கெதிராக போட்டியிட அழைப்பு விடுத்ததே இந்த ஒலிம்பிக் போட்டியின் ஆரம்பம் என்கிறது வரலாறு. அப்போது ஆட்சியில் இருந்த மன்னன் இந்தப் போட்டியை கிரேக்கர்கள் நம்பும் ஒலிம்பியா தேவதையின் ஆணையுடன் ஆரம்பித்து வைத்ததால் ஒலிம்பிக் என்ற பெயர் இடப்பட்டது.

### பிரெஞ்சு, ஓபன் டென்னிஸ்: மகளிர் ஒற்றையர் பிரிவில் 'அனஸ்தாசியா மிஸ்கினா சாம்பியன்'



பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டியில் மகளிர் ஒற்றையர் பிரிவு சாம்பியன் பட்டத்தை ரஷ்யாவின் அனஸ்தாசியா மிஸ்கினா கைப்பற்றினார். வருடத்தின் இரண்டாவது கிராண்ட் ஸ்லாம் போட்டியான பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டிகள் பாரிஸில் நடைபெற்று முடிந்துள்ளன. மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டியில் ரஷ்யாவைச் சேர்ந்த வீராங்கனையான அனஸ்தாசியா மிஸ்கினா, எலினா டெமன்ட்டியேவா இருவரும் மோதினர். இந்தப்போட்டியில் மிஸ்கினா வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தை தட்டிச்சென்றார். இது இவருக்கு முதல் கிரான்ட்ஸ்லாம் பட்டமாகும். மேலும் 30 வருடங்களுக்கு பின்னர், கிரான்ட்ஸ்லாம் பட்டத்தை முதன் முறையாக ரஷ்ய வீராங்கனை ஒருவர் கைப்பற்றியுள்ளார். இறுதிப்போட்டியில் 59 நிமிடங்களில் மிஸ்கினா வெற்றிபெற்றார்.



### உலக சாதனையுடன் தங்கம் வென்றாவர் ரஷ்ய வீராங்கனை எலீனா இஸின்பயேவா.

4.81மீட்டர் உயரம் தாண்டி உலகச் சாதனை படைத்திருந்த 22வயதான எலீனா, முதலில் 4.70 மீட்டரும், அதற்கடுத்த வாய்ப்பில் 4.75 மீட்டரும் தாண்டினார். கிட்டத்தட்ட வெண்கலப் பதக்கத்துக்காக அவர் போட்டியிட வேண்டியிருக்கும் என்று கருதப்பட்டது. அதற்கடுத்து 4.80 மீட்டர் உயரம் தாண்டினார். பின்னர் 4.85 மீட்டர் உயரம் தாண்டினார். கடைசி வாய்ப்பில் 4.91 மீட்டர் உயரம் தாண்டி தனது உலக சாதனையை முறியடித்ததுடன் தங்கமும் வென்றார் எலீனா.

ரஷ்யாவின் ஸ்வெத்லானா ஃபியோபனோவா 4.75 மீட்டர் உயரம் தாண்டி வெள்ளியும், போலந்தின் அன்னா ரோகௌஸ்கா 4.70 மீட்டர் உயரம் தாண்டி வெண்கலமும் வென்றனர். இப்போட்டியில் சிட்னி ஒலிம்பிக்ஸில் தங்கம் வென்ற அமெரிக்காவின் ஸ்டேகி தகுதி சுற்றிலேயே தோல்வி அடைந்தார்.



## அலைகளின் அழிப்பு...

தொண்டு நிறுவனங்களின் உதவி உடனடியாக கிடைப்பதற்கு வசதியாகவே புலிகள் இதனை செய்துள்ளனர்.
இலங்கை அரசும் அவசரகால நிலைமையை பிரகடனம் செய்துள்ளது. அத்தோடு 'மீட்பு பணியில் புலிகளோடு இணைந்து பணியாற்றுவோம்' என்று இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அறிவித்துள்ளார்.

இதேசமயம் இந்து சமுத்திரத்தில் எழுந்த இந்த இராட்சதக் கொந்தளிப்பு 6000 கிலோமீற்றர்களை கடந்து ஆபிரிக்கா கண்டத்தையும் தாக்கியுள்ளது என்று கடை-சிச் செய்தி கூறுகின்றது. இதனால் 100 க்கும் மேற்பட்ட சோமாலியர்கள் உயிர் இழந்துள்ளனர்.

பூகம்பம் 9.0 Richer அளவையில் உருவா-குவது ஒரு ஆபத்தான நிலையாகும். வழமையாக பெருமளவில் இந்த அளவுக்கு பூகம்பம் ஏற்படுவதில்லை. செப்டம்பர் 25, 2003ல் ஜப்பான் தீவு ஒன்றில் Richer 8 அளவையில் ஏற்பட்ட பூகம்பத்தினால் 600 பேர் இறந்து போனார்கள்.

இறந்த குழந்தைகளை தம் கைகளில் தாங்கி அழுகின்ற பெற்றோர்களின் அழுகுரல்ளை தொலைக்காட்சியில் பார்க்க சகிக்க முடி-யாமல் உள்ளது.

இதேநேரம், நாடு விட்டு நாடு வந்து வாழும் கனேடியத் தமிழர்கள், தமது சிரமங்களையும் பொருட்படுத்தாமல், இலட்சக்கணக்கான கனேடியன் டொலர்களை நிதி உதவியாக வழங்கி பாதிக்கப்பட்ட இலங்கை மக்க-ளுக்காக அள்ளி வழங்கி உள்ளார்கள். இவர்கள் தாமாக முன்வந்து கனேடிய ஒலி, ஒளிபரப்பு நிலையங்களுக்கு சென்று தமது நிதியை கையளித்து வருகின்றார்கள். கனேடிய தமிழ் சிறுவர்கள் ஒவ்வொரு சதமாக தாம் உண்டியலில் சேகரித்த பணத்தைக் கூட பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்காக வழங்கியுள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்-தக்கது. கனடாவில் மட்டுமல்லாது தமிழர்கள் புலம் பெயர்ந்த எல்லா நாடுகளிலும் உள்ள தமிழர்கள் வாரி வாரி தங்கள் நிதி உதவியை அளித்து வருகின்றனர்.

பல ஆயிரம் மனித உயிர்களும், விலங்குகளும் பலியாகி கிராமங்களில் அநா-தரவாக கிடக்கின்ற இந்நிலையில் கொலரா, மலேரியா போன்ற தொற்று நோய்கள் பரவுவதற்கான ஆபத்து ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு யுத்தம் காரணமாக புதைக்கப்பட்ட கண்ணி வெடிகள் தண்ணீரில் மிதந்து இடம் விட்டு இடம் நகர்ந்து கொண்டிருப்பதால் எதிர்காலத்தில் இன்னமும் பல உயிர் இழப்-புகள் நிகழ்வதற்கான அபாயம் உள்ளது என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சுமத்திரா தீவுக்கும் இலங்கைக்குமான தூரம் 1600 கிலோ மீற்றர் ஆகும். சுமத்திரா தீவில் ஏற்பட்ட பூகம்பத்தின் காரணமாக உருவாகிய இராட்சத கடல் அலைகள் இலங்கை, இந்தியாவை அடைய இரண்டு மணி நேரம் பிடித்தது. இந்த அவகாசத்தில் இலங்கை-யிலோ, இந்தியாவிலோ இது பற்றிய முன் எச்சரிக்கை எதுவும் செய்யப்படவில்லை.

இந்த இராட்ச அலைகளினால் நாட்டில் முதலில் ஏற்பட்ட பாதிப்பின் பின்னர் கூட இதைப்பற்றிய செய்தியை அரசாங்கங்கள் மக்களுக்கு அறிவித்தரவில்லை. அதனால் தொடர்ந்து ஏனைய பகுதிகளில் எழுந்து வந்த இராட்சத அலைகளினால் மக்களின் உயிர்கள் மேலும் பறிக்கப்பட்டன. முன் எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தால் அதிகளவிலான உயிர் சேதத்தை தவிர்த்திருக்கலாம்.

• • •





# MANIKKANDAN
## Take Out & Catering

தமிழ் தாய் நினைவைக் கொண்டுவரும் தராதரமிக்க, கனடிய கோட்பாடுகளுக்கு அமைய எமது தயாரிப்புகளான சோறு, மரக்கறி, இறைச்சிக்கறி, கடலுணவு, கொத்துரொட்டி வகைகள், ரொட்டி, இடியப்பம், புட்டு, இட்டலி, தோசை, மசாலா தோசை, வடை, Rolls, Cutlets, Patties போன்ற பலவகை உணவுவகைகளைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள் **மணிகண்டன்**.

## கிளை
1585 Ellesmere Rd.
(Progress Park Plaza)
416.438.2225



Wedding or any Occasions
Special Deals Available



- சுவை நிறைந்த பல்வேறு வகையான INDIAN SWEETS
- வீட்டில் தயாரிக்கப்பட்ட மாங்காய், தேசிக்காய் அச்சாறு

இல்லங்களில் நிகழும் பலவிதமான வைபவங்களுக்கும் தேவையான உணவுகளை ருசித்து மகிழ்ந்திட அழையுங்கள் மணிகண்டன்.

Call: Siva: 416-283-1260
790 Military Trail , Unit 1A, Scarborough ON M1E 4P7

# புத்தாண்டில் புதிய விருப்பங்கள்




நண்பர்களிற்கும், உறவினர்களிற்கும் வீடு விற்க, வாங்க ஏனைய வகைகளில் எனது சேவையைப் பாவித்தவர்களிற்கும், பாவிக்க இருப்பவர்களிற்கும், எனது இதய பூர்வமான புதுவருட நல்வாழ்த்துக்கள்.

"புதிய ஆண்டில் யாவரும் சகலதும் பெற்று சௌகரியமாக வாழ எல்லோரிற்கும் பொதுவான இறைவனை வேண்டுவோமாக!"

2005ஆம் ஆண்டின் முதலாவது இதழில் வீடு சம்பந்தமான எனது விருப்பங்களை (wish list) ஐ எழுதலாம் என எண்ணுகிறேன்.

1. வட்டி வீதம் குறையவேண்டும், அல்லது இதே நிலைமையில் இருக்கவேண்டும்.
2. 2004ஆம் ஆண்டில் ஏறக்குறைய 85,000 அளவில் வீடுகள் விற்கப்பட்டன. இதே அளவில் இந்த ஆண்டும் விற்கப்படவேண்டும்.
3. வீட்டின் விலையில் பெரிய மாற்றம் ஏற்படாமல் சீராக காணப்படல் வேண்டும்.
4. வீடு வாங்குபவர்கள், குறிப்பாக முதல் தடவையாக வீடு வாங்குபவர்கள் தமது வருமானத்தை கவனத்தில் கொண்டு அதற்கேற்ப சொந்த வீடு வாங்கி, கொடுப்பனவுகளை ஒழுங்காகச் செய்து, தமது Credit ஐ சிறந்த முறையில் வைத்திருக்க வேண்டும்.
5. வீடு வாங்கி விற்பவர்களிற்கு கனடிய அரசு வரிவிலக்கு தரவேண்டும்.
6. சகல வீடுகளிற்கும் வரிமாற்று வரியை (Land transfer tax) விலக்க வேண்டும்.
7. 25% இற்கு குறைவாக முதலீடு செய்து வீடு வாங்கும்போது பெறப்படும் காப்புறுதியின் Premium இன் அளவு குறைக்கப்படல் வேண்டும்.
8. வீடு வாங்குபவர்கள் வீடு சம்பந்தமான தெளிவான அறிவுடன் வீடு வாங்க வேண்டும், வீடு வாங்கும் போது தேவையில்லாமல் செலவிடும் தொகையை தவிர்க்க வேண்டும்.
9. 2004 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இல்லாதது போல 2005ஆம் ஆண்டில் வீடுகள் இலகுவாக விற்கப்படல் வேண்டும்.
10. 10 வருடத்திற்கு மேற்பட்ட, பழைய வீடுகளிற்கு வீட்டின் சொந்தக்காரர்கள் HIP காப்புறுதி பெறல் வேண்டும்.
11. வீட்டின் உரிமையாளர்கள், வீட்டை குறைந்தது மூன்று வருடத்திற்காவது Duct cleaning செய்தல் வேண்டும்.
12. வீட்டின் வெளிப்புறமும், அகப்புறமும் துப்பரவாக வைத்திருத்தல் வேண்டும்.
13. வீட்டின் வெளிப்புறத்தில் உள்ள புல்தரையில் வாகனங்கள் தரிப்பதை தவிர்க்க வேண்டும்.
14. வீட்டில் ஏற்படும் சிறிய சிறிய திருத்த வேலைகளை உடனடியாகத் சரி செய்து கொள்ள வேண்டும்.
15. வீடு வாங்கியவர்கள், வாங்குபவர்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்.

வீடு வாங்குபவர்களிற்கும் வீட்டு முகவரிற்கும் இடையேயுள்ள தொடர்புகள், வீடு வாங்கியவுடன் முற்றுப் பெறுவதல்ல, உண்மையைக் கூறப்போனால் வீடு வாங்கிய பிற்பாடும் வீட்டுப்பிரதிநிதிகளிற்கும், வாங்கியவரிற்கும் இடையேயுள்ள தொடர்புகள் அதிகரிக்கும். ஏனெனில் வீடு வாங்கிய பின் வீடு சம்பந்தமான பல தேவைகள், சேவைகள் தேவைப்படும். வீடு வாங்க விரும்புவரிற்கு வீடு விற்பது கஸ்டமான விடயமல்ல. வீடு வாங்குபவரின் பண நிலைமையை, குடும்ப நிலைமையை மனதில் கொண்டு அதற்கேற்ப வீடு விற்பதே வீடு விற்கும் விற்கும் பிரதிநிதியின் கடமை என நான் நம்புகின்றேன். தகுந்த வீடு வாங்கினால் அதற்கப்புறம் தொடரும் சகலதும் சரியாகவே அமையும். எனவே வீடு வாங்குபவர்கள் தமது

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

தேவைகளை மனதில் கொண்டு, தமது வருமானத்திற்கேற்ப வீடு வாங்கி சிறப்புற வேண்டும்.

தகமையுள்ள தகுந்தவர்களை தெரிவதன் மூலம் தமது இலக்கை இலகுவாக அடையலாம்.



## Interest Rate


| | |
|---|---|
| 5 Yrs Mortgage | 4.8% |
| 3 Yrs Mortgage | 4.50% |
| Prime Rate | 3.75% |
| Bank Rate | 2.00% |



# மனித இயந்திரத்தின் மூலம் அறுவைச்சிகிச்சை

மனித இயந்திரங்கள் அல்லது Robots ஆனது, மனிதரைப் போல வேலை செய்யக்கூடியது என பல காலமாக கருதப்படுகின்றது. ஆனாலும் முழுதாக மனிதன்போல் சுயமாக சிந்தித்து முடிவெடுத்து இயங்கும் ஆற்றல் அற்றது. மனிதரால் கொடுக்கப்பட்ட சில கட்டளைக-ளை ஏற்று ஒரு குறிப்பிட்ட சில வேலைகளை மாத்திரம் செய்யக்கூடியன. மனித இயந்திரங்கள் தொழிற்சாலைகளிலும், விண்வெளி ஆராய்ச்சிகளிலும் பரவலாக உபயோகிக்கப்படுகின்றது. தற்போது இவை சத்திரசிகிச்சையிலும் கூட ஈடுபடுத்தப் படுகின்றன. பலர் நினைப்பது போல் முற்றுமுழுதாக ஒரு சத்திரசிகிச்சை வைத்திய நிபுணரைப் பிரதியீடு செய்வதில்லை. ஆனால் ஒரு சத்திரசிகிச்சை நிபுணருக்காக அவருக்கு பலவிதங்களிலும் ஒத்தாசை புரிகின்றது. ஒரு சத்திரசிகிச்சை நிபுணரின் ஆற்றலையும் அவரின் செயற்பாடுகளையும் மேம்பட வைக்கின்றன என கூறலாம்.

தற்போது மனித இயந்திரங்கள் நரம்பு சத்திரசிகிச்சை, கண் சத்திரசிகிச்சை, பல் மருத்துவம், சிறுநீரக சத்திரசிகிச்சை, மகப்பேறு போன்ற பலதரப்பட்ட துறைகளிலும் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. இதைவிட ஒரு சத்திரசிகிச்சை நிபுணரின் இடத்திலிருந்து தூர உள்ள இடத்தில் ஒரு சத்திரசிகிச்சையை செய்யக்கூடியதாகவும் உள்ளது. ஓர் இடத்திலுள்ள சத்திரசிகிச்சை நிபுணரின் அசைவுகளை இலத்திரனியல் சமிஞ்சைகளாக மாற்றி அதை வேறு ஒரு இடத்திற்கு அனுப்பி, அங்குள்ள இயந்திர மனிதனுக்கு அவை கொடுக்கப்பட்டு, மறுமுனையில் உள்ள சத்திரசிகிச்சை நிபுணர் நோயாளியை தொலைக்காட்சிக் கருவியில் பார்த்தவாறு கைகளை அசைக்க அதற்கேற்ப, மறுமனையில் இயந்திர மனிதன் சத்திர சிகிச்சை செய்யக்கூடியதாக உள்ளது.




## Robotic Surgery

கைகள் உபயோகிக்கப்பட்டன. இவை மூலம் நெஞ்சில் பென்சில் அளவு துளைகள் போடப்பட்டு, அவை மூலம் சத்திரசிகிச்சை உபகரணங்கள் உள்ளே செலுத்தப்பட்டு, சத்திரசிகிச்சை செய்யப்பட்டது. தற்போது சாதாரண Bypass சத்திரசிகிச்சையில் நெஞ்சில் 12தொடக்கம் 15 அங்குல நீளமான அளவில் நெஞ்சு வெட்டப்பட்டு அதனூடாகத் தான் சத்திரசிகிச்சை செய்யப்படுகின்றது. இதன்போது நெஞ்செலும்புக்கூடு திறக்கப் பட்டே சத்திர சிகிச்சை செய்யப்படுகின்றது. ஆனால் இந்த மனித இயந்திரங்களின் மூலம் பென்சில் அளவான மூன்று துளைகள் மாத்திரம் போடப்பட்டு சத்திரசிகிச்சை செய்யப்படும். இதனால் விரைவாக குண மடைந்து, நோயாளி சாதாரணமாக இயங்க முடிகின்றது.

இதைவிட மேலும் சில நன்மைகள் இந்த இயந்திர மனிதனின்மூலம் சத்திரசிகிச்சை செய்வதால் ஏற்படுகின்றது. ஒரு சாதாரண சத்திர சிகிச்சையிலும் கூட, இரண்டு மூன்று சத்திரசிகிச்சை வைத்திய நிபுணர்கள், ஒரு மயக்கமருந்து வைத்தியர், பல மருத்துவ தாதிமார் இப்படியாக குறைந்தது 12 பேராவது சத்திரசிகிச்சைக் கூடத்தில் காணப்படு வார்கள். ஆனால் இந்த இயந்திர மனித சிகிச்சையில் பலரின் தேவை அங்கு தேவையற்றதாகின்றது. இன்னுமொரு முக்கிய நன்மை என்னவென்றால் பல மணித்தி யாலங்கள் நீளமான நேரம் எடுக்கும். சத்திரசிகிச்சையின் போது வைத்திய நிபுணர்கள் களைப்படைந்து விடுவார்கள். இதனால் தவறுகள் ஏற்பட வாய்ப்புண்டு. அதைவிட இயற்கையாக மனிதத் தவறுகள் (Human errors) என்பது தவிர்க்க முடியாதது. ஒரு சத்திரசிகிச்சை நிபுணரின் கையானது தவறுதலாக அசைவதின் மூலம் ஒரு உயிரே பறிக்கப்படலாம். ஆனால் மனித இயந்திரம் களைப்படைவதில்லை. அதைவிட கன கச்சிதமாக சிறிது பிழையுமில்லாது மிகச் சரியாக ஒரு மயிரிழை அளவேனும் பிசகாது இயங்கக்கூடியதாக ஆபத்துக்கள் குறை வாகும். மனித இயந்திரத்தின் மூலம் நோயாளியில் ஏற்படும் காயங்கள் குறை வானது மாத்திரமன்றி, சத்திர சிகிச்சைக்குரிய செலவும் குறைவாக உள்ளது.

முன்னர் குறிப்பிட்டவாறு, மனித இயந்திரங்கள் மூலம் Tele-surgery என்ற தொலைதூரத்திலும் சத்திரசிகிச்சை செய்யக் கூடியதாக உள்ளது. அதாவது பிரபலமான சத்திரசிகிச்சை நிபுணரின் சேவையை மிகத் தூர இடங்களிலும் பெறக்கூடியதாக இருக்கும். கனடாவில் இருந்தவாறே ஒரு சத்திரசிகிச்சை நிபுணர், இயந்திர மனிதன் மூலம் தூர இடத்தில் இலங்கை போன்ற இடங்களில் சத்திர சிகிச்சையை நடத்தமுடியும்.

ஆனாலும் இதன்மூலம் சில குறைபாடுகளும் இருக்கத்தான் செய்கின்றன. முக்கியமாக இது ஒரு புதிய தொழில்நுட்பம். இதனால் இன்னும் குறைபாடுகளும், முன்னேற்றம் அடைவதற்கு பல சந்தர்ப்பங்களும் உண்டு. மயக்கமருந்து நிபுணர்கள் புதிய தொழில் நுட்பத்திற்கேற்ப தமது செயற்பாடுகளையும், நோயாளியைக் கவனிக்கும் முறைகளையும் மாற்றியமைக்க வேண்டும். இயந்திரங்களை யும், தொழில்நுட்பத்தையும் நம்பியே இச்சிகிச்சை முறை இருப்பதால் இவை 100வீதம் வினைத்திறன் கொண்டதாக இருக்க வேண்டும். இவற்றில் திடீரென்று பிழை ஏற்பட்டால், இதைத் திருத்துவதற்கான கால-தாமதம் ஆபத்தில் முடியலாம்.

சத்திர சிகிச்சை நிபுணருடன் இந்த தொழில்நுட்ப சாதனங்களும் சேர்ந்து இருப்பதால் இதற்கான ஆரம்ப செலவு மிக அதிகமாக இருக்கும். தற்போது வளர்ச்சி யடைந்த மேற்குலக நாடுகளில்தான் இது சாத்தியமானதாக இருந்தாலும், மற்றைய நாடுகளுக்கு இந்த தொழில்நுட்பம் செய்வதற்கு சிலகாலம் எடுக்கும். இவற்றைவிட Tele-surgery எனப்படும் தூர இடங்களில் தொலைதொடர்பு மூலம் சத்திர சிகிச்சை செய்வதிலும் தற்போதுள்ள தொழில்நுட்ப வசதிகளை வைத்து நூறுவீதம் உத்தரவாதம் அளிக்க முடியாது.

எது எப்படியிருப்பினும் இது வளர்ந்துவரும் ஒரு தொழில்நுட்பம். பல முன்னேற்றங் களுக்கும், விருத்திகளுக்கும் இடம் உண்டு. எதிர்காலத்தில் இந்த சத்திரசிகிச்சை மூலம், விரைவாக தற்போதுள்ள தேக்கநிலை மாத்திரமல்லாமல் சத்திரிசிகிச்சைகளை செய்து முடிக்கவும், சத்திர சிகிச்சை செய்யப்பட்ட நோயாளிகள் விரைவில் குணமடையவும், இந்த Robotic surgery வழி வகுக்கும் என நாம் நம்பலாம்.



### விஜே குலத்துங்கம்

பலதுறைகளில் இவ்வகையான சத்திர சிகிச்சை செய்யப்பட்டாலும், அனைவருக்கும் தெரிந்த அல்லது கேள்விப்பட்ட இருதய சத்திர சிகிச்சையை உதாரணமாக எடுத்து அது பற்றிப் பார்ப்போம். முதலாவது Bypass சத்திரசிகிச்சை இயந்திர மனிதக் கைகளை உபயோகித்து பென்சில்வேனியாவில் டாக்டர் ரால்ப் டாமியானோவினால் செய்யப்பட்டது. இந்த சத்திர சிகிச்சையில் மூன்று இயந்திரக்

# வருமான வரியைக் குறைத்துக்கட்ட முடியுமா? II

மோட்கேஜ் வட்டி, மின்சாரம், தண்ணீர் போன்றவற்றிற்கான செலவுகளையே ஆகும். இந்த வருடத்தில் இத்தகைய வீட்டு அலுவலகம் செலவுகளைக் கணக்கில் எழுத முடியவில்லை என்றாலும், எதிர் காலத்தில் வரியைக் குறைக்க அவை உதவுகின்றன என்பதை மறந்து விடக் கூடாது. கொம்பியூட்டர்கள், Lease Car, சிலவகை உல்லாசச் செலவுகளைக் கணக்கில் காட்ட ரசீதுகள் மட்டும் போதாது. அவை உங்கள் தொழிலுக்கு எவ்வாறு பயன்பட்டது என்று தேவைப்பட்டால் நிரூபிக்கத் தகுந்த ஆதாரங்களையும் நீங்கள் வைத்துக் கொள்ள வேண்டும். வீட்டுத் தொழில் எவ்வளவு தூரம் வரியைக் குறைத்துக் காட்ட உதவுகின்றது என்று குறிப்பாக இந்த வாரம் பார்த்தோம். மேலும் வரியைக் குறைத்துக் கட்ட உதவும் மற்ற இனங்களைப் பற்றி இனிவரும் இதழ்களில் பார்ப்போம். தொடர்ந்து இக் கட்டுரையைப் படித்துப் பயன் அடையுங்கள். இக்கட்டுரை ஆசிரியருடன் தொடர்பு கொள்ள தொலைபேசி எண் - 416 430-0623

• • •



**சந்திரமௌலீஸ்வர சிவாலயம்**

ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்
காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.

**Singapore Communication**
Since 1991


$45.00/ Month
- Up to 700 Min Free
- Evenings & Weekends Free
- 2 Year contract
••• Offer Ends without notice •••

Family plan $40.00/ M/2 phones
- 100 Min Daytime to share /Weekend Free
- Upgradable for Free Evening with more Min 2500 Min Free
- between 2 phones V/M, C/W, C/C Free
- Buy one phone as low as $49.99 & 2nd Free
- ••• 2 year contract

More Info. Call: 416-740-5292
5010 Steeles Ave. W., Unit 17 ABC-(Kipling & Steeles)

**துரித பணமாற்றுச் சேவை**

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு




**மு. காசிப்பிள்ளை & சன்ஸ்**

416.267.8221

*"Making Dreams Reality"*



HomeLife GTA Realty Inc.
**Ravi R. Raveendran** BSc.(Eng)
Sales Representative
416•817•8479
Bus: 416•321•6969
1711 McCowan Rd., Suite #206, Scarborough, ON. M1S 3Y3
INDEPENDENTLY OWNED AND OPERATED, BROKER



Insurance & Financial Services
Balan Kanapathi (Agent)

- Auto
- Home
- R.R.S.P
- Life
- Disability
- Mutual Fund
- Group Insurance
- Child Education
- Travel & Business



416.321.1515 •905.294.2429
4433 Sheppard Ave. E. Suite 200, (Brimley/Sheppard)

**வீடு வாங்க, விற்க...**

ரவி பரமு
வீட்டுப் பிரதிநிதி

DIRECT: 416.262.4176
OFFICE: 416.321.6969



HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd. Suite #206, Toronto

# செந்தமிழ் எழுதுவோம்

'ஹலோ'
'வணக்கம் மாஸ்டர்'
'வணக்கம்'
'ஆசியுரைக்கும் வாழ்த்துரைக்கும் என்ன வித்தியாசம் என்று அறியலாமோ'
'பொருள் அளவில் இரண்டும் ஒன்றுதான். வாழ்த்துதல் நன்மை யுண்டாகும்படி இறைவனை வேண்டி நல்லுரை கூறுதல். சொல்லளவில் இரண்டும் வேறானவை. ஆசியுரை சமஸ்கிருதம். வாழ்த்துரை தமிழ். சமஸ்கிருதம் பாரதத்தின் வடக்கில் வழங்கியதால் அதனை வடமொழி என்றும் தமிழ் தென்பகுதியிற் பேசப்பட்டதால் தென்மொழி என்றும் அழைக்கப்படுகின்றன. சமஸ்கிருதம் ஆரியரது மொழியாதலால் ஆரியமொழி என்றும் தமிழ் திராவிடரது மொழியாதலால் திராவிடமொழி என்றும் பெயர்பெற்றன.
'வடக்கில் உள்ளவர்கள் எல்லோரும் ஆரியர்களோ?

## அறுவை - 33

'இன்றைய சூழ்நிலையில் எல்லோரும் எல்லா இடங்களிலும் இருக்கிறார்கள். ஆரியர் இந்தியாவுக்கு வடக்கேயுள்ள பகுதிகளிலிருந்து வந்து சிந்துவெளியில் வாழ்ந்த இந்தியர்களைத் தெற்குப்பகுதிக்குத் துரத்தி விட்டு இந்தியாவின் வடபகுதிகளில் குடியேறியவர்கள் என்ற ஆய்வுக்கருத்துப் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தொன்று...'
'அரசர்கள் எல்லோரும் சமஸ்கிருதமா பேசுகிறார்கள்?'
'ஒரு காலத்திற் பேசினார்கள். வேதங்களையும் ஆகமங்களையும் எழுதினார்கள். இராமாயணம் பாரதம் ஆகிய இதிகாசங்களும் பல புராணங்களும் சமஸ்கிருதத்திலேயே உள்ளன. இத்தகைய வளமான மொழி, இன்று வழக்கிழந்துவிட்டது.



தொன்மை வாய்ந்த தமிழ் மொழி இன்றும் பேசப்படும் மொழியாக - வாழும் மொழியாக விளங்குகிறது?'
'ஒரு சொல்லு சமஸ்கிருதமோ தமிழோ என்று எப்படி மாஸ்டர் கண்டுபிடிக்கிறது?'
'சமஸ்கிருதம் ஓரளவுக்குத் தெரிந்திருக்க வேண்டும். தெரிந்தவர்கள் கூட எது தமிழ் எது வடமொழி எனக் கண்டறிவதற்கு மிகவும் தொல்லைப்படுகிறார்கள். இரு மொழிகளும் நெடுங்காலமாக அக்கம் பக்கமாக வளர்ந்ததாலும் ஆரிய-திராவிட மக்கள் தொடர்புகளாலும் தமிழிலிருந்து சமஸ்கிருதத்துக்கும் சமஸ்கிருதத்திலிருந்து தமிழுக்கும் மொழிக் கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்ந்திருக்கின்றன. ஒரு சொல் எந்த மொழியைச் சேர்ந்தது என்பதை மேலெழுந்தவாரியாகக் கூறிவிட முடியாது. புஷ்பம் என்பது வடசொல் என்பது பலருக்குத் தெரியும். ஆனால் அது பூ என்ற தமிழ்ச் சொல் அடியாகப் பிறந்தது என்பது பலருக்கித் தெரியாது. அது போலவே வடசொற்களென நாம் பொதுவாகக் கருதும், இராத்திரி, மந்திரம், மதம், வானரம் முதலியன தமிழ்ச் சொற்களின் அடியாகப் பிறந்தவை. கஷ்டம், நஷ்டம், குஷ்டம், நமஸ்காரம், பிரதிஷ்டை, அபிஷேகம், விஜயம் என்று ஷ, ஸ, ஜ போன்ற எழுத்துக்களைத் தாங்கி வரும் சொற்களை வடசொற்களென எளிதாகக் கண்டு கொள்ளலாம். இவற்றைத் தவிர்த்து எழுதவேண்டுமென 1964இல் வெளிவந்த 'இலக்கிய உலகம்' என்ற நூலில்

நஷ்டமும் கஷ்டமும் வேஷமும் - எங்கள்
நற்றமிழ் மொழியினுக் குற்றதோர்
குஷ்டமிச் சொற்களைக் குப்பையில் - கொட்டிக்
கொழுத்துக.......
என்று குரல் எழும்பியிருக்கின்றேன்....?

'இப்போ நீங்கள் சொன்ன வடசொற்களுக்குப் பதிலாகப் பாவிக்கக்கூடிய தமிழ்ச் சொற்களைச் சொல்லுங்கோ மாஸ்டர்'

| | | |
|---|---|---|
| 'கஷ்டம் | - | தொல்லை, வில்லங்கம் |
| நஷ்டம் | - | இழப்பு, கேடு |
| நமஸ்காரம் | - | வணக்கம் |
| குஷ்டம் | - | தொழுநோய் |
| பிரதிஷ்டை | - | நிலைகொள்ளச் செய்தல், கோயில் கொள்ளச்செய்தல் |
| அபிஷேகம் | - | முழுக்கு, முழுக்காட்டுதல் |
| கும்பாபிஷேகம் | - | குடமுழுக்கு |
| விஜயம் | - | வெற்றி, வருகை |

சொற்களைக் கடன் வாங்கலாம். அதில் தவறில்லை. இன்று ஆங்கிலமொழி உலகமொழியாகத் திகழ்வதற்குக் காரணம் அதன் தாராளமான இரவல் வாங்கும் கொள்கைதான். அப்படி வாங்குகின்ற பொழுது சொற்களை முற்றாகவே ஆங்கில மயப்படுத்திவிடுகிறார்கள். தமிழிலும் பிறமொழிச் சொற்களைப் பாவிப்பதற்கு இலக்கண விதிமுறைகள் இருக்கின்றன. இவற்றுக்கேற்ப தமிழ்ப் புலவர்கள் வடசொற்களைச் செந்தமிழாக்கிக் காட்டியிருக்கிறார்கள். எனினும் கண்டபடி கடன்வாங்குவதை விடுத்து செந்தமிழ்ச் சொற்களுக்கே முன்னுரிமை கொடுத்தல் வேண்டும். வேறென்ன, வைக்கட்டுமா?'
'நல்லது மாஸ்டர். நன்றி. வணக்கம்'
'திரும்பவும் நீங்கள் மாஸ்டர் என்றுதானே சொல்லுறியள்'
'அப்ப என்னென்று சொல்ல...'
'அதுதான் நான் உங்களுக்குத்தரும் வீட்டுவேலை. கண்டு பிடியுங்கோ. வணக்கம்'

பத்து இலட்சம் பொன்னும் கேட்டாள்
சத்தியமும் வாங்கிப் போட்டாள் -
சகோதரரே
தாசிகள் நேசம் மோசமே - தொலை
பேசிகள் நேசம் வாழ்கவே!



கவிஞர் வி. கந்தவனம்


## யோகா சோதிடம்

• கிரகப் பொருத்தம் பார்த்தல்
• சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல் • சாதகக் குறிப்புக் கணித்தல்

416-299-8361

## Neelam silk

சுபமுகூர்த்தப் பட்டுக்கு என்றுமே இராசியான இடம்
'தமிழர் மத்தியில் தரமான பட்டுப் புடவை மாளிகை'

## நீலம் சில்க்

• SONALIKA PURE SILK
• JARDHOSHI SATIN & CREPE SILK
• JAPAN CRYSTAL SILK
• JAIPUR CRYSTAL SILK
• VASUNTHARA NETWORK CREPE



பட்டுத் தெரிவுகள்
அனைத்துக்கும்
"நீலம் சில்க்"

T.P: 416-778-7455 Fax: 416-778-8484
1453 GERRARD STREET, EAST (INDIAN BAZZAR)

T.P: 416-759-2002
2378 EGLINTON AVE., E. (Kennedy Rd. & Eglinton Ave, Scar.)

## MOHAN HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு • வாகன விபத்து • மன அழுத்தம் • விளையாட்டுக் காயங்கள் • தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537 / 416-291-3022
5200 Finch Ave, East Suite 210
(At Middle Field), Scarborough, M1S 4Z4

# அலர்ஜியால் உண்டாகும் தலைவலி

நமது விளம்பர வாசகர்களே! பொதுவாக நமக்கு அடிக்கடி உண்டாகக் கூடிய தலைவலியானது எதனால் வருகிறது என்பதை நாம் அறியாமலேயே உள்ளோம். தலைவலியானது பலதரப்பட்ட காரணங்களால் உண்டாகிறது. அதில் அலர்ஜியால் (ஒவ்வாமையால்) உண்டாகக் கூடிய தலைவலியை பற்றி இங்கு சுருக்கமாக பார்ப்போம்.



இந்த அலர்ஜியால் தலைவலி மூன்று வழிகளில் உண்டாகிறது. கண்பார்வை மூலம், சுவாசத்தின் மூலம், உணவு உண்ணுதலின் மூலம் இந்த அலர்ஜி, தலைவலி உண்டாகிறது.

கண்பார்வை : மிக்க வெளிச்சத்தை தரக்கூடிய மின்விளக்குகளில் அதிக நேரம் வேலை செய்வது சிலருக்கு ஒத்துவராமல் தலைவலி உண்டாக்கும். அதாவது புகைப்பட கமரா ஒளி, வெல்டிங் ஒளி, போட்டோக் கொப்பி மெஷின் ஒளி இவைகள் போன்ற அதிக வெளிச்சம் தரக்கூடிய இயந்திரங்களில் வேலை அதிகமாக செய்யும்போது கண்களுக்கு ஏற்றுக்கொள்ள இயலாத காரணத்தால் தலைவலி வரும். அடுத்து சிலருக்கு திரையரங்குகளில் திரைப்படங்கள் பார்த்தால் தலைவலி வரும். காரணம் குறைந்தது இரண்டு மணி நேரம் கண்களானது வெளிச்சமான திரைப் படங்களை பல கலர்களில் தொடர்ந்து பார்த்துக் கொண்டு இருந்தால் வரும். அடுத்து கம்யூட்டர் போன்ற இயந்திரங்களிலும் வேலை செய்யும் போது உண்டாகும்.

சுவாசம்: அதாவது இரசாயன பொருள்களால் உண்டாகக்கூடிய வாசனைகள் சிலர்க்கு தலைவலியை உண்டாக்கும். அவ்வகையில் முகப்பவுடர், உடல்சோப்பு, ஆடைகளுக்கு தடவக்கூடிய வாசனை திரவம் இவைகளில் உள்ள மணங்களால் (வாசனைகளால்) தலைவலி உண்டாகும். அடுத்து வீடுகளில் பயன்படுத்தப்படும் ஊதுபத்தி, கொசுபத்தி, எண்ணெய் இவைகளில் உள்ள மணங்களால் (வாசனைகளால்) தலைவலி உண்டாகும். மேலும், எரிபொருள் மண்ணெண்ணெய், பெட்ரோல், டீசல் இவைகளின் புகை உண்டாகக்கூடிய வாசனைகளாலும் ஏற்படும். இப்படி சிலருக்கு இது போன்ற இரசாயன வாசனைகள் அலர்ஜியாக இருந்தால் தலைவலி வரும்.

## உணவு உண்ணுவதால் தலைவலி (சாப்பிடும் பொருள்களால்)

எண்ணை நிறைந்த பண்டங்களை சாப்பிடும்போது தலைவலி வரும். அதேபோல் சிலருக்கு மசாலா போன்ற பொருள்கள் உள்ள உணவு பொருள்களை சாப்பிட்டால் வரும். ஒரு சிலருக்கு அசைவ உணவு, மதுபானங்கள் இவைகளால் உண்டாகும். இப்படி அலர்ஜியின், காரணங்களால் உண்டாகும் தலைவலியின் போது பிராணாயாமம், படுத்த நிலை சுவாசப் பயிற்சிகள், உசாட்டாதனா நிலையில் சுவாசப் பயிற்சிகள் செய்தால் தலைவலி நீங்கும். இப்படி அடிக்கடி அலர்ஜியின் காரணத்தால் உண்டாகக் கூடிய தலைவலி உள்ளவர்கள் அலோபதி, சித்ரா ஹோமியோபதி இவைகளில் யாராவது ஒரு வைத்திய முறையை தொடர்ந்து செய்து வருவதோடு இணை வைத்தியமாக மருத்துவமுறை யோகாசனத்தை தொடர்ந்து செய்து வந்தால் அலர்ஜியால் உண்டாகக் கூடிய தலைவலி பூரணமாக நீங்கும்.







YARL WINDOW

BLINDS & DRAPERY

BLINDS DRAPERIES AND SHUTTERS

- Venetian Blinds
- Vertical Blinds
- Roller Shades
- Pleated Shades
- Cellular Shades



FREE ESTIMATE

உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்

விபரங்களுக்கு: என். செல்வம்

416.332.8482 / 416.419.9247 / 905.201.7733

5210 Finch Ave., E. Unit #3 (Middlefield & Finch) Scarborough, ON



NTE AUTO

New Trade Engineering Inc.




ஸ்காபரோவில் 14வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத் திருத்த வேலைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

Also Air Condition Service & Repair

SIVABALAN

416.750.1573

என். ரி. இ. ஓட்டோ இங்க்

151 NATUCKET BLVD., UNIT #12, SCARBO., ON

IN NEW MILLENNIUM WE ARE ENTERING 11TH YEAR SERVICE IN SCARBOROUGH.



SHAWN TRUCK & FORKLIFT

DRIVING SCHOOL







Fork Lift licence
$75.00

Truck licence
$899.00

In Classes

365 (Learning Permit)
Dangerous Goods
Border Crossing
Air Brake (Z)
Log book

- A-Z & D-Z up grade • One on One Training
- Job Placement Right Away!
- உடனடி வேலை வாய்ப்புக்கள்
- வாரத்தில் ஏழு நாட்களும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.

Air brake
$175.00

Excellent Quality - Low Cost Training

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

Pl. Call: Deepa / Shan

416.412.7618 / 416.829.0603

40 NUGGET AVE., #8, Scarborough East (McCowan & Sheppard)

# வாழ்ந்தாலும் சாய்ந்தாலும் காமதேனு - காப்புறுதி

"மோட்கேஜ் லைவ் இன்சூரன்ஸ்" (Mortgage life insurance) என்றால் என்ன? இதனை "மோட்கேஜ்" (Mortgage) செய்த வங்கியின் ஊடாகவா? அல்லது நேரடியாகவே ஓர் ஆயுள் காப்புறுதி கம்பனியில் இருந்து பெற்றுக் கொள்வதா சிறந்தது?

"மோட்கேஜ் லைவ் இன்சூரன்ஸ்" என்பதனை தூய தமிழில் குறிப்பிடுவதானால் "அடமான ஆயுள் காப்புறுதி" என குறிப்பிடலாம்.

பொதுவாக வீடுகள் வியாபார நிறுவனங்கள், மற்றும் ஏதாவது வெறும் சொத்துக்களை சொந்தமாக வாங்குபவர்கள் அதனை பெற்று கொள்வதற்காக வங்கியில் இருந்து பெரும் தொகையான கடன் பெற்று கொள்ளும் போது வாங்கிய வீடு குறிப்பிடப்பட்ட வியாபார நிறுவனம் அல்லது சொத்து என்பவற்றினை அடமானமாக வைத்தே வங்கி பெரும் தொகையான கடன் தொகையினை வழங்குவது வழமையாகும்.

சில நேரங்களில் இக் கடனுக்கு உரியவருக்கு "உயிர் இழப்பு" என ஏதாவது ஏற்பட்டால் அது கடன் வழங்கிய வங்கியினை பாதிக்கும் என எதிர்பார்ப்பதால் கடன் பெறுபவரின் ஆயுளில் வங்கி ஒரு ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றினை ஏதாவது ஒரு காப்புறுதி கம்பனியுடன் செய்து கொள்ளும் இதுவே "அடமான காப்புறுதி" எனப்படும். இதுவும் ஒரு ஆயுள் காப்புறுதி! கடனுக்கு உரியவருக்கு உயிர் இழப்பு ஏற்படும் போது அவ் கடன் தொகையினை ஆயுள் காப்புறுதி கொடுத்து தீர்த்துவிட அவரது குடும்பத்திற்கு வீடு அல்லது வியாபார நிறுவனம் அல்லது சொத்து அடமானமில்லாது சொந்தமா கின்றது. வங்கியினூடாக அடமான கடனை பாதுகாப்பதற்காக ஓர் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தினை செய்து கொள்வதனை விட அதே ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தினை கடனுக்குரியவர் ஒரு நிறுவனத்தில் நேரடியாக செய்து கொள்ளுவதனால் அனுகூலங்கள் பல



உண்டு.

இவ் அனுகூலங்கள் பின்வருமாறு

1. இரண்டு இலட்சம் டொலருக்கு "அடமானம்" (Mortgage) இருக்கின்றது என வைத்து கொள்வோம். தாங்கள் "அடமானம்" பெற்ற வங்கி அதனை பாதுகாப்பதற்காக ஓர் ஆயுள் காப்புறுதி ஒப்பந்த்தினை (mortgage Insurance) ஏதாவது ஓர் ஆயுள் காப்புறுதியுடன் ஒழுங்கு பண்ணி தந்து அதற்கு என மாதா மாதம் பணம் செலுத்தி வரும் நேரம் மாதா மாதம் தங்கள் அடமானத் தொகையினை குறைப்பதற்காக வங்கிக்கும் ஒரு தொகை செலுத்தி வரும்போது, "உயிர் இழப்பு" என ஒன்று நடந்தால் எவ்வளவு தொகை அடமானத்தின் இறுதியில் இருந்ததோ அதே தொகையினையே அந்த ஆயுள் காப்புறுதிக் கம்பனியினால் வங்கிக்கு கொடுப்பனவு செய்து தங்களை அடமானத்தில் இருந்து விடுவிக்கும்.

அந்த அடமான தொகை இரண்டு இலட்சத்தில் இருந்து காலம் செல்லச்செல்ல குறைந்து கொண்டே போகும். இறுதியில் என்றோ ஒரு நாள் முழுவதும் பணம் செலுத்தி முடிவடைந்து விடும். முழுவதும் பணம் செலுத்தி, இறுதியில் அடமான கணக்கில் எதுவித கடன்களும் முடிய இக் காப்புறுதியும் முடிவடைந்து விடும். ஆனால் இதற்கு பதிலாக இதே இரண்டு இலட்சம் டொலருக்கு ஓர் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் நேரடியாகவே கம்பனியில் செய்தால் எந்த நேரமும், எந்த சந்தர்ப்பத்திலும் அவர்களின் குடும்பத்தவர்களுக்கு இதே இரண்டு இலட்சம் டொலரும் மாறாத தொகையாக கிடைக்கும்.

2. "உயிர் இழப்பு" என ஒன்று நடக்கும் போது இவ் இரு இலட்சம் டொலரும் நேரடியாக கம்பனியில் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் பெற்று இருந்தால் அவர்களின் குடும்பத்திற்கு வருமானவரி இல்லாத முழுத் தொகை பணமாக கிடைக்கும். பணத்தினை விரும்பிய படி கையாளலாம். மிச்சமாக உள்ள அடமானத்தினையும் செலுத்தி முடித்து காலியாக்கலாம். இன்னுமோர் வீட்டிலோ அல்லது சொத்தில் முதலீடும் செய்யலாம்.


சிவ. பஞ்சலிங்கம் B. Com,

(Licensed Insurance Broker)

காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:

416.321.0999


ஆனால் வங்கியினூடாக, இவ் அடமான ஆயுள் காப்புறுதியினை பெற்று கொள்ளுவதால் வங்கிக்கு அக் கடனின் தொகை கொடுப்பது மட்டும் தீர்க்கப்படும்.

3. நேரடியாக ஒரு ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் பெற்று வைத்திருக்கும் போது அடமானம் யாவும் கொடுத்து தீர்க்கப்பட்டாலும், ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் தொடர்ந்து இருக்கும். என்றோ ஒரு நாள் ஏற்பட போகும் உயிர்இழப்பு என்பதனூடாக அவர்களின் குடும்பத்திற்கு இவ் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தில் கிடைக்கும் வரி இல்லாத பணத்தொகை ஒரு முதலீடாக, சொத்தாக உருவாக போகிறது. தமது சந்ததியினருக்கு, பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுக்கு ஒரு பெரிய திரண்ட சொத்தினை உருவாக்கி விட்டு இவ் உலகினை விட்டு நிம்மதியாக போக கூடியதாக இருக்கும். ஆனால் அதே தொகையினை அடமானக் காப்புறுதியாக வங்கியினூடாக வாங்கும் போது அடமானம் முடிய அல்லது வீடு, சொத்தினை விற்பனை செய்ய காப்புறுதியும் தங்கள் கையினை விட்டு போய் விடும்.

4. நேரடியாக இவ் ஆயுள் காப்புறுதியினை வாங்கும் போது விரும்பிய மாதிரி விரும்பிய கம்பனியில் விரும்பிய தரங்களில் பல நேரங்களில் வங்கியினூடாக பெறுவதை விட மலிந்த விலையில் அரச அனுமதி (லைசென்ஸ்) பெற்று ஆலோசனை வழங்கும் காப்புறுதி முகவர் ஒருவரின் உதவியுடன் வாங்கி கொள்ள முடியும். ஆனால் இந்த மாதிரியான வசதிகள் ஒன்றும் நேரடியாக வங்கியினூடாக வாங்கும் போது இருக்க மாட்டாது.

5. வங்கியினூடாக அடமான ஆயுள் காப்புறுதியினை பெறும்போது வங்கி மட்டுமே அதன் உரிமையாளர். தங்கள் விருப்பு வெறுப்புகளை அதில் நிற்பந்திக்க முடியாது. ஆனால் நேரடியாக ஆயுள் காப்புறுதியினை கம்பனியில் இருந்து வாங்கும் போது, அதன் உரிமையாளராக தாங்கள் இருப்பதால், அதில் தங்கள் விருப்பு வெறுப்புகளின்படி காப்புறுதி சட்ட ஒழுங்கு விதிகளுக்குள் அடங்கிய மாற்றங்கள் எதனையும் செய்து கொள்ளலாம். தங்கள் உயிர் இழப்பின் பின்னர் பணம் எவருக்கு போய் சேர வேண்டும் என்பதனை விரும்பியபடி நிர்ணயித்து மாற்றம் செய்யும் உரிமை தங்களுக்கு உண்டு



6. நேரடியாக கம்பனியில் இருந்து நல்ல தொகைக்கு ஒரு நிரந்தரமான ஆயுள் காப்புறுதி


தொடர்ச்சி 18ம் பக்கம்



## கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

- வீடு வாங்க விற்க மற்றும் இலவச ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள
- முதல் முறையாக வீடு வாங்குபவர்களிற்கான சலுகைகளை அறிய
- குறைந்த வட்டி வீதத்தில் Mortgage செய்து கொள்ள

அழையுங்கள் **நந்தா**





**Nantha Aiyadurai**, B.Eng.

Sales Rep.

**Office :** 613.823.7555

**Cell :** 613.866.9931

**Toll Free :** 1 800 472.6512

COLDWELL BANKER

Coldwell Banker Coburn Realty

## DEBT & MORTGAGE SOLUTIONS !!



- கடன் தொல்லையா?
- கடன்காரர்களின் தொந்தரவா?
- Credit பிரச்சனையால் Mortgage கிடைக்கவில்லையா?

**கவலைப்படாதீர்கள்!**

அனைத்து வித பொருளாதார பிரச்சனைகளுக்கும் தீர்வு காண

முதல், இரண்டாவது, மூன்றாவது Mortgage பெற அழையுங்கள்

**ராஜ்**

416-835-6695

Call : 'RAJ'

for all kinds of Debt & Mortgage Solution

Lendingtree.ca

# கனடாவில் "விளம்பரம்" பத்திரிகையின் 15 வருட பாதையில்...

முதலாம் பக்கத் தொடர்ச்சி...

பாரம்பரியமாக செய்திகளை வெளிப்படுத்துவதில் உள்ள முறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தியது. இலத்திரனியலின் உபயோகம் வானொலி, தொலைக்காட்சி, இணைய வலையம் என பலவகைப்பட்ட வடிவங்களைக் கொண்டு வந்தது. இதனால் பத்திரிகைத்துறை என்ற சொற்றொடர் விடுபட்டு ஊடகத்துறை என்ற புதிய சொற்றொடர் அறிமுகப்படுத்தப்பட்டது.

ஊடகத்துறையானது தமிழர்களின் வாழ்வியலிலும் முக்கியமான துறையாக இருந்து வருகிறது. அதன் தேவையையும் அவசியத்தையும் தமிழர் உணர்ந்திருந்தனர். நம் தாயகத்திலும் ஊடகத்துறை வளர்ச்சி அடைந்தது; வளர்ச்சியுற்றே வருகின்றது. நாடுகளில் ஏற்படும் அரசியல், பொருளாதார மாற்றங்களினால் தமது தாயகத்தை விட்டு மக்கள் காலங்காலமாகப் பல்வேறு இடங்களிற்குப் புகலிடம் தேடிப் புலம்பெயர்ந்தனர். இலங்கைத் தமிழர் எண்பதுகளின் ஆரம்பத்தில் அரசியல், போர் அனர்த்தங்களினால் தமது சுய சுதந்திரத்தையும் பாதுகாப்பையும் தேடி பாரியளவில் மேற்கு நாடுகளிற்கும், இந்தியாவிற்கும் புலம்பெயர்ந்தனர்.

> 1982ஆம் ஆண்டு ஒக்ரோபரில் ரொறொன்ரோவில் 'செந்தாமரை' என்ற பத்திரிகை வெளிவரத்தொடங்கியது. இதுவே வடஅமெரிக்காவில் வெளிவந்த முதல் தமிழ்ப்பத்திரிகை என இதன் பொறுப்பாளர் திரு. சின்னத்துரை செந்தில்வேல் இன் கூறுகிறார்.

புலம்பெயர்ந்தவர்களில் சகல தரப்பினரும் அடங்குவர். அவ்வாறு புலம் பெயர்ந்தவர்கள் தாம் சென்றடைந்த நாட்டு வாழ்க்கை முறையுடன் ஒத்துப் போக வேண்டியிருந்தது. தமது தாய் நாட்டு வாழ்க்கை முறையுடனும் அல்லாமல் புகலிட வாழ்க்கை முறையுடனும் அல்லாமல் இரண்டிற்கும் இடைப்பட்ட ஒரு புதிய வாழ்க்கை முறையை அமைக்க வேண்டியவர்களாக இருந்தார்கள். அவ்வாறான புதிய வாழ்க்கை முறைக்குத் தம்மை பழக்கப்படுத்திக் கொண்ட மக்களினால் புதிய கலாசாரம் புலம் பெயர் நாடுகளில் உருவாகிற்று. புலம்பெயர் புதிய சமுதாயம் உருவாகும் போது பலவிதமான இன்னல்கள் ஏற்படுவது இயல்பானதே. இவ்வாறு உருவாகின்ற சமுதாயம் ஆரம்ப காலகட்டத்தில் ஒரு முழுமையான சமுதாயமாக இருக்க முடியாது. கால மாற்றத்திற்கேற்ப தமது சமுதாயத் தேவைக்கேற்ப தடம்பதிக்க வேண்டிய துறைகளில் தமது கால்களை ஊன்றுகின்றது. அவ்வாறான துறைகளில் இன்றியமையாத துறையாக ஊடகத்துறையும் அமைந்துள்ளதென்றால் அது மிகையாது. இந்த மாற்றம் புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல, உலகிலுள்ள சகல மக்களிற்கும் நடந்தே வருகின்றது. இரண்டாவது உலகப்போரின் பின்னர் ஐரோப்பாவிலிருந்து பெருந்தொகையான மக்கள் வட அமெரிக்காவிற்கு புலம்பெயர்ந்தார்கள். அவர்களும் இவ்வாறே தமது ஆரம்பகால வாழ்வை அமைத்தனர். கால நீரோட்டத்தில் தமது வாழ்க்கை முறையை ஒழுங்குபடுத்திக்கொண்டனர்.

ஈழத்தமிழர் என்ற ஓர் இனம் உலகில் இருக்கின்றது என்பதை மேற்குலகம் அறிந்து கொண்டதே 1980 களிற்கு பின்பாகவே. அடக்குமுறைகளின் உச்சக்கட்டமாக 1983இன் ஆடிக்கலவரம் தமிழ் மக்களை பல்வேறு திசைகளிலும் சிதறி ஓடவைத்தது. இந்தக் காலகட்டத்தில் தமிழ் மக்களிற்கு கடவுச்சீட்டு (Visa) இல்லாமல் தங்கள் நாடுகளிற்குள் அனுமதித்த சில நாடுகளும் இருந்தன. இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பலர் கனடாவிற்குள் நுழைந்தனர். காலப்போக்கில் இவ்வசதி நிறுத்தப்பட்டது. பெரும்பாலான தமிழ் மக்களின் கனடாவிற்கான வருகை இதுவே என்று கூறமுடியும். இதற்கு முன்பாக கனடாவில் இங்குமங்குமாக ஒருசிலர் இருந்தார்கள். அதிலும் கூடிய பகுதியினர் தமிழ்பேசக்கூடிய இந்தியர் .



புலம்பெயர்ந்த புதிய தமிழ் சமூகத்திற்கு தமது தாயகச் செய்திகளையும் அத்துடன் புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழ் மக்களின் செய்திகளையும் அந்தந்த நாடுகளின் வாழ்க்கை முறை, செயல் முறை, அரசியல் அமைப்பு, சட்டதிட்ட அமைப்பு, கல்வி அமைப்பு போன்ற சகல விடயங்களையும் அறிந்துகொள்ள வேண்டிய அவசியமும், ஆவலும் இருந்தது. புலம்பெயர்ந்த மக்கள் மத்தியில் அதற்கான தேடலும் ஆர்வமும் அதிகளவு காணப்பட்டமையினால் ஊடகத்துறையானது அத்தியாவசியமான தொன்றாக விளங்கியது. இதனால் பத்திரிகைகள், வானொலிகள், தொலைக்காட்சிகள், தொலைபேசிச் சேவைகள், விளம்பரப் பலகைகள், விளம்பரக் கைநூல்கள், இணையச் சேவைகள், தொலைநகல் சேவைகள் என ஒன்றன் பின் ஒன்றாக புலம்பெயர் தமிழர்களால் ஆரம்பிக்கப்பட்டன.

குறிப்பாக கனடிய நீரோட்டத்தில் கலந்துவிட்ட புலம்பெயர்ந்த தமிழர்; ஊடகத்துறையிலும் தமது பங்களிப்பைச் செய்தனர். ஆரம்ப காலங்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஊடகத்துறையில் தமது காலைப் பதித்த தமிழர் அதன் தேவையும், அவசியமும் மேலும் மேலும் ஏற்பட தமது எல்லைகளை விரிவாக்கத் தொடங்கினர். கையெழுத்துப் பிரதிகளாக, ஒட்டுப்பத்திரிகைகளாக, இதழ்களாக முளைத்த ஊடகத்துறையானது சஞ்சிகைகள், வானொலிகள், தொலைக்காட்சிகளென பரிணாம வளர்ச்சி அடையத் தொடங்கியது. இப் பரிணாம வளர்ச்சியில் முட்டுக் கட்டைகளாக பண நெருக்கடிகள், நேரப்பற்றாக்குறை, தொழில்நுட்ப அறிவுப் பற்றாக்குறை போன்ற பல இன்னல்கள் ஏற்படத்தான் செய்தன. அவற்றையும் மீறி சில எதிர்நீச்சல் போட்டன. சில பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலிகள் நின்று போக புதியன வரத்தொடங்கின. இவ்வாறு கனடியத் தமிழ் சமூகத்தில் பல பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலிகள், தொலைக்காட்சிகள் வருவதும் போவதுமாக காணப்பட்டன; காணப்படுகின்றன.

காலமாற்றத்துடன் சஞ்சிகைகளும், பத்திரிகைகளும் உருவம் பெறத்தொடங்கின. எண்பதுகளின் தொடக்கத்திலிருந்து மக்களின் வாசிப்புப் பசிக்கு தீனிபோட போதிய பத்திரிகைகளோ, சஞ்சிகைகளோ இருந்ததாகக் கூறமுடியாது. அதுமட்டுமல்ல, கனடாவில் தமிழரின் வாழ்வியல் ஆரம்பகாலமாக இருந்ததால் அவர்களின் தேவைகளும் வெவ்வேறாக இருந்தன. அதனை நிறைவேற்றவே மக்கள் முயற்சித்தார்கள் எனவும் கூறுவதில் தவறு இல்லை. இக்காலத்தில் கனடாவிற்கு வரும் மக்களில் அதிகமானோர் மொன்றியல் நகரத்தையே தமது இறங்கு துறையாகப் பாவித்தார்கள். எனவே மொன்றியலில் தமிழ் மக்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்பட்டது. இம்மாநகரில் 80களின் ஆரம்பத்தில் வந்த பெரியோர்களினது முயற்சியாலும் அவர்களினது நற்சிந்தனையாலும் 1983இல் மொன்றியலில் முதலாவது தமிழ் கையெழுத்துச் சஞ்சிகை 'தமிழ் எழில்' என்ற பெயரில் வரத்தொடங்கியது. இதுவே கியூபெக் மாகாணத்தில் தமிழில் வெளிவந்த முதல் தமிழ்ச் சஞ்சிகை எனக் கூறலாம். இதுவொரு தமிழ் கையெழுத்துச் சஞ்சிகையாகும். இதனைத் தொடர்ந்து மொன்றியலில் இயங்கி வந்த 'தமிழர் ஒளி' நிறுவனத்தினர் 'தமிழ்த் தென்றல்' என்ற வானொலிச் சேவையையும் ஆரம்பித்தனர். காலநீரோட்டத்தில், மொன்றியல் நகரில் இருந்து மக்கள் ரொறொன்ரோ மாநகரிற்கு இடம் பெயரத்தொடங்கினர். இதற்கு மொழி, தொழில் போன்றன ஏதுக்களாக இருந்தன. இதனால் படிப்படியாக, ரொறொன்ரோவில் தமிழ் மக்களின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது.

இதற்கு முன்பாக 1982ஆம் ஆண்டு ஒக்ரோபரில் ரொறொன்ரோவில் 'செந்தாமரை' என்ற பத்திரிகை வெளிவரத்தொடங்கியது. இதுவே வடஅமெரிக்காவில் வெளிவந்த முதல் தமிழ்ப்பத்திரிகை என இதன் பொறுப்பாளர் திரு. சின்னத்துரை செந்தில்வேல் இன் கூறுகிறார். மற்றும் ஈழத்துப் பூராடனார் என்று அழைக்கப்படும் திரு. செல்வராஜகோபாலின் 'உலகளாவிய தமிழர்' பத்திரிகையும் இந்தக் காலத்தில் வெளிவந்தது. இப்பத்திரிகைகள் வெளிவந்த முறையை ஆராயும் போது எழுத்துக்களை வெட்டி ஒட்டியே இவை வந்ததாக அறியக்கூடியதாக உள்ளது. திரு. செல்வராஜகோபால் அவர்களின் மகனின் முயற்சியால் கணினியின் உதவியுடன் 'நிழல்' என்ற கணினிச் சஞ்சிகை உருவம் பெற்றது. அதுமட்டுமல்லாமல் தமிழ் உலகில் தமிழ்ப் பிரசுரிப்புத் தொழில்நுட்பம் இலகுவாகியது. அதுவே தமிழ் கணினி அச்சமைப்பின் கண்டுபிடிப்பு ஆகும். இந்தக் காலகட்டத்தில் தான் தமிழ் எழுத்துக்களின் மின்கணினி வடிவம் கனடாவில் வளரத்தொடங்கியது. இவற்றின் வளர்ச்சிக்கு இதேகாலகட்டத்தில் கணினியில் தமிழ் எழுத்துக்களை உருவாக்க மிக அயராது உழைத்தவர்களில் கலாநிதி விஜயகுமார், சசி பத்மநாதன் இருவரையும் குறிப்பிடலாம்.

மேலும் 1983இல் வெளிவரத்தொடங்கிய 'நிழல்' சஞ்சிகையின் ஆலோசகரான ஈழத்துப் பூராடனாருடன் சம்பாசித்தபோது, ஆரம்பத்தில் ஈழத்திலிருந்து தருவித்த அழைப்பிதழ்கள், விளம்பரங்கள் போன்றவற்றின் வசனப்பகுதியை கத்தரித்து ஒட்டி, பெயர், இடம், காலம் போன்றவற்றை தனி எழுத்து நறுக்குகளால் ஆக்கி அச்சமைப்பு செய்ததாகக் கூறினார். இதில் ஏற்பட்ட சிரமங்களைப் பற்றிக் கூறியபோது, ஈய எழுத்துக்களால் அச்சுக் கோர்ப்பதே அதிகநேரம் எடுக்கும் செயலாக தான் எண்ணி இருந்ததாகவும் இப்பொழுது கத்தரித்து ஒட்டி அச்சமைப்பு செய்வது மிகச் சிரமமானதாகவும் அதிக நேரம் எடுக்கும் செயலாக இருந்ததாகவும் கூறினார். பின்னர் தமிழ் கணினியின் மூலம் ஒவ்வொரு எழுத்துக்களையும் உருவாக்கி தலைப்புச் செய்திகளை பிரசுரித்ததாகவும் கூறினார். பலமணி நேரம் செலவு செய்து கணினியை உபயோகித்து ஒரு பத்திரிகைக்குரிய முழுவிடயங்களையும் செய்யக்கூடிய நிலை இப்போது வளர்ந்துள்ளது. இப்போ பல நுணுக்கமான விடயங்களை பத்திரிகையை எடுத்துப் பார்க்கும் போது அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது என மனமகிழ்வு கொள்கிறார்.

> 1990களின் ஆரம்பத்தில் மாதாந்த சஞ்சிகையான 'தமிழர் தகவல்' எஸ். திருச்செல்வத்தை ஆசிரியராகக் கொண்டும், 'நான்காவது பரிமாணம்' என்ற கலை இலக்கிய மாசிகை க. நவம் அவர்களை ஆசிரியராக கொண்டும் வெளிவந்தன. இங்கு 'தமிழர் தகவல்' மாதாந்த சஞ்சிகை 1991 ஆம் ஆண்டு ஆரம்பித்து தொடர்ந்து இன்றும் மாதாந்தியாக வெளிவந்து கொண்டு இருக்கின்றது. 'பொதிகை' சஞ்சிகை 1993 ஆம் ஆண்டு ஜனவரியில் எஸ். ஜெகதீசனால் ஆரம்பிக்கப்பட்டு இதே ஆண்டு ஜுன் 14ஆம் திகதியிலிருந்து நிருபா தங்கவேற்பிள்ளையினால் நடத்தப்பட்டு வந்தது. என்னுடைய எண்ணத்தில் இவரே கனடாவில் வெளிவந்த தமிழ் சஞ்சிகையின் முதலாவது பெண் ஆசிரியை ஆவார். ஆசிரியர் செல்வத்தின் இலக்கிய சஞ்சிகை 'காலம்', விஜய் ஆனந்தின் கலை இலக்கிய மாத இதழ் 'ரோஜா', கா. விஜயசுகந்தனை ஆசிரியர்களில் ஒருவராகக் கொண்டு அறிவியல் சஞ்சிகை 'நுட்பம்', சிவனேசன் சிவகுமாரனின் 'சந்திப்பு', சி. பரோபனின் இளைய தலைமுறையினரின் கலை இலக்கிய ஏடு 'சுடொரொளி', இராஜேஸ்வரனின் 'வியாபாரச் செய்திகள்' ராம் சிவதாசனின் மாதாந்த வெளியீடு 'மறுமொழி', Dr. என். எம். குமாரின் நலம்பேணும் மாத சஞ்சிகை 'மருத்துவம்', புலவர் ஈழத்து சிவானந்தனின் 'தமிழ் மகள்', N. ரஞ்சனின் கலை இலக்கிய மாதமலர் 'சுவடுகள்', உதயனின் 'உதயம்', 'ஆத்மஜோதி', 'தூசி', 'கனடா தமிழ்க்குரல்', 'மதம்', 'மதில்' இன்னும் பல சஞ்சிகைகளும் 90களில் வெளிவந்தன. 2002 ஆம் ஆண்டின் பின்னர் உலகத்தமிழோசை, தமிழ் திரை, அமுதம், ஆனந்தம் ஆகிய சஞ்சிகைகளும் வெளிவரத்தொடங்கின.

காலஓட்டத்துடன் கனடாவில் தமிழ் மக்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கத்தொடங்கியது. 1985, 1986 களில் இலங்கைத் தமிழ்மக்களின் வருகை மேலும் அதிகரித்தது. இங்கு வந்து சேரும் மக்களிற்குள்ள தேவைகளும் அதிகரிக்கத்தொடங்கின. அரச நிறுவனங்களினால் பல வசதிகள் செய்து கொடுக்கப்பட்டபோதும் அவற்றைப்பற்றி போதியஅறிவு, விளக்கம், வழிகாட்டி (Guide) இல்லாததால் அந்த வசதிகளை நம்மவர்கள் பெறுவதும் பயன்படுத்துவதும் மிகக் கடினமாக இருந்தது.

1987ஆம் ஆண்டு தைமாதத்திலிருந்து 'உலகத்தமிழர்' பத்திரிகை உலகத்தமிழர் இயக்கத்தினால் வெளியிடப்பட்டது. இப்பத்திரிகை ஒரு மாதாந்த பத்திரிகையாக இலவசமாக வெளிவந்தது. 1989ஆம் ஆண்டில் ஜோர்ஜ் குருசேவ் இன் 'தாயகம்' பத்திரிகை வெளிவரத்தொடங்கியது. இதே காலகட்டத்தில் T.K. பரமேஸ்வரனின் 'தமிழோசை' பத்திரிகை வெளிவந்தது. டிசம்பர் 1993இல் இருந்து 'தமிழோசை' பத்திரிகை பெயர் மாற்றம் பெற்று 'ஈழநாடு' என்ற பெயருடன் வெளிவரத்தொடங்கியது. தாயகம் பத்திரிகையும் 1995 ஆம் ஆண்டுடன் தனது ஆயுள் காலத்தை முடித்த போதும் அண்மையில் நவம்பர் 2004 இல் ஒரு இதழ் வெளிவந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

1980 களில் ஆரம்பித்த பத்திரிகைகளில் உலகத்தமிழர் பத்திரிகை மாத்திரம் இன்றுவரை அதே பெயருடன் வெளிவந்து கொண்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. உலகத்தமிழர் பத்திரிகை ஆரம்பத்தில் மாதாந்தியாக இலவசமாக வெளிவந்து கொண்டிருந்தது. இப்பத்திரிகை மாதமிரு முறையாக வெளிவந்து, பின்னர் இன்றுவரை வாராந்தியாக வெளிவந்து கொண்டிருக்கிறது.

1990 ஆம் ஆண்டு காலப்பகுதியிலேயே ரொறொன்ரோவில் ஊடகத்துறையில் பல மாற்றங்களை காணக்கூடியதாக இருந்தது. 1990 களில் குறைந்தது 20 பத்திரிகைகள், 10 இற்கு மேற்பட்ட சஞ்சிகைகள், ஐந்திற்கு மேற்பட்ட வானொலிகள், மூன்றிற்கு மேற்பட்ட விளம்பரக் கைநூல்கள், இரண்டிற்கு மேற்பட்ட தொலைக்காட்சிகள் வெளிவந்தன. இவற்றில் சில இன்னும் வெளிவருகின்றன. பல நின்றுபோயின என்பது கவலையுடன் தெரிவிக்கவேண்டிய விடயம்.

1990 இன் ஆரம்பப் பகுதியில் உலகத்தமிழர், செந்தாமரை, தாயகம், தமிழோசை பத்திரிகைகள் வெளிவந்துகொண்டு இருந்தன. இவையாவும் பத்திரிகைகளாக, செய்திகளைத்தாங்கி வெளிவந்தன. இந்தக்காலகட்டத்தில் கனடாவில் ஏறக்குறைய 50,000 தமிழ்மக்கள் வசிப்பதாக மதிப்பிடப்பட்டது. மேலும் இந்தத் தொகையில் கூடிய தொகையினர் ரொறொன்ரோ பெரும்பாகத்தில் வசிப்பதாக கொள்ளப்பட்டது. தமிழ் மக்கள் கணிசமாக வாழ்வதால் இவர்களின் தேவைகள் வேறுபடத்தொடங்கியது. புதிதாக வருபவர்களிற்குரிய அனேக உதவிகள், தேவைகள், சேவைகள் தம்மைச் சார்ந்தவர்களாலும் நண்பர்களாலும் தெரியப்படுத்தப்பட்டும், செய்யப்பட்டும் வந்தன.

இவ்வாறான உதவிகள், தேவைகள், சேவைகள் போன்ற பல விடயங்களை நிவர்த்தி செய்யும் நோக்குடன் 1990இன் இறுதிப்பகுதியில் 'விளம்பரம்' பத்திரிகையின் எண்ணக்கரு உருவாகியது. இவ் எண்ணக்கரு என்னிடம் மட்டும் உருவாகவில்லை. என்னுடன் சேர்ந்த பல நண்பர்களின் உதவியுடனே உருவாகியது. எமது நோக்கம் ரொறொன்ரோவின் மத்திய பகுதியில் அமைந்திருந்த றிப்ளக்ஸ் நிறுவனத்தின் பொறுப்பாளர் ஜோர்ஜ், சந்திரா போன்றவர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டு 'விளம்பரம்' என்று ஒரு பத்திரிகையாக 1991ஆம் ஆண்டு பங்குனி மாதம் முதலாம் திகதியில் முதலாவது இதழுடன் மலர்ந்தது. இவ் விளம்பரம் இதழ் மாதத்திற்கு இருதடவை முதலாம், பதினைந்தாம் திகதிகளில் வெளியிடப்பட்டது. அன்றைய காலகட்டத் தேவைகளைக் கருத்தில் கொண்டு 'விளம்பரம்' விளம்பரங்களைக் கொண்ட பத்திரிகையாகவே வெளிவந்தது. மக்களை இணைக்கும் பாலம் (We Bridge People) என்ற குறியீட்டை பத்திரிகையின் அடையாளமாகக் கொள்ளப்பட்டது. எடுத்துக்காட்டாகக் கூறினால் இடமாற்றுத்தேவை, இருப்பிடம் வாடகைக்கு, வாகனங்கள் விற்க வாங்க, திருமண சேவை, உணவகங்கள் போன்றவற்றைக் கூறலாம். முக்கியமாக அன்று எமது விளம்பரத்தில் ஆரம்பித்த 'நிரு பிராண்ட்' விளம்பரம் இன்றுவரை ஒவ்வொரு இதழிலும் தொடர்ந்து வெளிவருவது இதனை உறுதிசெய்கிறது.

1993இல் ஐரோப்பாவிலும் 'விளம்பரம்' பத்திரிகை சூரி வடிவேலுவை நிர்வாகியாக வைத்து நடத்தப்பட்டது. கனடாவில் வருவது போலல்லாமல் இலண்டன் தமிழ் மக்களின் தேவைகளை நோக்கமாகக் கொண்டு விளம்பரங்களுடன் செய்திகள், கட்டுரைகள், கவிதைகள் போன்றவையும் இடம்பெற்றன. முக்கியமாக 'விளம்பரம்' பார்வையில் "நாடும் நடப்பும்" என்ற பகுதி மக்களை மிகவும் கவர்ந்ததாக இருந்தது. அன்றைய காலகட்டத்தில் இலண்டன் மாநகரில் நடப்பவற்றை எண்ணக்கருவாக வைத்து இந்தப் பகுதி வெளிவந்துகொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

'ஈழகேசரி' என்ற பத்திரிகை யூலை 1993 இல் வே. இராஜலிங்கம் அவர்களால் தொடங்கி நடத்தப்பட்டது. 1995இல் இப்பத்திரிகை நிறுத்தப்பட்டு 'நம்நாடு' என்னும் பத்திரிகை இவ் ஆசிரியரால் தொடங்கப்பட்டது. இதே காலப்பகுதியில் திரு. சந்திரமோகனின் பத்திரிகை சிலகாலம் வெளிவந்தது.

ஆரம்பத்தில் வெளிவந்த செந்தாமரை பத்திரிகை திரு. எஸ். செந்தில்வேலினால் நடத்தப்பட்டது. இப்பத்திரிகையின் ஆசிரியர்கள் மாற்றம் பெற்றதுடன் சிலகாலம் சச்சி மாஸ்டர் நடத்தினர். இப்பத்திரிகை வெவ்வேறு ஆசிரியர்களைக் கொண்டு பிரசுரிக்கப்பட்டது. சிலகாலம் திரு. டி. பி. எஸ். ஜெயராஜ் ஆசிரியராக இருந்தார். பின்னர் இவர் 'மஞ்சரி' பத்திரிகையை சிலகாலம் நடத்தினார். ஒரு குறிப்பிட்ட காலம் செந்தாமரை பத்திரிகை ஒன்ராரியோ செந்தாமரை, தமிழர் செந்தாமரை என வெளிவந்து கொண்டிருந்தது. 1995 மார்ச் 16ஆம் திகதியிலிருந்து கனக அரசரட்ணத்தை ஆசிரியராகக் கொண்டு 'தமிழர் செந்தாமரை' என்ற பெயரில் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. ஆரம்பத்தில் பணத்திற்கு விற்பனை செய்யப்பட்டுவந்த தமிழர் செந்தாமரை இன்று இலவச வெளியீடாக வெளிவருகின்றது.

1994 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆர். என். லோகேந்திரலிங்கத்தை ஆசிரியராகக் கொண்டு 'சூரியன்' பத்திரிகை வெளிவந்தது. இதேகாலப்பகுதியில் 'ஈழமுரசு' பத்திரிகையும் வெளிவரத்தொடங்கியது. ஈழமுரசுப்பத்திரிகை இலவசமாக இன்றும் வெளிவருகின்றது. இதே காலத்தில் ராவுத்தர், துருவ சங்கரி ஆகியோரினால் 'சக்தி' பத்திரிகை நடத்தப்பட்டது. சூரியன் பத்திரிகை குறுகிய காலத்தில் நிற்க, அதே காலப்பகுதியில் 'செங்கதிர்', 'செரந்தீபம்', 'மணியோசை', 'தரிசனம்', 'மக்கள்குரல்' போன்ற பத்திரிகைகள் வெளிவந்ததுடன் அவையும் நின்றுபோயின.

1995ஆம் ஆண்டு செப்ரெம்பரில் எம். பி. கோணேஸ் அவர்களை நிர்வாகியாகக் கொண்டு 'உலகம்' பத்திரிகை வெளிவந்தது. சிலகாலம் தொடர்ச்சியாக வந்தது. 1996ஆம் ஆண்டு மே 3 ந் திகதி முதல் 'உதயன்' பத்திரிகை ஆர். என். லோகேந்திரலிங்கதை ஆசிரியராக கொண்டு வாராந்த பத்திரிகையாக இலவசமாக வெளிவரத் தொடங்கியது. 1996 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 18ஆந் திகதி முதல் 'முழக்கம்' பத்திரிகை இலவசமாக வெளிவரத்தொடங்கியது.

வாசனின் 'மெரினா', கே. ரி. சண்முகராஜாவின் 'வாசகன்', மற்றும் 'முரசொலி', 'வெற்றி முரசு', புதினம், 'சிந்தாமணி', 'தென்றல்' போன்ற பத்திரிகைகளும் வெளிவந்தன. இவற்றில் சில குறுகிய காலங்களுடனும் பல ஆறு மாதங்களுடனும் மேலும் சில ஓரிரு இதழ்களுடனும் காலத்துடனும் கைகோர்த்துச் செல்லமுடியாமல் நிறுத்தப்பட்டு விட்டன.

றிப்ளக்ஸ் இன் மிசிசாக நிறுவனத்தில் 'விளம்பரம்' அச்சடிக்கப்பட்டதுடன் 1992 ஏப்ரல் 15 ஆந் திகதி வெளிவந்த இதழ் பல வண்ணங்களுடன் வெளிவந்தது. இதுவே தமிழில் பல வண்ணங்களுடன் கனடாவில் வெளிவந்த முதலாவது தமிழ் இதழ் என்ற பெயரைப் பெற்றது.

விளம்பரம் ஆரம்பித்த காலத்திலிருந்த மக்களின் தேவைகள் காலத்துடன் மாற்றமடைய விளம்பரம் பத்திரிகையும் தனது உள்ளடக்கத்திலும் மாற்றத்தைக் கொண்டுவந்தது. இதன் விளைவாக 1996 இலிருந்து கட்டுரைகள், தகவல்கள் இணைக்கப்பட்டன. எழுத்தாளர்கள் பலரிடமிருந்து சேர்க்கப்பட்ட கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டன. அக்காலத்தில் பல பத்திரிகைகள் செய்திகளைத் தாங்கி வந்ததால் விளம்பரத்தில் செய்திகள் தவிர்க்கப்பட்டு சமூகத்திற்குத் தேவையான தகவல்கள், கட்டுரைகள், ஆக்கங்களே பிரசுரிக்கப்பட்டது. ஆரம்பத்தில் நான்கு பக்கங்களுடனேயே விளம்பரம் தொடங்கப்பட்டது. இக்காலத்தில் 2000 பிரதிகள் அச்சடிக்கப்பட்டன. 1996ஆம் ஆண்டிலிருந்து பக்கங்கள் அதிகரிக்கப்பட்டு 20 பக்கங்களுடனும், பிரதிகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டு 4000 பிரதிகளுடனும் வெளியிடப்பட்டது. அத்துடன் 1996இல் மக்களை இணைக்கும் பாலம் (We Bridge People) என்ற குறியீட்டை மாற்றி 'விளம்பரம்' ஒரு சமூக முன்னேற்றப் பத்திரிகையாக அடையாள மாற்றமும் செய்யப்பட்டது. அப்போது 40:60 என்ற விகிதத்தில் பத்திரிகைக்கு விளம்பரமும் தகவல்களுடன் சேர்ந்த கட்டுரைகளும் சேர்க்கப்பட்டது.

ஆரம்பத்தில் றிப்ளக்ஸ் நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்டு அச்சடிக்கப்பட்ட விளம்பரம் பின்பு எம்மால் வடிவமைக்கப்பட்டு KT Printing இனால் அச்சடிக்கப்பட்டது. மேலும் எமது பத்திரிகை தனியொரு டிஜிற்றல் கோப்பாக குறுந்தட்டில் (CD) பதியப்பட்டு அச்சகத்திற்கு கொடுக்கப்பட்டது. அதிலிருந்து அச்சகம் பத்திரிகையை அச்சடித்தது. அதன் அடுத்தகட்ட வளர்ச்சியாக தற்போது வடிவமைக்கப்படும் பத்திரிகை, எமது கணினியிலிருந்து அச்சகத்தின் கணினிக்கு இணையத்தின் மூலம் கோப்புக்களை பதிவிறக்கம் செய்யும் செயலி மூலமாக அனுப்பப்பட்டு அங்கு அச்சடிக்கப்படுகிறது. இந்த இலத்திரனியல் முறைகள் கனடிய தமிழ் ஊடகங்களில் முதல் தடவையாக பாவிக்கப்பட்டது என்ற பெருமையும் விளம்பரம் பத்திரிகைக்கு உண்டு. விளம்பரம் 2003ஆம் ஆண்டிலிருந்து தமிழரினால் நடத்தப்படும் 'Arrow Web Printers' நிறுவனத்தில் 24 பக்கங்களுடன் 5000 பிரதிகள் அச்சடிக்கப்பட்டு விநியோகிக்கப்படுகின்றது.




**விளம்பரம் ஆரம்பித்த காலத்திலிருந்த மக்களின் தேவைகள் காலத்துடன் மாற்றமடைய விளம்பரம் பத்திரிகையும் தனது உள்ளடக்கத்திலும் மாற்றத்தைக் கொண்டுவந்தது. இதன் விளைவாக 1996 இலிருந்து கட்டுரைகள், தகவல்கள் இணைக்கப்பட்டன. எழுத்தாளர்கள் பலரிடமிருந்து சேர்க்கப்பட்ட கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டன.**

2000ஆம் ஆண்டிலிருந்து 2004ஆம் ஆண்டின் இறுதிவரை மேலும் பல பத்திரிகைகள் எமது தமிழ் சமதாயத்திற்கு ரொறொன்ரோவில் வெளியிடப்பட்டன. இவற்றில் பல வந்து போயின. பல பத்திரிகைகள் வெளிவருகின்ற போதிலும் சிலவற்றை மட்டும் எம்மால் காணக்கூடியதாக இருக்கின்றது. எமக்குத் தெரிந்தவற்றை இங்கே தருகின்றோம். லோகன் கணபதியின் 'ஈழம்' பத்திரிகை 2000ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ஆரம்பித்து பின் நிறுத்தப்பட்டு விட்டது. 2002ஆம் ஆண்டு செப்ரெம்பரில் செல்வா செல்லையாவின் 'சுதந்திரன்' பத்திரிகை வெளிவரத்தொடங்கி வாராந்தியாக இன்றும் வெளிவருகின்றது. 'தமிழ் ரைம்ஸ்', 'மாலை முரசு', 'வெற்றி முரசு', 'தமிழ் குரல்', 'கனகத்தூதன்', 'கல்வி', 'தண்ணீர்', 'ஞானதீபம்', 'கனடா ஈழநாடு' முதலிய பத்திரிகைகளும் வெளிவந்து நின்ற பட்டியலில் இணைந்து கொண்டன.

கடந்த இரண்டு மூன்று வருடங்களில் பல பத்திரிகைகள் புதிதாக வரத்தொடங்கின. அவற்றில் சில இன்னும் வந்து கொண்டு இருக்கின்றன. இவற்றுள் The Srilankan Reporter, The World Mirror, The Ceylon Times, ஆசீர்வாதம், வீடு, வைகறை, தங்கத்தீபம், சுயம்வரம், துளி, தேசியம், தாய்நாடு, Tamil Guardian, The Srilankan Anchorman போன்ற பத்திரிகைகளைக் குறிப்பிடலாம். இவற்றில் சில பத்திரிகைகள் காலாண்டு, மாதாந்தம், வாராந்தமாக வெளிவருகின்றன.

தொகையான பத்திரிகைகள் எமது சமுதாயத்திற்குள் வருவது ஒரு நல்லவிடயமே. ஆனால் அவை தரமாகவும் தொடர்ந்தும் வெளிவந்தால் மிகவும் நல்லது. அனேகமான பத்திரிகைகள் தனிப்பட்டவர்களாலேயே நடத்தப்பட்டு வருகின்றன. இவை கூட்டாகவோ, நிறுவனமாகவோ நடத்தினால் மேலும் ஆரோக்கியமான சமுதாயத்திற்குப் பயன்தரக்கூடிய பத்திரிகைகளைக் கொண்டுவரமுடியும் என்பது எமது நம்பிக்கை. ரொறொன்ரோவில் இதுவரை பத்துவருடத்திற்கு மேலாக தொடர்ந்து ஒரே பெயர் அல்லது ஒரே ஆசிரியர் அல்லது ஒரே நிர்வாகத்தைக் கொண்ட பத்திரிகள் என்று கூறப்போனால் உலகத்தமிழர், ஈழநாடு, விளம்பரம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

மேலும் ஐந்து வருடங்களிற்கு மேலாக தொடர்ந்து வரும் பத்திரிகைகள் என்று தமிழர் செந்தாமரை, நம்நாடு, உதயன், முழக்கம், ஈழமுரசு, கனடா முரசொலி என்பனவற்றை குறிப்பிடலாம்.

எதனையும் இலவசமாகப் பெற்றுக்கொள்ளுவதற்கு மக்கள் விரும்புகிறார்கள். ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை மக்களைத் தவிர மற்றவர்கள் தரத்தைப் பற்றிப் பெரிதாக கவலைப்படுவதில்லை. மலிவாக, இலவசமாகக் கிடைத்தால் போதும் என்ற மனப்பான்மையே அதிகமாகக் காணப்படுகின்றது. இது ஆரோக்கியமானதாக எண்ணத் தோன்றவில்லை. இந்த நிலைமை ஓர் ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்குமா? எமது வியாபார நிறுவனங்கள் தொழிலில் வெற்றிபெறுமா? என்பன கேள்விகளாகவே உள்ளது. விளம்பரதாரர்களை நம்பி இலவசமாக பத்திரிகை நடத்துவதாலே அனேகமான பத்திரிகைகள் தரத்தையும் தார்மீக கொள்கையையும் பேண முடியாது திண்டாடுகின்றன.

மக்களுக்கு செய்திகள், தகவல்கள், விளம்பரங்கள் இலகுவாகச் சென்றடையச் செய்வதற்காகவே பத்திரிகைகள் இலவசமாக வெளியிடப்படுகின்றன. இலவசமாகக் கிடைப்பதால் மக்களிடம் வாசிப்புப் பழக்கம் அதிகரித்து இருக்கின்றதா? உண்மையில்

தொடர்ச்சி 16ம் பக்கம்

விளம்பரத்தின் 15வருட வளர்ச்சிக்கு வாழ்த்துக்கள்

BRAND Niru

சலுகை விலையில் இலவச இணைப்புடன்

# 'நிரு'

## விசேட பொங்கல் பொதி

- தீட்டிய சிவப்புப் பச்சையரிசி
- சிவப்பு அவல்
- சர்க்கரை
- வறுத்த பயிறு
- கஜூ
- முந்திரிகை வற்றல்
- கற்கண்டு
- ஏலக்காய்
- குங்குமம்
- சந்தனம்
- திருநீறு

இவை அனைத்தும் ஓர் அழகிய எவர்சில்வர் பொங்கல் பாத்திரத்தில்




## நத்தார், புதுவருட, பொங்கல் வாழ்த்துக்கள்

முந்துங்கள்!

மிகக்குறைவான எண்ணிக்கையிலேயே இவை விற்பனைக்குள்ளமையால் உங்கள் வர்த்தகர்களிடம் இன்றே கேட்டு வாங்குங்கள்.

**Imported & Marketed By: NIRU ENTERPRISE INC. 76, Howden Road, Scarborough, Ontario, M1R 3E4, Canada Tel: (416) 750 1976 Fax: (416) 750 8779**
**U.K. Marketing Office: NIRU (EUROPE) LTD. Unit 11, Mitcham Industrial Estate, 85, Streatham Road, Mitcham, Surrey, CR4 2AP, U.K. Tel: 44 + 208 640 8228 Fax: 44 + 208 640 8312**

**Free Home Estimate**

**TBZ INTERNATIONAL**

**We Do Installation**

# UP TO 50 -70% OFF




NOW




NOW




NOW




NOW







**ALL TYPE OF HARDWOOD FLOORING INSTALLED**
**OLD FLOORS REFINISHED,**
**ALL WORKMANSHIP GUARANTEED**

| | | | |
|---|---|---|---|
| BAMBOO | $4.49 | CHERRY | $4.49 |
| B. CHERRY Reg. | $7.49 | OAK | $4.69 |
| MAPLE | $4.41 | | |

**FREE ESTIMATE**
**OVER 30 YEARS EXPERIENCE**
**CALL: RAJAH**
**416-903-2010**
**416-267-5270**

# கனடாவில் "விளம்பரம்" பத்திரிகையின் 15 வருட பாதையில்...

13ம் பக்கத் தொடர்ச்சி...

அறிவுப் பசிக்கு வாசிப்பவர்கள் நிச்சயம் விலை கொடுத்தும் வாங்கத் தயாராகத்தான் இருக்கின்றார்கள்.

'விளம்பரம்' தனிப்பட்டவரிடமிருந்து அகற்றப்பட்டு, ஒரு நிறுவனமாக மாற்றப்பட வேண்டும் என்பதே எமது எதிர்காலத்திட்டம் ஆகும். தமிழ் மக்களின் சுவடுகள் கனடாவில் மட்டுமல்லாமல் உலகம் பூராகவும் பதியப்பட வேண்டும். புலம்பெயர்ந்த நாட்டில் இருந்து பிறந்த நாட்டிற்கு சிறந்த கலை, இலக்கிய செய்திகள், அதிநவீன விஞ்ஞானச் செய்திகள், விளையாட்டு செய்திகள், தொழில் நுட்ப, பொறிநுட்ப செய்திகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் வழங்கப்பட வேண்டும் என்பதே எமது கனவு ஆகும்.

புலம்பெயர்ந்த தமிழர்களின் வாழ்வியலில் நமது பங்களிப்பு மக்களின் சமூக, பொருளாதார, பண்பாட்டு வளர்ச்சிக்கு உதவக்கூடிய செய்திகள், கட்டுரைகள், ஆக்கங்கள், சிந்தனைகள் போன்றவற்றை கொடுத்து வருவதாகும். காலத் தேவையுடனான கட்டுரைகள் வெளிவருவதால் வாசகர் இன்றைய தேவையையும், நடைமுறையையும் அவதானித்து செயல்படக்கூடியதாக இருக்கின்றது. உதாரணமாக மோட்கேஜ், வீடு, நிதி சம்பந்தமான கட்டுரைகள், அறிவியல், ஆன்மீகம், ஆரோக்கியம், தரமான செய்தி விமர்சனங்கள், தகவல்கள், அனுபவமிக்கவர்களின் ஆய்வுக் கட்டுரைகள் போன்றவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். இவை எமது மக்களிற்கு தகுந்த முடிவுகளை எடுக்க உதவும். பொருளாதார ரீதியில், அறிவியல் ரீதியில் இவை வளர்ச்சி அடைய உதவும். இது கனடிய தேசிய நீரோட்டத்தில் எமது மக்களிற்கு தகுந்த நிலையை ஏற்படுத்தும். கால ஓட்டத்தில் எமது மக்களின் தகுந்த தனித்தன்மை வெளிப்படுத்தப்படும். இத்தகைய ஒரு ஆரோக்கியமான வளர்ச்சி ஏற்பட ஊடகத்துறையில் இருக்கும் சிலராவது சேர்ந்து ஒரு நிறுவனத்தை உருவாக்கி சிறந்த பொதுநோக்கான சமுதாயக் கடமையுள்ள பத்திரிகை ஒன்றைக் கொண்டுவர எத்தனிக்க வேண்டும். இவ்வாறான பத்திரிகை ஒன்று வெளிவருவதே தமிழ் மக்களின் தனித்தன்மையை வெளிப்படுத்தும். இது எமது சமுதாயத்தின் தனித்தன்மையை வெளிப்படுத்தும் ஒரு கூறு ஆகும்.

ஒரு பத்திரிகையில் வெளிவரும் விளம்பரங்களைக் கொண்டு ஒரு சமுதாயத்தின் வளர்ச்சியை அதன் வரலாற்றை எழுதமுடியும். கனடாவில் பல சமுதாயங்கள் ஏற்கனவே தமது முத்திரையைப் பதித்து விட்டன. எமது தமிழ் சமுதாயம் இப்பொழுதுதான் தமது தடங்களைப் பல்வேறு இடங்களிலும் பதிக்கத் தொடங்கியுள்ளது. குறித்த காலத்தில் பத்திரிகைகளில் வந்து கொண்டு இருக்கும் விளம்பரத்தின் அமைப்பு, கரு மற்றும் எவ்வாறான விளம்பரங்கள் வருகின்றன என்பதனைக் கொண்டு அந்த சமுதாயத்தின் மாற்றத்தை கண்டு கொள்ளலாம். உதாரணமாக மூன்று வருடங்களிற்கு முன்பாக நகைக்கடை, தமிழ்க்கடை போன்றவற்றின் விளம்பரங்கள் அதிகமாகவும் இன்றைய காலத்தில் வீட்டு முகவர்கள், மோட்கேஜ் பிரதிநிதிகள், காப்புறுதி முகவர்கள் போன்றவர்களின் விளம்பரங்கள் அதிகமாகக் காணப்படுவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

எமது பத்திரிகையில் 50 இற்கும் மேற்பட்ட எழுத்தாளர்கள் தமது எழுத்துக்களைப் பதித்துள்ளனர். இவர்களில் 20 வீதமானவர்கள் பெண்கள். எமது ஒவ்வொரு இதழிலும் வரும் ஆக்கங்களை ஆராய்ந்தால் அதில் வரும் ஆக்கங்கள் எமது எழுத்தாளர்களால் குறிப்பிட்ட விடயத்தைப் பற்றி முறையாக ஆராய்ந்து சொந்தமாக எழுதப்படுகிறது என்பதை நீங்கள் அறியலாம். வாசிப்போரின் தேவைகளை கருத்தில் கொண்டு அவர்கள் ஆக்கங்களை தருகிறார்கள். இது எமது 'விளம்பரம்' பத்திரிகையின் தனித்துவம் என்பதை தெரிவிப்பதில் பெருமை கொள்வதுடன் இவ்வாறு ஆக்கங்களை உருவாக்கும் எழுத்தாளர்களிற்கும் விளம்பரத்தின் நன்றியையும் தெரிவிக்கின்றோம்.

நன்றி என்ற சொற்பதத்தினை வெறும் வாயளவில் சொல்ல விரும்பவில்லை. எமது பதினைந்து வருடகாலப்பயணத்தில் எம்முடன் கைகோர்த்து நடையின்று வரும் அனைவரிற்கும் எமது உணர்வுபூர்வமான/ மனமார்ந்த நன்றியையே தெரிவித்துகொள்கின்றோம். எமக்கு சகல வகைகளிலும் உதவி செய்தவர்கள் ஒவ்வொருவராகக் குறிப்பிடுவது என்றால் பட்டியல் ஒன்று தொடர்ந்து செல்லும். இதனால் பொதுவாக நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

ஆக்கங்கள் தந்தவர்கள், விளம்பரம் தந்து உதவி செய்பவர்கள், விநியோகம் செய்பவர்கள், பத்திரிகையை பொதுமக்களிற்கு சென்றடைய உதவும் வியாபார நிறுவனங்கள் மற்றும் தேவையானபோதெல்லாம் அறிவுரை வழங்குபவர்கள், பல விடயங்களிலும் உதவி செய்து வரும் யாவரிற்கும் எமது நன்றி. இதே உதவிகளை எதிர்காலத்திலும் எதிர்பார்க்கின்றோம். மேலே வழங்கிய தொகுப்பில் சில பத்திரிகைகள், சஞ்சிகைகள் தவறுதலாக விடப்பட்டிருக்கக் கூடும். மேலும் சில தரவுகளிலும் தவறுதல் ஏற்பட்டிருந்தால் அவற்றை எமக்கு தெரியப்படுத்தினால் மற்றைய இதழில் சேர்த்து கொள்வதற்கு உதவியாக இருக்கும்.

**ராஜா மகேந்திரன்**
விளம்பரம் பத்திரிகை சார்பில்
email: raja@mahendran.ca

**விளம்பரத்தின் வளர்ச்சியில் 75இற்கு மேற்பட்ட ஆக்கங்களை வழங்கியவர்கள்**

ஜே ஏகாம்பரம், சிவ. ஞானநாயகன், விஜே குலத்துங்கம், எஸ். கணேஷ், என். செல்வசோதி, பரம் ஜி., பரம் மு., சிவ. பஞ்சலிங்கம், சேவியர் மாஸ்டர், ரதன், எஸ். கே. தீசன், எஸ். விமலநாதன் (கனி), கவிஞர் வி. கந்தவனம், நா. க. சிவராமலிங்கம், லலிதா புருடி, பெரி. முத்துராமன்

**விளம்பரத்தின் வளர்ச்சியில் சிறப்பு உதவி, ஆலோசனை, இன்னோரன்ன உதவிகள் புரிபவர்கள்**

ஈழத்துப்பூராடனார், செழியன், டிஜி கருணா, எஸ். விஜயபாலன், கண்ணன், சகானா வீடியோ

**விளம்பரத்தின் வளர்ச்சியில் ஐந்து வருடத்திற்கு மேலாக தொடர்ந்து விளம்பரம் தந்து ஆதரவு வழங்குபவர்கள்**

Niru Enterprises, Gnanams Studio, Air Link Travel Ltd., M. Kasippillai & Sons, Chanrdamouleeshwara Shivalayam, Applemore Automotive, Neelam Silk, NTE Auto Inc. , Safety Truck, Yogas Super Market, Balan Kanapathi, Yoga Sothidam, Ravi Nadarajah, Singapore Communiction, Jeny Auto Sales Inc. , Yarl Window Blinds & Drapery, Jaffna Super Store


# விளம்பரம் பற்றி...



விளம்பரத்தை மாத்திரம் அல்லாமல் அறிவுரை ஆற்றல்களையும் எடுத்துரைத்து பரபரப்பாக்கிய முன்னைய விளம்பரத்திற்கும், உலகிற்கு எடுத்து ஓசை கொட்டிய உலக தமிழோசைக்கும் உட்சேவை நலம் பாராட்டி இந்நத்தார், புதுவருட திருநாளில் வாழ்த்துவதோடு தனது பதினைந்தாவது வயதினை எட்டிநிற்கும் 'விளம்பரம்' மென்மேலும் பல காலம் உங்களது சேவை தொடர, வளர வாழ்த்தி நிற்கின்றேன்.

- ஜே ஏகாம்பரம்

• • •



நாம் அகதிகளாக கனடாவுக்கு வந்த காலத்தில் இருந்து நம்மை வளப்படுத்தபட்ட இன்னல்கள் கொஞ்சநஞ்சமல்ல. அதே வேளையில் தாமும் தம்மையும் வளம்படுத்தி தம்மைச் சார்ந்தவர்களையும் வளம்படுத்தி வாழ்பவர்கள் இருந்ததால் தான் கனடாவில் எமது மொழி, கலை, பண்பாடு இன்னும். உலக நாடுகளில் முத்திரை குத்தப்பட்டுள்ளது.

அதற்கு காரணகர்த்தாக்கள் இன்றுள்ள இளைஞர்கள். காரணம் இன்று 15 - 18 வயதுடையவர்களில் கூடியவர்கள் கனேடிய பிரஜைகள். இவர்கள் யார்? புலம்பெயர்ந்த தமிழர்களின் பிள்ளைகள். இவர்களை வளர்த்தெடுத்தது யார்? இசை, நடன, நாடக, கலைப்பிரிவுகள் இவர்களை வளர்த்து. மேடை, வானொலி, தொலைக்காட்சி பத்திரிகைகள். இவைகள் அவ்வப்போது விழாக்கள் சம்பவங்களை மற்றவர்களுக்கு பரப்பும் பெரிய ஊடகங்கள். அந்தவகையில் விளம்பரம் 15 வருட மைல்கல்லில் கால் வைக்கிறது. குழந்தை ஒன்று விடலையாகிறது. விளம்பரம் பப்ளிகேசன்ஸ் தவறாது 14 வருடமும் மாதம் இருமுறை கதை, கட்டுரை, துணுக்குகள், சினிமா பொது அறிவு, விஞ்ஞானம், உள்ளூர் நிகழ்ச்சி, சினிமா, நாடகம், இசை... தமிழ்க் கலை, பண்பாட்டு வளர்ச்சிக்கு என்ன உதவி தேவையோ ஆடம்பரமின்றி அமைதியாக அடக்கமாக மற்றவர்களின் வளர்ச்சிக்காக, தமிழின் வளர்ச்சிக்காக நினைத்து செய்து வந்த சேவையை பாராட்டத் தேவையில்லை. அதனை நினைத்து பார்த்தால் போதும். அதுவே விளம்பரத்தின் வெற்றி.

தொடர்ந்து விளம்பரம் சேவை செய்யும். வர்த்தகர்கள் உங்கள் விளம்பரங்களையும் தந்து விளம்பரத்தின் சேவையை தொடரச் செய்யுங்கள்.

- கலகலப்பு தீசன்

• • •



'விளம்பரம்' 'விளம்பரம்' கனடா சுயம்தரும் விளக்கம் விளங்க வைக்கும் ஊடகம். விளங்கின் நயம் பெற வைக்கும் ஓடதம். பற்பல தகவல் கணித, விஞ்ஞான தொழில்நுட்பம் இகம் பட விளக்கி ஈழத்தமிழர் சுகம் பெறச் செய்து வளம்பல பெருக்கி வானுயர் செல்வம் கல்வி நிலை பெறத்தானுயர்த்தும் சஞ்சீவி எனபதால் வாழ்த்தும். மேனுயர் சிறப்பு மானிடம் பெறுக.

- சேவியர் மாஸ்டர்

• • •



'விளம்பரம்' பெயரில் தான் 'விளம்பரம்'. ஆனால் தரத்திலோ இது விளம்பரமல்ல.

- பெரி முத்துராமன்

• • •



பதினைந்து வருடங்களுக்கு முன்னர் தனியே விளம்பரத்துக்கெனத் தொடங்கிய 'விளம்பரம்' நிதானமாகவும் படிப்படியாகவும் வளர்ச்சிபெற்று மிக முக்கிய தமிழ்ப்பத்திரிகையாக விளங்குகிறது. இதற்கு நிர்வாகத்தினரின் திறமை அர்ப்பணிப்பு என்பவற்றுடன், சமூகத்தின் தேவை பற்றிய தூரதிருஷ்டியும் ஒரு முக்கிய காரணியாகிறது.

விளம்பரம் ஒரு சாதாரண வாரப்பத்திரிகை அல்ல. நம்மவர்களுக்கு அவசியமான சகலதுறைப் புதினங்கள் தகவல்களைத் தன்னகத்தே கொண்ட ஒரு மஞ்சரி ஆகும்.

போட்டி, பொறாமை, அரசியல் இலாபநோக்கு என்பவை மலிந்துள்ள தமிழ்ப் பத்திரிகைத் துறையில் விளம்பரம் தனது சமநிலை தவறாது பக்கச் சார்பற்று ஆரோக்கியமாக வளர்வது மகிழ்வைத் தருகிறது. நிர்வாகத்தினருக்கு மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

- நா. முருகதாஸ்

• • •

வாசிப்பதற்கு நிறைய விடயங்களைத் தருகின்ற பத்திரிகையாக "விளம்பரம்" பத்திரிகை உள்ளது. வெங்கட் சாமிநாதன், செழியனின் கட்டுரைகளுக்காக இப் பத்திரிகையை பலர் தேடி எடுத்து வாசித்து வருகின்றனர்.

செல்வம் அருளானந்தம்
காலம் ஆசிரியர்

• • •

செய்திப் பத்திரிகைகளை புரட்டுகின்ற போது நிறைய விளம்பரங்களா இருக்கின்றபோது, "விளம்பரம்" என்ற பெயரில் வந்தாலும், ஏராளமான கட்டுரைகளை தாங்கி வருகின்ற ஒரே பத்திரிகை "விளம்பரம்" தான்


திலீப்குமார் - ஸ்காபரோ

• • •

# விளம்பரம் பற்றி...

## காதலுடன் வாழ்த்துகிறேன்!

விளம்பரத்துக்கு
இளமை பூக்கத் தொடங்கிவிட்டது!
அழகு
பிறப்போடு வந்ததெனினும்
வரவர அதன் கவர்ச்சி
பாராதவர்களையும்
திரும்பிப் பார்க்க வைக்கின்றது!



வீரர்கள் காரணமின்றி
வீரங்காட்ட விரும்புவதில்லை
கற்றறிந்த பெரியோரும்
கண்டபடி பேசுவதில்லை
விளம்பரமும்
விளம்பரத்தை விரும்புவதில்லை!

அதன் அடக்கத்துக்கு
அர்ச்சனை செய்கின்றார்
வள்ளுவர் பெருமான்!
அச்சுப் பிழையில்லாத தமிழுக்கு
வாழ்த்துரை வழங்குகின்றார்
சீத்தலைச் சாத்தனார்!
யாரையும் நோகவையாத எழுத்துக்கு
தேரையே வழங்குகின்றான்
பாரி வள்ளல்!

இனி யான் எதற்கு?

பதினைந்து வயது
விதியையே மாற்றத் துடிக்கும்
அதிதீர வயது!

சாதனைகள் படைத்து
சரித்திரங்கள் வரைந்து மேதினியை ஆள
காதலுடன் வாழ்த்துகிறேன்!

- வி. கந்தவனம்




## வாழ்க 'விளம்பரம்'

பதினைந்து அகவை
பொற்புடன்நிறை
அதியற்புத கண்கவர்
அழகுக் கன்னியாய்
மதிநுட்பம் மிளிர் பற்பல பரிணாமங்களுடன்
மாதமிருமுறை மலர் பங்கஜமாய் பரிமளித்து
கல்வி, தொழில், ஹாஸ்யம், மனிதநேயம்
இல்லம், விளையாட்டு, மருத்துவம்,
சிந்தனை, ஆன்மீகம், குறுக்கெழுத்து,
மனநலம் வளர்ச்சி
என எண்ணற்ற துறைகளில் தோய்ந்து
இலவசமாய் திக்விஜயம் புரி நற்பயன்மிகு
விளம்பரமே!

கடந்த தசாப்த காலத்திற்கும் மேலாக
கனடாவில்
பல்வகை ஊடகங்களுள் ஊடுருவி
நிலைநின்று
வானொலி, தொலைக்காட்சி, தமிழ், ஆங்கில
எழுத்து, ஓவியங்கள் மூலம் எம்மவர்
வாழ்க்கைத்தரம் உயர்ந்திட
தொண்டு புரிய முயன்றிடும் எந்தனுக்கு
உந்தன் மூலம் கிடைத்திடும் பெரும்
வரவேற்பு,
ஊக்குவிப்பு, ஆத்ம திருப்திக்கு என்றென்றும்
எனது மனமார்ந்த நன்றி, நன்றி.

- லலிதா புரூடி

• • •



சொல்லுக சொல்லிற்
பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல் -
குறள்

பயனளிக்காத சொற்களை விடுத்து மனத்தில் பதிந்து பயனளிக்கக் கூடிய சொற்களையே கூறவேண்டும் என்ற வள்ளுவரின் கூற்றுக்கமைய கடந்த பதின்நான்கு ஆண்டுகளாக தமிழ் மக்களுக்கு பயனளிக்க கூடிய தகவல்களை மாதமிருமுறை தவறாது தந்து வந்த 'விளம்பரம்' தனது பதினைந்தாவது அகவையில் காலடி எடுத்து வைக்கும் இந்நன்னாளில் தொடர்ந்தும் பல்லாண்டு காலம் தமிழ்ப்பணி செய்து வெளிவரவேண்டும் என வாழ்த்துகிறேன்.

- சிவ. ஞானநாயகன்


• • •



விளம்பரம் வாசகர்களுக்கு புத்தாண்டு வாழ்த்துக்கள். 14 வருட மைல் கல்களை தாண்டி வீறுநடை போடும் விளம்பரம் பத்திரிகைக்கு எனது வாழ்த்துக்கள். கடந்த 6 வருடங்களுக்கு மேலாக தொடர்ந்து இப்பத்திரிகையில் விளையாட்டு செய்திகளை எழுதுகின்றவன் என்ற வகையில் இப்பத்திரிகையை பற்றி சில வார்த்தைகள் சொல்ல கடமைப்பட்டுள்ளேன். முதலாவதாக இப்பத்திரிகைக்கு தொடர்ந்து எழுதுவதற்கு காரணம் இப்பத்திரிகையின் அதிபர் திரு. ராஜா மகேந்திரன் அவர்மேல் வைத்திருக்கும் நன்மரியாதையும், நட்புமேயாகும். இரண்டாவதாக இப்பத்திரிகை ஒரு செய்திப் பத்திரிகை அல்ல, ஒரு சமூக முன்னேற்றத்தை உள்வாங்கிய ஒரு பத்திரிகையாவும் அறிவியல், விளையாட்டு, பொருளாதாரம், சினிமா போன்ற பல துறைகளில் உண்மையான அறிவை வளர்க்கும் நோக்காக கொண்டு நடாத்தப்படும் இலவச பத்திரிகை தமிழ் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். மூன்றாவதாக இப்பத்திரிகைக்கு எழுதி கொடுக்கும் ஒவ்வொரு கட்டுரைக்கும் எழுத்துப் பிழைகள் இன்றி செவ்வன அச்சுப்பதிப்பாகும். மேற்கூறிய காரணங்களால் மேலும் மேலும் இப்பத்திரிகைக்கு எழுத வேண்டும் என்ற ஆவலை தூண்டும் இப்பத்திரிகை நிர்வாகத்திற்கு எனது பாராட்டுகள்!

எஸ். கணேஷ்
விளையாட்டு செய்திகள்

• • •



பதினைந்தாவது ஆண்டில் கால்பரப்பியுள்ள 'விளம்பரம்' பத்திரிகை தனக்கென்ற ஒரு பெரும் வாசகர் கூட்டத்தை மட்டுமல்லாது பெரும் எழுத்தாளர் அணியையும் திரட்டி உள்ளது சிறப்புமிக்கது. இந்த எழுத்தாளர்களிடம் இருந்து இன்னமும் புதிய விசயங்களை வரும் காலங்களில் எதிர்பார்க்கலாம். அத்தோடு விளம்பரம் வார இதழாக வரவேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

அன்புடன்
செழியன்

• • •



ஓர் எழுத்தாளனிற்கு கருத்து சுதந்திரம் முக்கியம். இதுவரை எனது எழுத்துக்களில் அல்லது எனது படைப்புக்களில் ஓர் எழுத்துக்கூட வெட்டப்பட்டதில்லை. கருத்து சுதந்திரத்திற்கு சாவுமணி அடிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் 'விளம்பரம்' எழுத்தாளர்களிற்கு முழுமையான சுதந்திரம் கொடுத்தமை வரவேற்கப்பட வேண்டிய விடயம். விளம்பரம் ஒரு பல்கலைக்கழகம். இதில் பல்வேறு சீரிய கருத்துக்கள் இடம்பெறுகின்றன. மொழியின் செழுமை பல்வேறு உள்வாங்கல் மூலம்தான் சாத்தியமாக்கப்படும். விளம்பரம் இதற்கு ஆற்றும் பங்கிற்கு நாமும் சேர்ந்து கைகோர்ப்போம்.

- ரதன்

• • •



நாலு பக்கத்தில் ஆரம்பித்ததிலிருந்து இன்றுவரை விளம்பரத்தை அவதானித்து வருகின்றேன். விளம்பரம் என்று ஆரம்பித்து பற்பல தகவல்களை தாங்கிவருவது பலவகையான வாசகர்களையும் கவர்ந்திழுக்கக்கூடியதுடன், பலதுறைசார்ந்த கட்டுரைகளை தாங்கிவருவதோடு மட்டுமல்லாது இதன் சிறப்பு என்னவென்றால் குறித்தளவு விளம்பரம் மாத்திரம் அடங்கும் என்ற விதியை வைத்திருப்பது. இலாப நோக்கத்தைக் கருதாது மக்களின் நலனுக்காக வரும் ஒரேயொரு பத்திரிகை என்ற வகையில் இது மென்மேலும் வளர்ச்சி பெற என் வாழ்த்துக்கள்.

- விஜே குலத்துங்கம்

• • •



கனடாவில் பத்து வரையிலான தமிழ் பத்திரிகைகள் பிரசுரிக்கப்படுகின்றன. இவற்றில் ஒன்று இரண்டைத் தவிர ஏனையவை இலவசமாகவே விநியோகிக்கப்படுகின்றன. சில வாரப் பத்திரிகைகளாகவும், சில இருவாரங்களுக்கு ஒருமுறையும், சில மாத மொருமுறையும் வெளியிடப்படுகின்றன. விளம்பரங்களே இவற்றின் உயிர் நாடியாக உள்ளன. விளம்பரங்கள் இல்லாவிட்டால் இவை புற்றீசல் போல மறைந்துவிடும், மடிந்துவிடும். இவை அறிவுக்கு விருந்தா ஆசைக்கு விருந்தா என்ற வினா எழவே செய்கின்றது. ஒவ்வொரு பத்திரிகையும் ஐம்பதிற்கு மேற்பட்ட பக்கங்களைக் கொண்டதாக வெளியிடப்படுகின்றது. இவற்றால் அறிவுத் துறையில் அதிக வளர்ச்சி ஏற்படாவிட்டாலும் அவற்றை பிரசுரிப்பவர்கள் வளர்கிறார்கள், வாழ்கிறார்கள். கலைஞர்களை வரவழைத்து விழாக்கள் நடாத்துகிறார்கள். ஆள் வரளனும் என்பது சுயநலம். அறிவு வளரனும் என்பது பொதுநலம். புதினங்களையும் புத்தியை வளர்ப்பதற்கான கட்டுரைகளையும் பிரசுரிப்பதுடன் நன்நெறிகளையும் செந்நெறிகளையும் பிரசுரம் செய்தும் ஒழுக்க சீலமான வாழ்விற்கு வழிகோலுவதும் பத்திரிகைகளின் கட்டாய கடமையாக இருக்க வேண்டும். ஆசிரிய பீடம் பத்திரிகையின் தரத்திற்கும் தகைமைக்கும் அடித்தளமாக அமைகின்றது என்பது மறுப்பதற்கில்லை. இவற்றிற்கு உதாரணமாக விளங்குவது விளம்பரம் பத்திரிகை ஒன்றேயாகும்.

'விளம்பரம்' என்று இப்பத்திரிகை பெயர் கொண்டிருந்தாலும் மற்றைய பத்திரிகைகளுடன் ஒப்பிடும்போது அதிக அளவில் விளம்பரங்கள் இதில் இடம் பெறுவதில்லை. மாறாக பல்வேறு தலைப்புகளில் அறிவுச் செறிவான கட்டுரைகள் இதில் பிரசுரமாகின்றன என்பது விசேடமாகக் குறிப்பிடப்பட வேண்டியதாகும். இருவாரங்களுக்கு ஒருமுறை அதன் வரவை ஆவலுடன் காத்திருக்கும் விசாலமான வட்டமே இதற்கு தக்க சான்றாகும். சில பத்திரிகைகளை வாசித்தவுடன் வீசி எறிந்துவிடுகின்றோம். ஆனால் சிலவற்றை பேணிக் காக்கின்றோம். அவற்றுள் விளம்பரம் முதலிடம் பெறுகின்றது என்றால் மிகையில்லை. அறிவியல், ஆன்மீகம், கணக்கியல், கல்வி, உளவியல், உடல்நலம் மருத்துவம், மனை இயல், வணிகம் சினிமா, சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கும் நகைச்சுவை, உலகின் அண்மைய நிகழ்வுகள் என்றும் பல தலைப்புகளில் அறிவு பூர்வமான ஆதாரபூர்வமான கட்டுரை அது தாங்கி வருவதே அதன் நிலைப்பிற்கும் நீடித்த வெளியீட்டிற்கும் காரணமாகும். வேலைப்பழுவினால் வேதனைப்படுவோர் விரும்பிப் படிப்பது 'விளம்பரம்' ஒன்றே என்பது அதன் விழுமியத்தை விளங்க வைக்கின்றது.

ஆண்டு பத்தையும் நான்கையும் தாண்டி பதினைந்தாம் ஆண்டில் அதாவது குமரப் பருவத்தில் கால் பதிக்கும் 'விளம்பரம்' தொடர்ந்தும் வீறு நடை போடுதற்கு எமது அன்பும் ஆசியும் உரித்தாகுக.

'பத்திரிகை தர்மம்' பேணப்படும் போது பத்திரிகை பலரது பாராட்டிற்கும் உரியதாகும் என்பதில் ஐயமில்லை.

- நா. க. சிவராமலிங்கம்.

• • •



கனடிய மண்ணில், வான் அலைகளில் தமிழ் வானொலி சேவையில் ஒரு புதிய சகாப்தத்தை ஆரம்பிக்க அடி எடுத்துக்கொடுத்த "தேமதுரம் வானொலி" 1991ஆம் ஆண்டு யூலை 5ஆம் திகதி வான் அலைகளில் தவழ்வதற்கு ஆதரவு கொடுத்து உதவிய "விளம்பரம்" பத்திரிகை ஓர் உண்மையான சமூக முன்னேற்றப்பத்திரிகையாக உழைத்து 15வது வருடத்தில் காலடி வைப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

தேமதுரம் வானொலி நிகழ்ச்சியை தயாரிக்க உதவியதிலும், பின்பு 2000ஆம் ஆண்டு முதல் ஒரு 'சாதாரண மனிதனின் சிந்தனையில்' என்ற பகுதியை எழுதுவதற்கு ஊக்கம் கொடுத்து தொடர்ந்து சந்தர்ப்பம் தந்துவரும் ராஜா மகேந்திரன், சத்தியா மகேந்திரன் அவர்களுக்கு மனப்பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்வதுடன், இந்த அரும்பணியை பலகாலம் தொடர்ந்தும் நடாத்த அவர்களுக்கு சகல செல்வங்களையும் கொடுக்க வேண்டும் என்று இறைவனை வேண்டிக் கொள்கிறேன்.

பரம். ஜி ஞானேஸ்வரன்
என்றும் ஒரு சாதாரண மனிதன்.

• • •



## "விளம்பரம்" அது ஓர் அறிவுலகம்

வீட்டிற்கு வீடு மூலைக்குமூலை உறங்கிக் கொண்டிருப்பவர்களைத் தட்டி எழுப்பி அவர்களுக்கு மூளையிலிருந்து வெளிப்படும் அறிவை, ஆற்றலை, கருத்தின் புதுமையை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்த பெருமை விளம்பரத்துக்குத்தான் சேரும். பலவித நிகழ்வுகளை அனைவரும் புரிந்துகொள்ளக் கூடிய எழுத்து நடையில் அச்சிட்டு வெளியிடும் "விளம்பரம்" பத்திரிகைக்கு இணையாக ஒரு தமிழ் பத்திரிகை வட அமெரிக்காவில் வெளிவருவதில்லையென்று வாதிட்டுக் கூறமுடியும்.

நன்றி
- ந. செல்வசோதி

• • •



பெரும் அலையை நில்லென்று
சொன்னோமா - நாம்
பெருங்காற்றை வீசாதே என்றோமா -
நாம்
நிலமே நீ துள்ளாதே என்றோமா -
நாம்
குளிர் நீரே பொங்காதே என்றோமா
நாம்

நடுக்கடலில் நீயெழுந்து
மடிந்தாலென்ன?
வெற்று வெளிதனில் உன்வேகம்
சென்றாலென்ன?
ஆளில்லா வெறுவனத்தில் துள்ளி நீ
குதித்தாலென்ன?
வரண்ட பெருநிலம் தனில்
வெகுண்டெழுந்தாலென்ன?

பாலகனை, பாமரனை, சிறு
வயிற்றில் பெருங்கருவைத்
தாங்கினாளை
பலருயிரைக் குடித்து விட்ட
அலையம்மாவே
இன்று அப்பாவிகளின் உயிர் குடித்த
சுழல்காற்றாரே
நீரின்றி பலரை நீ சாகவைத்து
போதாமல் பொங்கி பலர் உயிர்
கொண்டீரே!

நீரின்றி நாமில்லை, நிலமின்றி
வாழ்வில்லை
காற்றின்றி மூச்சில்லை,
முடிவுமில்லை.
வாழவைத்து உயிர்பறிக்கும்
இயற்கையாரே
உதவி செய்யாமல் விட்டுவிடும் உயிர்
பறித்திடாதீர்.

- கலகலப்பு தீசன்

# கடன்வாங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு சிறிய அறிவுரை

## Student Loans

சில மாணவர்கள் மேல் படிப்பிற்கு போகும்போது அரசிடம் கடன் வாங்கி படிப்பது என்பது ஆச்சரியமான விடயம் அல்ல. ஆனால் ஆச்சரியத்திற்கு உள்ளாகக் கூடிய விடயம் என்னவென்றால் மாணவர்களாக இருக்கும் போது அவர்களுடைய கடன் கொடுக்கும் வாங்கும் நடத்தை அவர்களின் பிற்காலத்தில் அளவு கோல நிற்கிறது. (Credit Bureau)

விரிவாக குறிப்பிடின் என்னவெனில், சில மாணவர்கள் படிப்பதற்கு என்று பணத்தை எடுத்து விட்டு பின்பு படிப்பையும் இடையில் நிறுத்தி பணத்தையும் அநாவசியமாக செலவழித்து முக்கியமாக வாகனங்களை வாங்கி பின்பு எடுத்த கடனை கட்ட வேண்டிய நேரம் வரும்போது அதை புறக்கணித்து விட்டு திரிதலாகும்.

மாணவர்களாக இருக்கும் போது இத்தவறு ஒரு பெரிய பாரதூரமான தவறாக இருக்க மாட்டாது. ஆனால் அவர்கள் வளர்ந்து ஒரு தொழில் தொடங்கும்போதோ அல்லது அவர்கள் மேலும் கடன் வாங்க நுழையும் போது தாங்கள் மாணவர்களாக இருக்கும் போது விட்ட தவறுகளை உணர நேரிடுகிறது.

அதாவது அவர்களின் Credit Bureau பழுதாகிப் (Bad) போகிறது. அதுமாத்திரம் அல்லாமல் சில வருடங்களிற்கு அந்த Rating உங்கள் Credit Burea இல் தோன்றுகிறது.

அதுமாத்திரம் அல்லாமல் சில மாணவர்கள் எடுக்கும் கடன்களை உரிய நேரத்தில் கொடுப்பனவு செய்யாவிடின் நீங்கள் ஒருநேரத்தில் வேலை பார்த்து Tax Refund எடுக்க நேரிடின் நீங்கள் கட்ட வேண்டிய கடனை அரசாங்கம் எடுத்து விட்டு மிகுதியை தரக்கூடிய சந்தர்ப்பமும் உண்டு.

எனவே மாணவர்களாக இருக்கும் போதே உங்கள் கடன் விடயங்களில் உரிய நேரத்தில் கட்டி (அதாவது உங்கள் Credit Card Loans & line of Credit) உன்னதமான பிற்காலத்திற்கு விதை போடுதல் முக்கியமாகும். இறுதியாக பெற்றோர் களிற்கு ஓர் அறிவுரை என்னவெனில் உங்கள் மகளிற்கோ அல்லது மகனிற்கோ கல்யாணம் பேசும் போது சீதனத்தை மாத்திரம் கணக்கில் கொள்ளாமல் அவர்களுடைய Credit Bureau எப்படி என்று கேட்பது நீங்கள் உங்கள் பிள்ளைகளிற்கு செய்யக்கூடிய உதவிகளில் ஒன்றாகும். ஏனெனில் பிற்காலத்தில் அவர்கள் ஒன்றாக வீடு வாங்க அல்லது Loan எடுக்க நேரிடின் இந்த Credit Bureau சிறு தடங்கலை கொண்டு வர நேரிடுகிறது. கனடாவில் எதனையும் பழுதாக்கினாலும் திருத்திக் கொள்ளலாம், Credit ஐப் பழுதாக்கினால் பல விடயங்களை நேராக்குவது மிகக் கடினம் என்பதனை எம்மவர் மிகக் கவனத்தில் கொள்வது சிறந்தது.

**Jey Ahamparam**

Bad Credit Costs More
Good Credit Costs less Comparatively


# SRI PARADISE Catering & Take -out

416.269.4509 / 416.509.2454

292 Markham Road, Scarborough, ON

திங்கள் - செவ்வாய் சிங்கப்பூர் நூடில்ஸ் (கோழி மரக்கறிகளுடன்) $2.99

புதன் - வியாழன் கொத்துரொட்டி ஆடு மாடு கோழி $2.99

வெள்ளி மரக்கறிச்சாப்பாடு 5 மரக்கறி, சலாட், பப்படம், ரசம், மிளகாய்ப்பொரியல், அச்சாறு, பாயாசம், வடை $4.50

Daily special மரக்கறிச்சாப்பாடு 3 மரக்கறி சலாட், பப்படம் ரசம், மிளகாய்ப்பொரியல், அச்சாறு $2.99

Dinner Special சிங்கப்பூர் நூடில்ஸ் கோழி மரக்கறிகளுடன் $2.99

சனி - ஞாயிறு Lunch Special வாழையிலைச் சாப்பாடு கோழி, ஆடு, மாடு, இறால், நண்டு, மீன், முட்டை, கருவாடு, அச்சாறு, கட்டைச் சம்பல், மீன் பொரியல், கட்லட், உருளைக் கிழங்கு, நெத்தலி பிரட்டல், கத்தரிக்காய் பிரட்டல் $5.99



பரடைசின் Special புரியாணி, தண்டூரி சிக்கன், இஞ்சிச் சம்பல், salad $2.99

Dinner Special மசாலா தோசை, சாம்பாறு, சம்பல் $1.99

Daily Special பரடைசின் Special புரியாணி சிக்கன்கறி சலாட் முட்டை $2.99

*Sri Paradiase Specials*

- 10LB அவித்த கோதுமை மா - $3.99
- ரொட்டி .50¢
- விசேட வைபவங்களுக்குத் தேவையான 6 வகையான Combo package. 20 பேர் கொண்ட சபைக்கு $99 மட்டுமே.
- மாதத்திற்குரிய சாப்பாடு - 1 நேரச் சாப்பாடு 1 மாதத்திற்கு - $99.00
  2 நேரச் சாப்பாடு 1 மாதத்திற்கு - $150.00

சமையலில் அனுபவம் உள்ளவர்கள் வேலைக்குத் தேவை. தொடர்பு கொள்ளவும்

25 மேல் கொள்வனவு செய்வோருக்கு 10LB அவித்த மா இலவசம்

# SAFETY TRUCKS

## Training School Ltd.

Training & Trucking Classes A, D & Z




In Classes

- 365 (Learning Permit)
- Log Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

- தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
- One On One Training
- அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.
- கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம். (11 ஆம் ஆண்டு)
- We Accept Welfare & Unemployment Insurance
- வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

18 Years Canadian
Experience with Trucks

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

YOGAN SOCKALINGAM

Truck Driving போதனாசிரியர்

905-793-9546 / 416-616-5979

250 Summerlea Road, Brampton, ON



Free Free Free Free Free Free




Free Free Free Free Free Free





S M I L E

- BUSINESS PLANS
- CORPORATE TAX PREPARATION OF FILING
- PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE
- ACCOUNTING, TAXATION
- SYSTEMS - POINT OF SALES

RK CONSULTANTS

**PL. CALL: 905.887.7457 / 905.751.7537**

24 hrs, 365 days



தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்

# ரவி நடராஜா



- வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும், உரிய இழப்பீடுகள், மற்றைய இழப்பீடுகள், விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள் Accident & Traffic Ticket

(14 Years Insurance Claims Experience)

416-245-6555 2095 Weston Road, Suite 203, Toronto, ON

416-755-2801 2390 Eglinton Ave., E. Suite 223, Scarborough. ON



# நியூ சங்கர் அன்கோ



## நத்தார், புதுவருட பண்டிகையை முன்னிட்டு

# விசேட மலிவு விற்பனை

## December 20, 04 தொடக்கம்

## January 20, 05 வரை

பஞ்சாபி, லங்கா சூட் - **$9.99** தொடக்கம்

சாறி பிளவுஸ் - **$1.49** தொடக்கம்



கலர் காப்பு வகைகள் மலிவு விலையில்
Non Stick அப்பச் சட்டி $9.99
சமையல் பாத்திரங்கள்
அன்பளிப்புப் பொருட்கள்
கரம்போட்
சுவாமி படங்கள்
Rice Cooker
Pressure Cooker
Steamer
Roti Maker
Preethi Mixie





**Audio CD - .99¢ தொடக்கம்**

**Audio - .79¢ தொடக்கம்**

416.750.2370

2365 Eglinton Ave., Scarborough, ON

# முகமூடிகள் ஏன்?

## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்



ஓர் இதயத்தின் மைய உணர்வு இழைகளால்தான் ஓர் உறவினது அடிப்படை இழைகள் உருவாகுகின்றன என்பதைப் புரிந்து கொண்டதும், நான் அன்பை அறிந்து கொள்வேன். ஆமாம்! அன்பே இறைவன். நாம் ஒவ்வொருவருங்கூட இறைவன் மறுபதிப்பாம். அன்பின் வடிவமாகத் தான் பிறக்கிறோம். இதனால்தான் பச்சிளங் குழந்தைகளைக் கண்டதும் எமக்குள்ளிருந்து அன்பு பொங்கிப் பீறுகின்றது. ஆனால் வாழ்வுச் சுழற்சியின் தாக்கத்தினால் சில வருடங்களிலேயே, நாம் சூழலிலிருந்து பொறுக்கிய சுயநலம், கோபம், பொறாமை, அகங்காரம் போன்ற எதிர்மறை உணர்வுகளை கையாளப் பழகிக் கொள்கிறோம். எம் உண்மை சொரூபமான அன்பை அறவே மறந்து, போலி முகமூடிகளுடன் வாழ ஆரம்பிக்கின்றோம். இதுதான் வாழ்வில் நாம் செய்யும் மிகப்பெரிய தவறு.

பிரியமானவர்களே! எனது அருமை வாசகர்களாகிய உங்களில் பலர், நான் எழுதும் இத்தொடரைப் பாராட்டித் தொலைபேசியில் என்னை ஊக்குவித்து உற்சாகப்படுத்துவதற்காக எனது உளங்கனிந்த நன்றி. ஆரம்பத்தில் நான் கூறியவாறு ஆங்கிலப் பிரசுரங்களிலிருந்து பொறுக்கியெடுத்து, எனது அநுபவ முலாம் பூசி உங்கள் முன் இப் பிரார்த்தனைகளைச் சமர்ப்பிக்கின்றேன். எனக்கு இந்தத் தொண்டைப் புரிய சந்தர்ப்பமளித்த இறைவனுக்கு முதற்கண் நன்றி கூறி அப்பேரருளைப் போற்றுகின்றேன். ITR அதிபர் M.P கோணேஷ், விளம்பர ஆசிரியர் குழுவுடன் வாசகர்களாகிய உங்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகள். உங்கள் ஊக்குவிப்பு இன்றி இதை என்னால் செய்ய முடியுமா?

இன்ப வாழ்விற்கு அன்பான உறவுகள் அத்தியாவசியம், மகிழ்ச்சி தரும் சிறந்த உறவுகளை உருவாக்கக் கூடிய தன்மை உன்னிடம் உள்ளதா? நீ உறவை உருவாக்க விரும்புகிறாயா என்பதல்ல கேள்வி. உறவொன்று உனக்குத் தேவையாக இருக்கிறதா என்பதுமல்ல, நல்லதோர் உறவை ஏற்படுத்தக்கூடிய எடுத்துக்காட்டான குணநலன்கள் உன்னிடம் இருக்கின்றனவா?

அன்பு நிறைந்த உறவொன்றை உருவாக்கிட இன்னொருவருக்காக உனது இதயத்தைத் திறந்து முற்று முழுதாக அதை அர்ப்பணிக்க உனக்குத் தெரிந்திருக்க வேண்டும். அத்துடன் மற்றவர் தனது இதயத்தைத் திறந்து உனக்கு அர்ப்பணிக்கையில், என்ன செய்ய வேண்டுமென்பதும் உனக்குத் தெரிந்திருக்க வேண்டும். உன் குறை நிறைகள் போன்ற உன்னைப் பற்றிய சகல உண்மைகளையும் நீ புரிந்து ஏற்றுக்கொள்ள வேண்டும். இதில் என்ன பிரச்சினையென்றால் உண்மையாக நீ உள்ளபடியே உன்னை மற்றவர்களும் பார்க்க நீ அநுமதிக்க வேண்டும். ஒருவித அச்சமுமின்றி உனது உண்மையான சொரூபத்தை, உள்ளது உள்ளபடியே மற்றவர்களுக்குக் காட்ட நீ தயங்கக்கூடாது. உனது முகமூடிகள், தற்பாதுகாப்புகள் யாவற்றையும் நீ முற்றாகக் கைவிடவேண்டும். இவற்றையெல்லாம் உன்னால் செய்ய முடியாவிட்டால் நல்ல உறவுகளை உருவாக்க உன்னால் ஒருபோதும் முடியாது என்பதைப் புரிந்து கொள்.

நல்ல உறவை உருவாக்கிட வேண்டும் என்றால் நீ நம்பகத்தன்மை உள்ளவரா யிருப்பாய். மற்றவர்களிடம் நம்பிக்கை உள்ளவராய் இருப்பாய். பிரச்சினைக் கரு மேகங்கள் உன்னைச் சூழும்போது, உனக்குள் இருக்கும் ஒளியின் சுவிட்சை (Switch) எவ்வாறு தட்டுவது என்பது உனக்குத் தெரிந்திருக்கும். அதேபோல உனது வாழ்க்கைத் துணையின் பிரச்சினைத் தீர்விற்கும், அத்தியாவசியமான ஒளியாக நீ செயற்படுவாய். உனது தாரத்தின் பிரச்சினை யைத் தீர்ப்பது உனக்குக் கஷ்டமாயிருக்காது.

மகிழ்ச்சிதரும் உறவுகளை உருவாக்கிட நீ தயங்காது சவால்களை எதிர்கொள்ள வேண்டும். சத்தியமான உனது குரல் குறித்த இலக்கைச் சென்றடையும் என்ற நம்பிக்கை யுடன் நீ செயற்பட வேண்டும். உன் எதிர் பார்ப்புகள், தற்பாதுகாப்புகள் யாவற்றையும் மறந்து, நீ மற்றவர்களை எடை போடுவதையும் முற்றாகக் கைவிட வேண்டும். இதைச் சொல்வது எளிது, செய்வது கடினம் என்பது உளவளத்துறை நல்கும் எனக்கு நன்கு தெரியும். ஆனால் இதற்கும் மேலாகவும் முயன்று நீ ஒன்றையும் எதிர்பார்க்காமல், எடுக்காமல் கொடுக்க வேண்டும். அடுத்தவரை மூடி மறைக்காது, நீ வளர்ச்சியடைய வேண்டும். ஏறி மிதிக்காது முறிந்து உடைந்து விடுவேன் எனும் பயமின்றி நீ வளைந்து கொடுக்க வேண்டும். சந்தேகமின்றி உண்மையை நம்பி புரிந்து கொள்ளவேண்டும். இது எல்லாவற்றையும் விட முக்கியமாக, வாழ்வில் நீ எதை விரும்புகிறாய் என்பதை உணர்ந்து, அதை வாய்விட்டுக் கேட்க வேண்டும். நீ கேட்பது கிடைக்காவிடின் நீ என்ன செய்யப் போகின் றாய் என்பதையும் தெரிந்திருக்க வேண்டும்.

நல்ல உறவை உருவாக்கிட அத்தியாவசியமானவை என்ன என்பதைப் பற்றி இன்றுவரை நீ உணராது இருந்திருக்கலாம். மேற்கூறிய கேள்விகள் யாவற்றையும் இன்று உன்னிடமே நீ கேட்டுக் கொள். நீ விரும்பும் உறவினை உருவாக்கிட நீ ஆயத்தமாயிருக்கிறாயா என்பதைப் புரிந்து உணர்ந்து செயற்பட ஆரம்பி.


*மேலதிக தகவல்களிற்கு*
*அழையுங்கள் 905-624-9617*

**லலிதா புரூடி**





17 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

# யோகாஸ்

## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 159

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | | | 3 |
| | ■ | ■ | | ■ | ■ | 4 | |
| | | | 5 | ■ | | ■ | |
| | ■ | ■ | | ■ | | ■ | |
| ■ | 6 | | | | | ■ | |
| | 7 | ■ | ■ | ■ | 8 | | ■ |
| | ■ | ■ | 9 | | ■ | ■ | |
| 10 | | | 11 | ■ | | | 12 |

**இட - வல**
1. வானில் போக்கு வரத்திற்கு பயன்படுத்தும் சாதனம் ஒன்று
2. மரம்
5. நடமாடு (வல - இட)
6. தலைமுறைத் தொடர்பு
7. முழை (வல-இட)
8. கீறு
9. தலை முடி
10. காரம்
12. உயர்த்து (வல - இட)

**மேல் - கீழ்**
1. மேல் மாடம்
2. யானை
3. கோயில் ஊழியம்
4. மாலை (கீழ் - மேல்)
6. பிரி
8. மதிப்பீடு (கீழ் - மேல்)
10. மகிழ்ச்சி (கீழ் - மேல்)
11. உணவு அருந்து (கீழ் - மேல்)
12. வாய்க்கால் (கீழ் - மேல்)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| வா | ழை | ச் | சே | னை | ■ | ப | கு |
| டி | க | ■ | வ | சி | ய | ம் | ■ |
| க் | ■ | தி | க | ■ | ■ | ப | ■ |
| கை | ம | ர | ம் | ■ | அ | ர | ண் |
| ■ | ■ | வ | ■ | எ | ■ | ம் | ■ |
| ம் | ■ | ம் | ட | ண் | பா | ■ | தி |
| ட | ■ | ■ | ■ | ■ | தி | ற | மை |
| ஓ | ம | ப் | பொ | டி | ■ | ■ | அ |

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக் கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் January 27, 2004க்கு முன்னர் விளம்பரம் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**158இல் வெற்றி பெற்றோர்**
1) B. கௌரி, Markham
2) K. Knaratnam, Scarborough

- ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
- அன்றாட சந்தையில் மரக்கறி, மீன் வகைகளை தினமும் தருவித்துக் கொடுப்பவர்கள்.
- வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!

**(416) 267-0408** 731 - 733 Kennedy Road [Ken-Mark Plaza]



# WAREHOUSE SALE



From
$29.99

**Jambo size & king size blankets, T Shirts, Gloves, Socks**

**மிக குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு.**

தொடர்புகளுக்கு: Deepa / Shawn

**(416) 412.7618**

**40 Nugget Ave.**
**Unit #8**
**Mccowan & Nugget**



# காற்று வாங்கப்போனேன் கதிரை வாங்கி வந்தேன்

Kalu Sudu Mal ( Colourless Flowers)
நிறமற்ற மலர்கள் (சிங்களம்)

Director: Mohamud Mohan Niyaz
Actors: Kamal Addararachchi – Dilip
Dilhani Ekanayake – Nirmala
Linton Semage – Chathura
Yasodha Wimaladharma – Mala
Veena Jayakody – Gauri

## வானரன்


Double "X" என்ற இலக்கை தாக்கும் நோக்குடன் தற்கொலைப்போராளிகளான தீலிப், நிர்மலா ('என்றும் நினைவில் நினைக்கக்கூடிய' என்ற பொருள் சிங களத்தில்) இருவரும் சிங்களப் பகுதிக்கு வருகின்றனர். Double "X" - இஸ்ரேலுக் கும் இலங்கைக்குமான ரகசிய ஒப்பந்தம் (போராளிகளை அழிக்கும் முகமாக).

இவர்களை இயக்கும் பொறுப்பாளாராக கௌரி.

இவர்கள் இருவரும் கணவன் மனைவியாக சிங்கள மத்திய தரவர்க்க தம்பதிகளாக வெளி உலகுக்கு காண்பிக்கின்றனர். நிர்மலா வானொலி திருத்துபவரான சந்துருவுடன் உடல் ரீதியான நட்பை ஏற்படுத்துகிறாா். தாக்குத லுக்கு முன்பு தீலிப் பும் நிர்மலாவும் உறவு கொள்கின்றனர். நிர்மலா கருக்கொள்கிறாா்.

தீலிப்பும் நிர்மலாவும் உயிர் வாழவிரும்பு கின்றனர். சந்துருவை கடத்தி அவனை வெடிகுண்டுடாக மாற்றி இவர்கள் இருவரும் தப்பிக் கொள்கின்ற னர். கௌரி, இவர்களை தொடர்ந்து வருகின்றாா். முடிவில் கௌரியால் தீலிப் சுட்டுக்கொல்லப்படுகிறாா். நிர்மலா சயனைட் அருந்தி இறக்கின்றாா்.

தற்கொலை போராளிகள் பற்றி உலக அளவில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படு கின்றன.
இவர்கள் செல்லும் பாதை சரியானதா ?
எவ்வாறு இவர்கள் உருவாக்கப்படு கிறார்கள்?
இதற்கான அடிப்படை தகுதி என்ன?
இவர்களின் உள்மன உணர்வுகள் எவ்வாறானவை?
உயிர் வாழ்தலின் எதிர்வினை இறப்பா?
அப்படியாயின் இவர்கள் எங்கு உயிர் வாழ்கிறார்கள்?
இவர்கள் வருங்கால வழிகாட்டி எனில், இவர்களது இறப்பு எவ்வாறான தீர்வை வழங்குகிறது?
இவர்கள் உருவாக்கத்துக்கான காரணத்தை அரசுகள் தீர்த்துக ' கொண்டனவா?
இவர்களை தற்கொலை போராளிகள் என அழைப்பது சரியா? தற்கொலை என்ற பிரயோகம் சரியா?
பெண்கள் பொதுவாகவே சமாதான விரும்பிகள் என்ற கருத்து நிலவுகிறது.
பெண்கள் ஏன் தற்கொலை போராளிகளாக மாறுகிறார்கள்?
தற்கொலை போராளிகள் பற்றி உலகமே தலையை பிய்த்துக் கொண்டிருக்கும் பொழுது... நியாஷ்ம் சந்தோஷ்சிவனும்



காற்று வாங்க போனேன் கதிரை வாங்கி வந்தேன் என்கிறாா்கிறாா்கள்.

இப் படத்தின் முன் பகுதி "Terriost" என்ற சந்தோஷ்சிவனின் படத்தை தழுவியது. இவ்விரு படங்களிலும் 'பெண்' என்ற பாலுக்கு உள்ள இரக்கம் அதிகமாகவே காட்டப்படு கிறது. இப்படத்திலும் சிறுவனின் மேலும் நாய்க்குட்டி மேலும் நிர்மலா காட்டும் இரக்கம் - நிர்மலா கட்டாயப் படுத்தப்படுகின்றாள் என்பதையே இக் காட்சிகளுக்கூடாக இயக்குனர் காட்டமுற்படுகின்றாா்.

இவ்வாறான சம்பவங்கள் நடைபெற்றதாக சரித்திரத்தில் இல்லை. சினிமா என்ற வெகுசனஊடகத்தை உணர்வூரீதியாக மாற்றி விலை பேசுவதே இவர்கள் நோக் கம்.



### இப்படத்தில் வரும் பாலியல் காட்சிகள் தேவையற்றவை.

நிர்மலா உடை மாற்றிக்கொண்டிருக்கும் பொழுது தீலிப் உள்ளே செல்வது....
நிர்மலா - சந்துரு சம்பந்தப்பட்ட காட்சிகள்...
மனித குண்டை நிர்மலா அணியும் காட்சிகள்...
நிர்மலா வீட்டில் அணிந்திருக்கும் மேற்கத்திய உடைகள்...
வெறும் வியாபார நோக்கே.

நிர்மலாவின் உடல் படத்தில் மனித குண்டாக மாற்றி தயாரிப்பாளரின் வங்கி கணக்கை அதி-கரித்துள்ளது. பாத்திரங்கள் எதுவும் யதார்த்தமாக படைக்கப்படவில்லை. காட்சிகள் இதை விட மோசம். சந்துருவை அப்பாவியாக காட்ட இயக்குனர் பகீரத பிரயத்தனம் எடுக்கின்றாா். சயனைட்டைப்பார்த்து இது என்ன என்று கேட்கின்றாா்.?

### மூன்று பெண் பாத்திரங்கள்

நிர்மலா - மனித நேயம் கொண்டவர்
கௌரி - கொள்கை பிடிப்புக்கொண்ட இரும்புப் பெண்மணி.
மாலா - இயக்கத்திலிருந்து வெளியேறியவர். தீலிப்பும் நிர்மலாவும் தப்புவதற்கு உதவி செய்கிறாா்.

மாலாவையும் நிர்மலாவையும் நியாயப் படுத்த முற்படும் இயக்குனர் கௌரியின் இயல்புக்கான காரணங்களை வெளிப் படுத்தவில்லை.

### இப்படம் கூறுவன

1. பெண் போராளிகள் பாலியல் தேவைக் காக ஏங்குபவர்கள் (இப்படத்தில் நிர்மலாவே சந்துருவையும் தீலீப்யையும் நெருங்கிறாா்)
2. அப்பாவி சிங்கள மக்களை இவர்கள் பயன்படுத்துவார்கள்.
3. போராளிகள் பயங்கரமானவர்கள்.
4. விடுதலை போராளிகள் தமது பாலியல் தேவைக்களுக்காக இயக்க கட்டுப் பாட்டையும் மீறுவார்கள்.

இப்படத்தின் சிறப்பம்சம் நிர்மலாவாக நடித்த டில்கானி எக்கனாயக்காவின் சிறந்த நடிப்பு.

மணிரத்தின் வரிசையில்....


இப்படத்தின் பிண்ணனி என்ன?
இப்படத்துக்கு இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் நிதி வழங்கியுள்ளது.

சிங்கள மக்கள் மத்தியிலிலும் தமிழ் மக்கள் மத்தியிலும் புரிந்துணர்வை ஏற்படுத்த வேண்டிய அரசு மாறாக அச்சத்தையும் குழப்பத்தையும் ஏற்படுத்துகிறது.

இனப்பிரச்சினையும் அரசுக்கு ஒரு வியாபாரமே.


பதினைந்தாவது வயதினுள் நுழையும் விளம்பரம்
இன்னும் பல நூற்றாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகிறேன்





உங்களிற்கும் உங்கள் குடும்பத்தினருக்கும்
எனது இதயபூர்வமான புத்தாண்டு, பொங்கல்
நல்வாழ்த்துகளை தெரிவிக்கிறேன்.



Seelann (Siva)Aiyadurai
Sales Representative
HOMELIFE/GTA Realty Inc.
1711McCowan Rd, Suite 206, Toronto, ON M1S-3Y3
Bus:(416)321-6969 Fax:(416)321-6963

"Make Your Life easier"

சீலன் (சிவா)
Sales Representative
Cell: 416-451-0271
Web: www.veedu4u.com
Email:seelan@veedu4u.com



# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

**Answers to Tutorial 160** — **December 15, 04**

**Ans. 1.** Sam's age is 125% of 5/4 of Mary's age. Thus Mary's age is 4/5 or 80% of Sam's age. There fore P=80.

